விலை: 30 பக்கங்கள்: 28

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 33 கதிர் 341 ஐப்பசி 16ஆம் நாள் வெள்ளிக்கிழமை 02 நவம்பர் 2018 வள்ளுவர் ஆண்டு 2049

**வடமாகாண மர நடுகை மாதம்**
*கார்த்திகை - 2018*
"மரங்களை நாட்டுவதற்கான மிகச் சிறந்த காலம் 20 வருடங்களுக்கு முன்னர் இருந்தது. அடுத்த நல்ல நாள் இன்றாகும்."
**-சீனப் பழமொழி**

## கூட்டமைப்பு நாடாளுமன்ற குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம், நவ. 2
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் இன்று மீண்டும் இடம்பெறவுள்ளது. கூட்டமைப்பின் உயர் >> 24

# நாடாளுமன்றம் கூடுவது தொடர்பில் குழப்பம்

## திங்களா? புதனா? மைத்திரி மௌனம்

கொழும்பு, நவம்பர் 2
பல தரப்பு அழுத்தம் - நெருக்குவாரத்தை தொடர்ந்து எதிர்வரும் 16ஆம் திகதிக்கு முன்னர் நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கு இணங்கியுள்ள அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, நாடாளுமன்றம் எப்போது கூடும் என்பது தொடர்பில் நேற்று இரவு வரையில் அறிவிக்கவில்லை. >> 25

## எரிபொருள் விலைக் குறைப்பு; மேலும் சலுகைகள் அறிவிப்பு

### மகிந்த அரசு தடாலடி

கொழும்பு, நவ. 2
புதிதாக தலைமை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள மகிந்த ராஜபக்சவின் அரசால், எரிபொருள் விலை நேற்று >> 24

## நானும் தேர்தலையே எதிர்பார்க்கின்றேன்

### கூறுகிறார் மகிந்த ராஜபக்ச

கொழும்பு, நவ. 2
எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தேர்தலுக்கு நான் தயாராகவே இருக்கின்றேன். தேர்தல் நடத்தப்படுவதையே எதிர்பார்க்கின் >> 25

## நாடாளுமன்றத்தைக் கூட்ட வலியுறுத்திய எம்.பிக்களுடன் சபாநாயகர் இன்று சந்திப்பு

கொழும்பு, நவ. 2
நாடாளுமன்றத்தை கூட்ட வலியுறுத்திய நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் சபாநாயகர் இன்று சந்திப்பை நடத்தவுள்ளார். இன்று காலை இந்தச் சந்திப்பு நடக்கிறது. >> 08

## கோத்தா - ரணில் பேச்சு: மைத்திரி - சஜித் சந்திப்பு

### கட்சித் தாவல்கள் நேற்று இல்லை

கொழும்பு, நவ. 2
முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச, ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணிலுடன் நேற்று அலை >> 25

## பெரும்பான்மையை நிரூபித்தாலும் ரணிலுக்குப் பதவி கிடைக்காது

### மகிந்த அணி திடீர் அறிவிப்பு

கொழும்பு, நவ. 2
நாடாளுமன்றத்தில் ரணில் விக்கிரமசிங்க பெரும்பான்மை பலத்தை நிரூபித்தாலும், அவருக்கு நாங்கள் தலைமை அமைச்சர் பதவியை வழங்கமாட்டோம் என்று >> 25

## ரணிலின் ஆசனம் மகிந்தவின் வசம்!

### சபாநாயகர் அறிவிப்பு

கொழும்பு, நவ. 2
அடுத்த நாடாளுமன்றக் கூட்டத் தொடரின்போது சபையில் தலைமை அமைச்சருக்காக ஒதுக்கப்பட்டுள்ள ஆசனத்தை >> 08

## ரணில் விக்கிரமசிங்க பிரபாகரனுக்கு சமன்!

### இப்படிச் சொல்கிறது பொதுபல சேனா

கொழும்பு, நவ. 2
ரணில் விக்கிரமசிங்க விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனைப் போன்றவர். அவர் பிரபாகரனுக்குச் சமமானவர். >> 25

## பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டியது கட்டாயமல்ல

### அமைச்சர் மகிந்த சமரசிங்க

கொழும்பு, நவ. 2
அரச தலைவர் மைத்திரி பால சிறிசேன நாடாளுமன்றத்தைக் கூட்டினாலும் கூட, புதிய அரசு பெரும்பான்மை பலத்தை >> 24

## சு.க. அதிருப்தி அணிக்கு நேற்று அமைச்சுப் பதவிகள்

கொழும்பு, நவ. 2
சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து ஐக்கிய தேசியக் கட்சிக்கு தாவும் அல்லது நடுநிலைமை வகிக்கும் நிலைப்பாட்டை >> 25

### நாடாளுமன்றத்தில் பதிலடி

## மைத்திரி பதவி துறந்ததும் இடைக்கால அரச தலைவர்

### ஐ.தே.கவின் திட்டம்

>> 25

## ஏட்டிக்கு போட்டி

### மக்களை கொழும்பில் களமிறக்கிறது சு.க.

கொழும்பு, நவ. 2
அரச தலைவர் மைத்திரி பால சிறிசேன மற்றும் தலைமை >> 25

## தமிழர்களின் நோக்கங்களை சிதறடிக்கவே ஒன்றிணைவு

### இசுரு தேவப்பிரிய தெரிவிப்பு

கொழும்பு, நவ. 2
வடக்கு-கிழக்கை இணைத்து, நாட்டை அரசமைப்பு ஊடாகப் பிளவு படுத்த எண்ணிய புலம்பெயர் தமிழர் அமைப்புக்களின் >> 25

## அரசியல் குழப்பத்துக்கு முடிவுகட்ட இந்தியா நேரில் களமிறங்கியது!

கொழும்பு, நவ. 2
இலங்கையில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவா? மகிந்த ராஜபக்சவா? என்ற குழப்ப நிலை பன்னாட்டு ரீதியில் சூடுபிடித்துள்ளதையடுத்து இதற்கு முடிவு கட்டும் வகையில் இந்தியாவும் நேரில் >> 08



## மைத்திரி - மகிந்த கூட்டுக்கு எதிராக களமிறங்கிய மக்கள்

### ஐ.தே.கவைத் தொடர்ந்து ஜே.வி.பியும் பலம் காட்டியது

கொழும்பு, நவ. 2
சதித் திட்டங்களைத் தோற்கடித்து ஜனநாயகத்துக்கான உண்மையான மக்கள் பலத்தை உருவாக்குவோம் என்ற தொனிப்பொருளில் மக்கள் விடுதலை முன்னணியின் ஏற்பாட்டில் கொழும்பு, நுகேகொடவில் நேற்றுக் கூட்டம் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் பல ஆயிரக்கணக்கான மக்கள் பங்குபற்றினர்.
இங்கு கருத்துத் தெரிவித்த கட்சித் >> 25



மைத்திரிக்கு மனப்பாதிப்பு

# கொலைச் சதியில் எனக்கு தொடர்பில்லை

## பொன்சேகா தெரிவிப்பு

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மனதளவில் பாதிக்கப்பட்டுள்ளார். நாடு முழுவதும் சென்று அனைவர் மீதும் அவர் குற்றம் சுமத்தி வருகின்றார். அவர் மீதான கொலைச் சதித் திட்டத்துக்கும் எனக்கும் எதுவித தொடர்பும் இல்லை.
இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தெரிவித்தார்.
அலரிமாளிகையில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது.
மைத்திரி தன் மீதான கொலைச் சதி முயற்சியால் மனதளவில் பாதிக்கப்பட்டுள்ளார். இதிலுள்ள உண்மையை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். கொலைச்சதியில் எனக்குத் தொடர்பில்லை. குற்றப் புலனாய்வு விசாரணையில் எனது பெயர் எங்கேயும் குறிப்பிடப்படவில்லை. ஆனால் நாடு முழுவதும் பொய்க்கதைகளை உலாவ விட்டுள்ளனர். 2015ஆம் ஆண்டு மகிந்தவை சர்வாதிகாரி என்றவர் இப்போது அவருக்குப் பதவி வழங்கியுள்ளார். 2015ஆம் ஆண்டுக்கு முன்னர் காணப்பட்ட நிலைமையை மீண்டும் உருவாக்க முயற்சிக்கப்படுகின்றது.
மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் நாட்டின் 4 பக்கமும் தான் இனிமேல் அரச தலைவர் வேட்பாளராக இருக்கபோட்டியிட போவதுமில்லை அரச தலைவராக இருக்கப் போவதுமில்லை என்று குரல்கொடுத்த மைத்திரி இன்று அனைத்தையும் மறந்து தன்னாதிக்க ஆட்சியை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றார். மக்களின் மனதில் தவறான எண்ணத்தை விதைத்து இனவாதத்தை ஏற்படுத்தும் வகையிலான புதிய கருத்துக்களை கூறிவருகின்றார் என்றார். (5,61)

# திருடரை வெளியே விட்டதே இந்த நிலைக்குக் காரணம்

## மரிக்கார் எம்.பி. ஆவேசம்

**கொழும்பு, நவ.2**
**சிறப்பு ஆணைக்குழுக்களை நியமிப்பதில் தாமதங்களை ஏற்படுத்தித் திருடர்களைப் பிடிக்காது விட்டு அவர்களை ராஜாவாக இடம் கொடுத்தமையும், நீதியை நிலைநாட்டத் தாமதங்களை ஏற்படுத்தியமையுமே நாட்டில் இன்று ஏற்பட்டிருக்கும் மாற்றத்துக்குக் காரணம்.**

இவ்வாறு தெரிவித்துள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார்.
அலரிமாளிகையில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்தாவது
பலாத்காரமாக நாட்டில் ஆட்சியை நடத்த முடியாது. நாடாளுமன்றில் பெரும்பான்மையை நிரூபிக்க முடியாது விட்டால் பெரும்பான்மை இருக்கும் கட்சிக்கு ஆட்சியமைக்க அழைப்பு விடுக்க வேண்டும். இந்த நிலைப்பாட்டில் இருந்து யாரும் மாற முடியாது. நாங்கள் தனி உலகில் இல்லை. பன்னாடுகளுடன் தொடர்புபட்டுள்ளோம். சட்டதிட்டங்களை மீறித் தான்தோன்றித் தனமாகச் செயற்பட முடியாது.
நாடாளுமன்ற விவகாரம் தொடர்பில் 19ஆம் திருத்தத்தின் ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழி பெயர்ப்புக்களை நாம் நன்றாக ஆராய்ந்துவிட்டோம். அவை இரண்டிலும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் விடயம், நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நிலைமைகளின்போது புதிய தேர்தலுக்குச் செல்ல வேண்டியதில்லை. பெரும்பான்மையை நிரூபித்த கட்சிக்கு பதவியை விட்டுக் கொடுக்க வேண்டும்.
நாடாளுமன்றில் பெரும்பான்மையை நிரூபிப்பதற்கு 113 ஐயும் தாண்டி 120க்கும் மேற்பட்ட ஆசனங்கள் எம்மிடம் உள்ளன. எதிர்வரும் 5ஆம் திகதி நாடாளுமன்றம் கூடியதும் ஐக்கிய தேசியக் கட்சி தனது பெரும்பான்மையை நிரூபிப்பது தொடர்பில் கட்சிக் கூட்டத்தில் முடிவெடுத்துள்ளோம். கடந்த காலங்களைப் போன்றல்லாது மக்கள் தற்போது அரசியல் விழிப்புணர்வோடு இருக்கின்றனர். அவர்களை ஏமாற்ற முடியாது.
ஐக்கிய தேசியக்கட்சியில் இருந்து கட்சி தாவியவர்களை மீண்டும் சேர்ப்பதா?, இல்லையா? என்பது தொடர்பாக நான் எதுவும் கூற முடியாது. எனினும் எனது தனிப்பட்ட கருத்தின்படி அவர்களைக் கட்சிக்குள் ஒருபோதும் சேர்க்கக் கூடாது - என்றார். (ற)



# ஜனநாயகத்தை உறுதி செய்ய நாம் ஒன்றுபட்டு உதவமுடியும்

## புதிதாகப் பதவியேற்ற அமெ. தூதுவர் தெரிவிப்பு

கொழும்பு, நவ.2
ஜனநாயகத்தின் ஊடாக மக்களை வலுப்படுத்தும், மனித உரிமைகள் அனைவருக்கும் உறுதிப்படுத்தப்படும் எதிர்காலமொன்றை உறுதிப்படுத்துவதற்கு நாம் ஒன்றுபட்டு உதவ முடியும்.
இவ்வாறு இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராக புதிதாக பொறுப்பேற்றுள்ள அலெய்னா பி. டெப்லிட்ஸ் தெரிவித்தார்.
இலங்கைக்கான தூதுவராக நியமிக்கப்பட்ட டெப்லிட்ஸ் நேற்று நற்சான்றுப்பத்திரத்தை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் கையளித்தார். அரச தலைவர் உத்தியோக பூர்வ இல்லத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது. அதன்பின்னர் கருத்துத் தெரிவித்தபோதே டெப்லிட்ஸ் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது
இந்த நாட்டுக்கும், பிராந்தியத்துக்கும் மிக முக்கியமான இந்த தருணத்தில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராக பணியாற்றுவது தொர்டர்பில் நான் பெருமையடைகிறேன்.
இலங்கையின் சமாதானம் மற்றும் சுபீட்சத்துக்கான பயணத்தில் அமெரிக்கா ஏழு தசாப்தங்களாக இலங்கைக்கு ஒத்துழைப்பு நல்கி வருகிறது. சவால்களுக்குத் தீர்வு காண்பதற்கும் பாதுகாப்பானதும் வெற்றிகரமானதுமான இந்து பசுபிக் பிராந்தியமொன்றை உறுப்படுத்துவதற்கு எம் முன்னால் இருக்கும் வாய்ப்புகளை இறுகப் பற்றிக் கொள்வதற்கும் நாம் ஒன்றுபட்டு பணியாற்றுகிறோம் என்ற வகையில் இந்த பயணத்தில் நானும் உங்களுடன் இணைந்துகொள்ள எதிர்பார்க்கிறேன்.
ஜனநாயகத்தின் ஊடாக மக்களை வலுப்படுத்தும் மற்றும் மனித உரிமைகள் மதிக்கப்படுவது அனைவருக்கும் உறுதிப்படுத்தப்படும் எதிர்காலமொன்றை உறுதிப்படுத்த நாம் ஒன்றுபட்டு உதவ முடியும். - என்றார். (ற)

# புதிய தூதுவர்கள் நால்வர் நியமனம்

கொழும்பு, நவ.2
இலங்கைக்கான அமெரிக்காவின் புதிய தூதுவர் உட்பட 4 தூதுவர்கள் நேற்று முற்பகல் தமது நற்சான்றுப் பத்திரங்களை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் கையளித்தனர். இந்த நிகழ்வு அரச தலைவர் மாளிகையில் நடைபெற்றது.
இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராக அலேனா டிப்லிட்ஸ், இலங்கைக்கான ஜப்பானிய தூதுவராக அகிரா சுகியாமா, இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவராக ஷரிக் லவர்டு மற்றும் இலங்கைக்கான ஆப்கானிஸ்தானிய தூதுவராக அஷ்ரப் ஹயிதாரி ஆகியோர் தமது நற்சான்றுப்பத்திரங்களை அரசதலைவரிடம் கையளித்துள்ளனர். (ற)

# கூட்டரசு முறிந்தது மகிழ்ச்சி தருகிறது

## சரத் வீரசேகர தெரிவிப்பு

கொழும்பு, நவ.2
கூட்டரசு உடைந்து புதிய தலைமை அமைச்சர் நியமிக்கப்பட்டமை தொடர்பில் இராணுவத்தில் பணியாற்றியவன் என்ற வகையில் மகிழ்ச்சியடைகின்றேன் என்று தெரிவித்துள்ளார் இராணுவத்தின் உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப்பின் தலைவர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர.
தேசிய ஒருங்கமைப்பு ஒன்றியத்தால் இன்று கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் தெரிவித்தாவது
3 தசாப்தகாலப் போரை முடித்துவைத்த இராணுவத்தினரை பன்னாடுகளிடம் காட்டிக் கொடுத்தனர். அவர்களைச் சிறையில் அடைத்துவிட்டு சிறுபான்மைக் கட்சிகளின் விருப்பப்படி புதிய அரசமைப்பின் ஊடாக நாட்டைப் பிரிக்க முயற்சித்தவர்கள். பதவி நீக்கப்பட்டமை ஒரு சிறந்த முடிவாகும்.
எமது நாடு சுதந்திரமடைந்து சுயாதீனமாகச் செயற்படும் நாடாகும். இலங்கை இன்னமும் பிரித்தானியாவின் காலனித்துவ நாடு என்று கருதிக் கொண்டிருக்கின்றனர். எமது நாட்டுக்குள் ஏற்பட்டுள்ள பிரச்சினையை நாமே தீர்த்துக் கொள்ள வேண்டும் இந்த விடயத்தில் பன்னாட்டுத் தலையீடு இருக்கக் கூடாது. தற்போதைய அயலுறலுத்துறை அமைச்சர் சரத் அனுமுகம இந்த விடயம் தொடர்பில் பன்னாட்டுத் தூதரங்களுக்கு விளக்கமளிக்க வேண்டும் - என்றார். (ற)

# பன்னாடுகளுக்கு கூட்டமைப்பு அழுத்தம் கொடுக்க வேண்டும்

## ஈ.பி.ஆர்.எல்.எவ் கோரிக்கை


யாழ்ப்பாணம், நவ.2
தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைமை என்ற அடிப்படையிலும் எதிர்க்கட்சித் தலைவரென்ற அடிப்படையிலும் கொழும்பிலுள்ள பன்னாட்டு இராஜ தந்திரிகளை ஒன்றாகச் சந்தித்து தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான ஒரு நிரந்தரத் தீர்வை எட்டுவதற்கு பன்னாட்டுச் சமூகம் மத்தியஸ்தம் வகித்தோ அனுசரணை வழங்கியோ ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை சம்பந்தன் உறுதியுடன் முன்வைத்துச் செயற்பட வேண்டும் என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி கோரியுள்ளது.
ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் அரசியல் உயர்பீடம் நேற்று யாழ்ப்பாணத்தில் கூடியது. அதில் விவாதிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக கட்சியின் செயலாளரும் வன்னி நாடாளுமன்ற உறுப்பினருமான ந. சிவசக்தி ஆனந்தன் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டள்ளது.
அதில் உள்ளதாவது:
கூட்டு அரசுக்குள் எந்தவிதமான கலந்துரையாடல்களும் இன்றி திடீரென ஏற்படுத்தப்பட்ட இந்த அரசியல் மாற்றமானது நாட்டின் ஜனநாயகத்தைக் கேள்விக்குள்ளாக்கியுள்ளது. சட்டப்பிரச்சினைகளையும் உருவாக்கியுள்ளது. இலங்கையில் ஏற்பட்டிருக்கக்கூடிய இத்தகைய நெருக்கடி தொடர்பாக பன்னாடுகள் குறிப்பாக அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், இங்கிலாந்து, இந்தியா போன்ற நாடுகள் நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்டி ஜனநாயகத்தை நிலைநாட்டுமாறு இலங்கை அரசை வற்புறுத்தி வருகின்றன.
225 பேரைக் கொண்ட நாடாளுமன்ற அவையில் 113 அங்கத்தவர்களின் ஆதரவை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பெற்றுக்கொள்ள முடியாவிட்டால் பெரும்பான்மையைத் தீர்மானிக்கும் சக்தியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாறும் என்பது யதார்த்தமானது.
இலங்கையினுடைய இன்றைய நெருக்கடி நிலையைத் தீர்ப்பதற்குத் தலையிட்டிருக்கும் பன்னாட்டுச் சமூகம் இந்த நெருக்கடி நிலையிலிருந்து இலங்கை நாட்டை மீட்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற அதே சமயம், தமிழ்மக்களின் நீண்டகாலக் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கும் உத்தரவாதம் வழங்க வேண்டும் என்பதை பன்னாட்டுச் சமூகத்துக்கு எடுத்துச் சொல்ல வேண்டிய காலகட்டம் இது. அதற்கான உத்தரவாதங்களைப் பெற்றுக்கொள்வது அவசியமானதென ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி கருதுகின்றது. எதிர்வரும் 5ஆம் திகதி நாடாளுமன்றம் கூட்டப்படும் என்று தெரியவருகிறது. நாட்டில் நிகழும் மாற்றங்களை எமது கட்சி மிகக் கரிசனையுடன் அவதானித்து வருகின்றது. சரியான தருணத்தில் சரியான முடிவை கட்சி மேற்கொள்ளும். என்றுள்ளது. (ற-21,110,39)

# அரசமைப்பு வரைவை தீயிட்டுக் கொழுத்துக

## கொதிக்கிறார் குணவன்ச தேரர்

கொழும்பு, நவ. 2

**மைத்திரி – ரணில் கூட்டு அரசால் தயாரிக்கப்பட்ட புதிய அரசமைப்பு வரைவை, மைத்திரி மகிந்த அரசு தீயிட்டுக் கொளுத்த வேண்டும் என்று தெரிவித்தார் எல்லே குணவன்ச தேரர்.**



கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார் அவர்.

'அரசமைப்பு வரைவு மற்றும் தேசிய சொத்துக்களின் விற்பனை ஆகியன விக்ரமசிங்க நிர்வாகத்தால் செய்யப்பட்ட மிகப்பெரிய குற்றங்களாகும். மேற்கத்திய நாடுகளின் உத்தரவுக்கமைய எழுதப்பட்ட அந்த அரசமைப்பு நிறைவேற்றப்பட்டால், நாடு பிளவுபடும். வெளிநாட்டுச் சக்திகள் எமது இயற்கை வளங்களை சுரண்டிக் கொள்ள முடியும். இலங்கையில் தமது நிகழ்ச்சி நிரலை இனிச் செயற்படுத்த முடியாது என்று கவலை கொண்டுள்ளது அனைத்துலக சமூகம். குறிப்பாக மேற்குலக நாடுகள் இத்தகைய மனநிலையைக் கொண்டுள்ளன. அவை உள்நாட்டு விவகாரங்களில் தலையீடு செய்ய எத்தனிக்கின்றன.

மேற்கத்திய நாடுகளின் தலையீடுகள் பரந்தளவில் உள்ளன. நாங்கள் அரச தலைவரை, சபாநாயகரைத் தெரிவு செய்தது எமக்காகவா அல்லது அவர்களுக்காகவா என்ற வியப்பு ஏற்பட்டுள்ளது. அமெரிக்கா, பிரித்தானியா, கனடா, ஆஸ்ரேலியா, ஐரோப்பிய ஒன்றியம் போன்ற தரப்புக்கள் ஆட்சி மாற்றத்துக்கு தமது கவலையை வெளியிட்டுள்ளன. இலங்கையில் தமது நிகழ்ச்சி நிரல் முடிவுக்கு வந்துள்ளது என்று அவை கவலை கொள்கின்றன.

வெளிநாடுகள், இலங்கையில் இறைமையை மதிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். உள்நாட்டு விவகாரங்களில் தலையீடு செய்ய வெளிநாடுகளுக்கு இலங்கைத் தலைவர்கள் இடமளிக்கக் கூடாது.

அம்பாந்தோட்டை துறைமுகம் போன்ற விற்கப்பட்ட எமது சொத்துக்களை புதிய அரசு மீளப்பெற நடவடிக்கை எடுக்க வேண்டும்.' என்று அவர் மேலும் தெரிவித்தார். சீனத் தூதுவரே முறைப்படி செயற்பட்டார் என்று அவர் பாராட்டும் தெரிவித்தார்.

(ம)

---

சீனத் தூதுவரைத் தொடர்ந்து

# மகிந்தவை சந்தித்த பாகிஸ்தான் தூதுவர்

கொழும்பு, நவ. 2

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவினால் தலைமை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள மகிந்த ராஜபக்சவையும், சபாநாயகர் கரு ஜெயசூரியவையும் பாகிஸ்தான் தூதுவர் கலாநிதி சாஹிட் அகமட் ஹஸ்மட் நேற்றுச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

முன்னதாகச் சீனத் தூதுவர் செங் ஷியுவான் மகிந்தவைச் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்திருந்த நிலையில் பாகிஸ்தான் தூதுவரும் மகிந்தவைச் சந்தித்துள்ளார்.

அரசமைப்புக்கும், ஜனநாயகத்தை வலுப்படுத்தும் செயல்முறைகளுக்கும் பாகிஸ்தான் ஆதரவளிக்கும் என்றும் தற்போதைய அரசியல் நிலைமைகள், அமைதியான முறையிலும், இலங்கை வாழ்மக்கள் மற்றும் அரசியலமைப்புக்கு அமைய சமாளிக்கப்படும் என்றும் இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர் கலாநிதி சாஹிட் அகமட் ஹஸ்மட் தெரிவித்தார் என்று கொழும்பு ஊடகங்கள் தெரிவித்தன.

பாகிஸ்தானில் அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் இம்ரான் கானின் தெக்ரிக் இ இன்சாப் கட்சி வெற்றி பெற்று ஆளுங்கட்சியாக உருவெடுத்திருந்தது. இதற்கு சீனாவே பெரியளவில் உதவி செய்தது என்றும், இதன் மூலம் ஆசிய வட்டகையில் சீனாவின் நெருங்கிய நட்பு நாடாக சீனாவின் செல்லப் பிள்ளையாக பாகிஸ்தான் உருவெடுத்துள்ளது என்றும் பன்னாட்டு ஊடகங்கள் தொடர்ந்து செய்திகளை வெளியிட்டு வந்தன. இந்த நிலையில் இலங்கைவிவகாரத்திலும் சீனாவின் முடிவை பாகிஸ்தான் பின்பற்ற ஆரம்பித்துள்ளதாகக் கருதப்படுகிறது.

(ம)

---

# நாணய பெறுமதி தொடர்ந்து வீழ்ச்சி

கொழும்பு. நவ.2

அமெரிக்க டொலர் ஒன்றுக்கு நிகரான இலங்கை நாணயப் பெறுமதி தொடர்ந்து வீழ்ச்சியடைந்து வருகின்றது.

நேற்று இலங்கை மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கையின்படி அமெரிக்க டொலர் ஒன்றுக்கு நிகரான இலங்கை நாணய விற்பனைப் பெறுமதி 177.32 ரூபாவாகப் பதிவாகியுள்ளது.

அண்மைக்காலமாக அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி தொடர்ந்து வீழ்ச்சியடைந்து வருகின்றது.

(ற)

---

# மகிந்தவுடன் இணைந்து சம்பந்தன் செயற்படட்டும்

## சு.சுவாமி வலியுறுத்தல்

புதுடெல்லி, நவ. 2

இலங்கையில் உள்ள தமிழ் கட்சிகள் குறிப்பாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மகிந்த ராஜபக்சவுடன் இணைந்து செயற்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் இந்தியாவின் ஆளுங்கட்சியான பா.ஜ.க.வின் மூத்த தலைவர் சுப்பிரமணியன் சுவாமி.

தனது உத்தியோகபூர்வ கீச்சகத்தில் வெளியிட்டுள்ள பதிவிலேயே இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் அவர்.

இருவரும் இணைந்து செயற்பட்டால் மாத்திரமே தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும். தலைமை அமைச்சர் மகிந்தவுடன் இணைந்து செயற்பட முயற்சிக்கும்படி, இலங்கைத் தமிழ் சமூகம் மற்றும் அதன் மரியாதைக்குரிய தலைவர் சம்பந்தனிடம் நான் வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு செயற்பட்டால் தமிழ் மக்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு கிட்டும். இந்த முயற்சிக்கு உதவி தேவைப்பட்டால், அதை நான் மகிழ்ச்சியாக ஏற்றுக்கொள்வேன்' என்று தனது பதிவில் மேலும் குறிப்பிட்டுள்ளார் சுப்பிரமணியன் சுவாமி. இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி தொடர்பில் இந்தியாவுடன் கலந்துரையாடியதன் பின்னரே, தீர்மானம் எடுக்கப்படும் என்று தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ம)

---

# கட்சி தாவுவோரிற்கு பல மில்லியுன்களாம்

*பிரிட்டன் குற்றச்சாட்டு*

கொழும்பு, நவ. 2


ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவான நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்குவதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றன என்று பிரிட்டன் கொன்சவேர்ட்டிவ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹியுகோ சுவையர் தனது கீச்சகத்தில் பதிவிட்டுள்ளார்.

ராஜபக்சதரப்புக்கு ரணில் விக்கிரமசிங்க ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர்கள் செல்வதை ஊக்குவிப்பதற்காக மில்லியன் பவுண்ட்ஸ்கள் வழங்கப்படுவதாக வதந்திகள் வெளியாகின்றன. இலங்கையில் இடம்பெறும் இந்த நடவடிக்கையில் சீனாவின் பங்களிப்பு குறித்துப் பன்னாட்டுச் சமூகம் அச்சமடைய வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

(5)

---

# தலைமை அமைச்சராக மகிந்தவை ஏற்றுக் கொண்டுள்ளாராம் ரணில்



கொழும்பு, நவ. 2

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அரசியலமைப்புக்கு முரணாக செயற்பட்டிருந்தால் ரணில் விக்கிரமசிங்க உயர் நீதிமன்றத்துக்குச் சென்றிருப்பார். ஆனால் இதுவரை அவர் நீதிமன்ற நடவடிக்கைக்கு செல்லாமல் இருப்பதன் மூலம் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமை அமைச்சராக மகிந்தவை நியமித்ததை ரணில் ஏற்றுக் கொண்டுள்ளார் என்பதையே வெளிப்படுத்துகிறது என்று தெரிவித்தார் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா.

கொழும்பில் அமைந்துள்ள சுதந்திர ஊடக கேந்திர நிலையத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

'நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவு இல்லாவிட்டாலும் மகிந்த ராஜபக்சவே தலைமை அமைச்சராக இருப்பார். அவரை பதவி துறக்கச்செய்யவேண்டுமானால் அவருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையொன்றை கொண்டு வந்து தோற்கடிக்கவேண்டும். மகிந்த அவ்வாறு தோற்கடிக்கப்பட்டாலும் ரணில் தலைமை அமைச்சராகுவார் என்று சொல்ல முடியாது' என்று டிலான் பெரேரா மேலும் தெரிவித்தார்.

(ம)

---

# மீண்டும் ஆளுநராக வருகிறாரா கப்ரால்?


கொழும்பு, நவ. 2

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் பதவியை மீண்டும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று முன்னாள் ஆளுனர் அஜித் நிவாட் கப்ராலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

---

# ஐ.தே.கவில் இருந்தவாறே அரசுக்கு ஆதரவளிப்பேன்

## வசந்த சேனநாயக்க கூறுகிறார்



கொழும்பு, நவ.2

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்தவாறு அரசுக்குத் தேவையான ஆதரவை வழங்குவேன் என்று தெரிவித்துள்ளார் அமைச்சர் வசந்த சேனநாயக்க.

ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான வசந்த சேனநாயக்க சுதந்திரக் கட்சியின் அரசில் வனஜீவராசிகள் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சராகப் பதவியேற்றுள்ளார். நேற்று அவர் தனது கடமைகளைப் பொறுப்பேற்ற பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:

நான் இன்னமும் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து விலகவில்லை. அமைச்சுப் பதவியைப் பெற்றேன் என்பதற்காக நாடாளுமன்ற உறு ப்பினர் பதவியில் இருந்தே அல்லது கட்சியில் இரு ந்தோ என்னை நீக்க முடியாது. ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து விலகிச் செல்லாது பிறிதொரு அரசில் அமைச்சுப் பதவியைப் பெற்ற முதலாவது நபர் நானல்ல. சபாநாயகர் கரு ஜயசூரியவும் தேசிய தேவைக்காக இவ்வாறு செய்துள்ளார்.

நான் இந்த அரசை அமைக்க இணங்கியமை நாட்டுக்கு நல்ல அரசு தேவை என்பதால்தான். அதனால் தான் இந்த முடிவை எடுத்தேன். ஐக்கிய தேசியக் கட்சி மாற்றமடைய வேண்டும் என்று நம்புகின்றேன்- என்றார்.

(ற)

பன்னாட்டுச் சமூகத்தின்

# அழுத்தங்களை எதிர்கொள்வோம்

## சு.க. திட்டவட்டம்

கொழும்பு, நவ. 2
பன்னாட்டுச் சமூகத்தின் சவால்களையும், அழுத்தங்களையும் எதிர்க்கொள்ள முடியும் என்ற நம்பிக்கையுடனேயே முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவை தலைமை அமைச்சராக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நியமித்துள்ளார் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

கொழும்பு, பொரள்ளையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதேஎஸ்.பி.திஸாநாயக்க மேற்கண்டவாறுகூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது.

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தலைமை அமைச்சராகப்பொறுப்பேற்றதுமுதல்நாட்டின்பொருளாதாரம் வலுவடையும் நிலை உருவாகியுள்ளது. நேற்று (நேற்றுமுன்தினம்) மாத்திரம் பங்குச்சந்தையில் ஒரு பில்லியன் பங்குப்பரிவர்தனை இடம்பெற்றுள்ளது. தொடர்ச்சியாக பங்குச்சந்தை வீழ்ச்சியடைந்து வந்திருந்தநிலையில்மகிந்த ராஜபக்ச பதவியேற்ற பின்னர் வலுவடைய ஆரம்பித்துள்ளது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன எடுத்தது மிகவும்தீர்க்கமானஒருமுடிவாகும். அவர் கடந்த காலத்தில் மகிந்த ராஜபக்சவுடன்தான் கடுமையாக மோதியிருந்தார். அதன்காரணமாகவே மகிந்த அரசை விட்டு வெளியேறிப்பொதுவேட்பாளராக ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவுடன்தேர்தலில்போட்டியிட்டிருந்தார்.

எவர் மூலம் மைத்திரிபால சிறிசேனஅரசதலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருந்தாலும்,அவர்நாட்டுக்குகொடுத்த வாக்குறுதியொன்றுஉள்ளது. நல்லாட்சி,வெளிப்படையான ஆட்சி,ஊழல்மோசடிகள்அற்ற ஆட்சி. வேகமான பொருளாதாரவளர்ச்சியை அடைதல் உட்படப்பல்வேறுவாக்குறுதிகளை நாட்டு மக்களுக்கு வழங்கியிருந்தார்.

ரணில்விக்கிரமசிங்கவுடன் இணைந்து இதில் ஒன்றையக்கூடசெய்யமுடியாவிடின் அவர் என்ன செய்வார்? தேசிய மற்றும் பன்னாட்டு ரீதியில் பல்வேறு சவால்களையும், அழுத்தங்களையும் எதிர்கொள்ள நேரிடும் என்று தெரிந்தும்; நாட்டின் எதிர்காலத்தை சிந்தித்து இந்த தீர்;க்கமான முடிவை அவர் எடுத்திருந்தார்.

**தவிடுபொடியாகும்**

ரணில் விக்கிரமசிங்க தற்போது113என்றபெரும்பான்மையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார். அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாத்தீர்மானம்கொண்டுவரப்பட்டிருந்த தருணத்தில் சிறிலங்கா சுகந்திரக் கட்சியில்ஒருதொகுதியினர் ஆதரவாக வாக்களித்தது போன்று இந்த முறையும் ஆதரவளிப்பார்கள் என்று எதிர்பார்த்துக் காத்திருக்கிறார். இன்று இரவுடன் (நேற்று இரவு) அவரின் அனைத்து எதிர்பார்ப்புகளும்தவிடுபொடியாகிவிடும். சுதந்திரக் கட்சியின் 95 உறுப்பினர்களும் மகிந்தவின் பக்கமே நிற்பார்கள் என்றார். (5,10)

# தற்போதுள்ளது போன்று முன்னர் ஜன்நாயகம் சீரழிக்கப்படவில்லை

## ஆனந்தசங்கரி கூறுகிறார்

யாழ்ப்பாணம், நவ. 2
ஜனநாயகம் நம்நாட்டில் இதுபோன்றுமுன்புஎப்பொழுதும்சீரழிக்கப்பட்வில்லை என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

இதுதொடர்பில்அவர்அனுப்பிய செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டதாவது.

தற்போது ஏற்பட்டுள்ள குழப்பத்தைசம்பந்தப்பட்டவர்கள் பேசித் தீர்த்துக் கொள்ளட்டும். அதற்கு முதல் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பைச்சார்ந்த மூன்றுபிரமுகர்களும்நாடாளுமன்றத்தைவிட்டுவெளியேறி பிரச்சினையை அர்ப்பணிப்புடன் செயற்படக்கூடியவர்களின் கைகளில் விட்டுவிட வேண்டும்.

ஜனநாயக ஆட்சி என்றால் பெரும்பான்மையினரின் ஆட்சி அல்ல. சிறுபான்மையினரின்சம்மதத்துடன்நடப்பதேஜனநாயக ஆட்சி.

2004ஆம் ஆண்டு ஏப்ரல் 2ஆம் திகதி நடந்த நாடாளுமன்றத்தேர்தலில்தான்ஜனநாயகம்முற்றுமுழுதாகத் தடம்புரண்டது. அந்தநேரத்தில் புதிதாகத் தேர்தல் நடத்தப்படவேண்டுமென்று அனைவரும் கிளர்ச்சி செய்திருக்கவேண்டும். ஆனால் உள்ளூர், வெளிநாட்டுக் கண்காணிப்புக் குழுக்கள் மறுவாக்கெடுப்புக்கு விடுமாறு கோரிக்கை விடுத்த போதும்ஏற்றுக்கொள்ளப்படவில்லை.


2004ஆம் ஆண்டு தடம்புரண்ட ஜனநாயகம் இன்றும்பழையநிலைமைக்குத் திரும்பாது புதைந்து கிடப்பது கவலையளிக்கிறது - என்றுள்ளது.

இதுதவிர, மகிந்த ராஜபக்ச தலைமை அமைச்சராகப் பதிவியேற்றதும் அவரிடம் நேரடியாகச்சென்றஆனந்தசங்கரி மகிந்தவுக்கு வாழ்த்துத் தெரிவித்திருந்தார்.

# நாட்டில் அரசியல்வாதிகள் மாறினாலும் கல்விக் கொள்கை மாறவேண்டியதில்லை

## கல்வி, உயர்கல்வி அமைச்சர் விஜயதாஸ தெரிவிப்பு

கொழும்பு,நவ.2
அரசியல் தலையீடுகள் அற்ற கல்விக் கொள்கை நாட்டுக்கு அவசியம். அரசியல் வாதிகள் மாறும் போது நாட்டின் கல்வி கொள்கை மாற வேண்டியது அவசியமில்லை என்று கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சர் கலாநிதி விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.



புதிய அரசின் கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சராக பதவியேற்றுள்ள விஜயதாஸ ராஜபக்ச நேற்றுக் காலை இசுறுபாயவில் அமைந்துள்ள கல்வி அமைச்சில் வைத்து கடமைகளை பொறுபேற்றார்.

கடமைகளைப் பொறுப்பேற்ற பின்னர் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது.

நாம் வகிக்கும் பதவிகளை விடவும் எமக்குள்ள இலக்குகள் மற்றும் அதனை அடைவதற்கான திறமைகளே எமக்கு மிகவும் முக்கியமாகும். தகவல்களை களஞ்சியப்படுத்தி அறிவை வளர்ப்பதற்கு பதிலாக புத்தி சாதுரியத்தை வளர்ப்பதற்கான முறைமையே கல்வி துறையில் கேந்திரமயமாக வேண்டும். உலகின் வளர்ச்சி பெற்ற நாடுகள் தற்போது இந்த முறைமையையே கடைபிடிக்கின்றனர். எமது நாட்டின் கல்வி முறைமையையும் இந்த மாற்றத்துக்கு உட்படுத்த வேண்டும். ஆகவே கொள்கை வகுப்பாளர்கள், கல்வி நிபுணர்கள்,ஆசிரியர்கள்உட்பட அனைத்து தரப்பினரும் இது தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும். கல்வி அமைச்சின் செயலாளர் உட்பட அதிகாரிகளின் உதவி எனக்கு கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது- என்றார். (110)

# மைத்திரி நாடாளுமன்றத்தை உடனடியாக கூட்டவேண்டும்

## உலகின் மூத்தோர் அமைப்பு வலியுறுத்து

கொழும்பு, நவ. 2
இலங்கையில் உருவாகியுள்ள முன்னொருபோதும் இல்லாதநிலை குறித்து கவலை வெளியிட்டுள்ள உலகின் மூத்த அரசியல் தலைவர்களின் 'எல்டெர்ஸ் அமைப்பு' இலங்கை எதிர்கொண்டுள்ள அரசியல் மற்றும்அரசமைப்புநெருக்கடிகளுக்குத்தீர்வை காண்பதற்காக அரசதலைவர் மைத்திரிபால உடனடியாகநாடாளுமன்றத்தைகூட்டுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.

உலகில் மிக மதிக்கப்படும் மூத்த அரசியல் தலைவர்கள், இராஜதந்திரிகள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் இணைந்து உருவாக்கியதே எல்டெர்ஸ் அமைப்பு. தென்னாபிரிக்காவின் முன்னாள் தலைவர் நெல்சன் மண்டேலா இந்த அமைப்பை ஆரம்பித்திருந்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கையின் அரசியல் தலைவர்கள் சட்டத்தை பின்பற்றிச் செயற்படவேண்டும். மனித உரிமைகள், ஜனநாயகக் கொள்கைகளுக்கு முன்னுரிமை வழங்கவேண்டும். இலங்கையில் அரசியல் பதற்றநிலையை அதிகரிக்கும், மேலும்வன்முறைகளை உருவாக்கும் நடவடிக்கைகளைத் தவிர்க்க வேண்டும்.

**அரச தலைவரே அரசமைப்பை மீறினால் அரச நிறுவனங்கள் மீதான நம்பிக்கை இழக்கப்படலாம்**

இலங்கை முன்னொருபோதும் இல்லாத அரசமைப்பு நெருக்கடியை எதிர்கொள்கின்றது. இதற்கு உடனடியாக அமைதியான வழிமுறைகள் மற்றும் சட்டரீதியில் தீர்வைக் காண வேண்டும். இலங்கை பல வருட உள்நாட்டு மோதல்கள், மனித உரிமைகளால் பெருந்துயரத்தை அனுபவித்துள்ளது. இதன் காரணமாக அரசியல் காய்நகர்த்தல்கள் ஆபத்தை சந்திக்க முடியாது. அரச தலைவரே அரசமைப்பை மீறினால் அரச நிறுவனங்கள் மீதான நம்பிக்கை இழக்கப்படலாம் என்று அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது. (5)

இலங்கையில் தற்போது

# குழப்பநிலை ஏற்படக்காரணம் பொறுப்புள்ள அரசியல்வாதிக்ளே

## வடக்கு கிழக்கு மெதடிஸ்த திருஅவை

கொழும்பு,நவ.2
நாட்டில் துன்பமிக்க வன்முறைச்சூழலைப் பொறுப்புள்ளவர்
களாலேயேஏற்படுத்தப்பட்டமை மிகவும் வேதனைக்கும் ஏமாற்றத்துக்குமுடையவிடயம்என்று வடக்கு கிழக்கு மெதடிஸ்த திருஅவை தெரிவித்துள்ளது.

நாட்டில்ஏற்பட்டுள்ளகுழப்பநிலை தொடர்பில்இலங்கைமெதடிஸ்த திருச்சபையின்வடக்கு - கிழக்கு மெதடிஸ்த திருஅவை விடுத்திருக்கும்ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,

இலங்கையில்குறிப்பாகவடக்கு -கிழக்குபிரதேசங்களில்கொடிய அழிவுகளையும் பெரியளவு இழப்புக்களையும் சந்தித்து இந்நேரம் வரை எந்தவித தீர்வினையும் பெற்றுக்கொள்ள முடியாது தங்கள் அடிப்படை உரிமைகளைபெறுவதற்காகஏங்கி நிற்கும் மக்கள் மிகுந்த எதிர்பார்ப்புடன் தற்பொழுது உள்ள அரச தலைவருக்கு வாக்களித்தனர்.

இதுமாத்தரமன்றிதமிழ்மக்களிடம்பலவாக்குறுதிகளைவழங்கி பெரியதொரு நம்பிக்கையை ஏற்படுத்திதமிழ்மக்களின்ஏகோபித்த வாக்குகளால் தேர்தலில் வென்று கூட்டாச்சியை அமைத்து இருளான சர்வாதிகாராட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது என்றும் இப் பிரச்சனைக்குஅரசியல்தீர்வுவழங்குவதாகவும், இறுதிப் போரில் நடைபெற்ற போர்க் குற்ற ங்களுக்கு நீதியை பெற்றுக்கொடுப்பதாகவும் பன்னாட்டுக்கும் ஐக்கிய நாடுகளுக்கும் வாக்குறுதி வழங்கினாலும் கடந்த மூன்று வருடங்களாக இவைகள் வெற்று வாக்குகளாகவே இருக்கின்றன.

இந்நிலையில் எவருடைய சர்வாதிகார ஆட்சியை முடித்து நாட்டின்பேரழிவைமுடித்தேன் என அரசு தலைவர் இதுவரை காலமும்முழக்கமிட்டாரோஅவரையே இந்நாட்டின் அரசமைப்பையும் மீறி ஜனநாயகத்தை கேலிக்கூத்தாக்கி நாட்டின் இரண்டாம் நிலை பதவியில் அமர்த்தியுள்ளார்.

இவ்வாறான ஜனநாயகம் மற்றும் நாட்டின் அரசமைப்பை மீறிச் சட்டவிரோத செயல்பாட்டை தொடர்ந்து நாடாளுமன்றத்தை ஒத்திவைத்தமையானது கிட்டத்திட்ட ஒரு சர்வதி -கார ஆட்சியின் வடிவம் என்பதனை மறைக்க முடியாது.

இதன் மூலம் நாட்டின் அமைதியும் ஜனநாயகமும் ஓர் அச்சுறுத்தலைச் சந்தித்துச் சட்டம், ஒழுங்கு சீர்குலைந்துள்ளது. வன்முறைச்சூழல்தாண்டவமாடத்தொடங்கியுள்ளது. மீண்டும் பொதுமக்கள் பெரியளவுநெருக்கடிக்கும் மரணப் போருக்கும் உள்ளாகி அடுத்த நொடியில் என்ன நடக்கும் என்ற பயத்தில் நிற்கின்றனர்.

எனவே இவ்வாறான சூழலை அகற்றி அமைதியையும் நீதியையும்நிலைநாட்டவேண்டும் என்பது நீதியையும்சமாதானத்தையும்விரும்புகின்றஅனைவரினதும் தலையாய கடமையாகும். என்றுஅந்தஅறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (60)



## கசிப்பு விற்பனை ஒருவர் கைது

யாழ்ப்பாணம்,நவ.2

சட்டவிரோதமாகவீட்டில்வைத்துகசிப்பு, சாராயம்விற்பனை செய்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். குடத்தனை மாளிகைத் திடல் பகுதியில் சாரயம்விற்பனைசெய்வது தொடர்பாக காங்கேசந்துறை சிறப்பு குற்றத்தடுப்பினருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து நேற்றுமுன்தினம் இரவு அப்பகுதியில் உள்ள வீடு ஒன்றில் 21காப்போத்தல் சாராயம் மற்றும் ஐந்து கசிப்பு போத்தல் என்பவற்றை பொலிஸார் மீட்டதுடன் அப்பகுதியை சேர்ந்த 28 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (26)

### தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆதரவாக

# யாழ்ப்பாணத்தில் போராட்டம்

**யாழ்ப்பாணம்,நவ.2**

**உழைக்கும் கரங்களை உதாசீனம் செய்யாதே மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பை வழங்குவது உட்பட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து யாழ்ப்பாணத்தில் நேற்றுவியாழக்கிழமைகவனவீர்ப்பு போராட்டமொன்றுமுன்னெடுக்கப்பட்டது.**



யாழ்ப்பாணம் கைதடியில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை மாணவர்களின் ஏற்பாட்டில் சித்த மருத்துவத் துறைவளாகத்திற்குமுன்பாகமதியம் 12 மணிக்கு இக்கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மலையகத்தோட்டத்தொழிலாளர்கள் ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பை வழங்க வேண்டுமென வலியுறுத்தி தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்தப் போராட்டத்திற்கு வடக்கு-கிழக்கு உட்பட நாட்டின் பல இடங்களிலிருந்து பலரும் ஆதரவைத் தெரிவுத்துள்ளனர்.

இவ்வாறானதொரு நிலையிலேயே சித்தமருத்துவமாணவர்களும்தமது ஆதரவைத் தெரிவித்தும் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தும் போராட்டத்தை நடத்தினர்.

உழைப்புற்கேற்பஊதியத்தைகொடு. உழைக்கும் கரங்களை உதாசீனம் செய்யாதே. ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு தீபாவளிக்கு முன்னதாக வழங்கவேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து பதாகைகளைத் தாங்கியவாறு கோசங்களையும் எழுப்பியிருந்தனர்.

இப் போராட்டத்தில் சித்த மருத்துவத் துறைமற்றும்பல்கலைக்கழகஏனைய துறைகளைச்சேர்ந்தமாணவர்களும் கலந்து கொண்டிருந்தனர். (39)

### மதவாச்சி - தலைமன்னார்

## தொடருந்து சேவை மீண்டும் ஆரம்பம்

மன்னார்,நவ.2


மதவாச்சியிலிருந்து தலைமன்னாருக்கான தொடருந்துசேவை மீண்டும் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தொடருந்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

சீரமைக்கப்பட்ட இந்த தொடருந்து மார்க்கத்தில் நேற்று பரீட்சார்த்தப் போக்குவரத்து முன்னெடுக்கப்பட்ட தாக தொடருந்து பொது முகாமையாளர் டிலான் பெர்ணான்டோ தெரிவித்தார். அதற்கமைய, நேற்று மாலை தொடக்கம் வழமைபோல தொடருந்து சேவை முன்னெடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

மதவாச்சியிலிருந்து தலைமன்னார் வரையான தொடருந்து மார்க்கத்தில் காணப்படும் 3 பாலங்களின் சீரமைப்புப் பணிகள் கடந்த ஒகஸ்ட் மாதம் 17ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

அதேவேளை, நாளொன்றுக்கு கொழும்பிற்கும் தலைமன்னாருக்கும் இடையில் 4 தொடருந்து சேவைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

தொடருந்து மார்க்கம் மூடப்பட்டிருந்த காலப்பகுதியில் மதவாச்சியிலிருந்து தலைமன்னார் வரை இலங்கை போக்குவரத்துச் சபைக்குச்சொந்த மான பேருந்துகளின் சிறப்புச் சேவைகள் முன்னெடுக்கப்பட்டன. (60)






யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் தலைவரும் ஈழ உணர்வாள ருமான மறைந்த செல்லத்துரை புருசோத்தமனின் 10ஆவது ஆண்டுநினைவுநாள்நிகழ்வுநேற்றுபல்கலைக்கழகத்தில்இடம்பெற்றது. நிகழ்வில் அவரது திருவருட் படத்திற்கு மலர் மாலை அணிவித்து ஈகைச்சுடர் ஏற்றி நினைவுகூறப்பட்டது. கடந்த 2008 ஆம் ஆண்டுநவம்பர்மாதம்முதலாம்திகதி இவர் இலங்கைஇராணுவத்தால்படுகொலைசெய்யப்பட்டார். (39)

## நாடாளுமன்றமே தீர்மானிக்கவேண்டும்

### திரும்பத் திரும்ப வலியுறுத்துகிறது அமெரிக்கா

கொழும்பு, நவ. 2

இலங்கை தனது தலைமைத்துவத்தை தீர்மானிப்பதற்கு அரசமைப்பு நடைமுறைகளை பின்பற்ற வேண்டும் என்று அமெரிக்கா மீண்டும் வேண்டுகோள் விடுத்து ள்ளது. அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் பேச்சாளர்களில் ஒருவரான ரொபேர்ட் பலடினோ இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை தனது தலைமைத்துவத்தை தீர்மானிப்பதற்கு அவசியமான அரசமைப்பு நடைமுறைகள் குறித்தே அமெரிக்கா தற்போது கவனம் செலுத்தி வருகின்றது. இதன் காரணமாக மீண்டும் நாங்கள் அரச தலைவர் மைத்திரிபாலவை சபாநாயகருடன் கலந்தாலோசித்து நாடாளுமன்றத்தை உடனடியாக கூட்டுமாறும் மக்களால் ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் தங்கள் அரசுக்கு யார் தலைமை தாங்கவேண்டும் என்பதை தீர்மானிக்கும் தங்கள் கடமையை நிறைவேற்ற அனுமதிக்குமாறும் கேட்டுக்கொள்கின்றோம். தலைமை அமைச்சர் யார் என்பதை தீர்மானிப்பது நாடாளுமன்றமே என்றார் ரொபேர்ட். (5)

## நெருக்கடிப் பின்னணியில் வெளிநாடுகள் இல்லை

### கூறுகிறார் ரணில்

கொழும்பு, நவ. 2

இலங்கையின் தற்போதைய அரசியல் நெருக்கடிகளுக்குப் பின்னால், பன்னாடுகள் இருப்பதாக நம்புவதற்கு எந்த ஆதாரமும் இல்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில், பன்னாட்டுச் செய்தியாளர்களை நேற்றுமுன்தினம் சந்தித்த போதே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, இலங்கையின் அரசியல் நெருக்கடிகளுக்குப் பின்னால் சில பன்னாடுகள் இருப்பதாக கூறப்படும் குற்றச்சாட்டுகள், சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்ட தகவல்களின் ஒரு பகுதி மட்டுமே, என்றார். (5)

### யாழ்ப்பாணக் குடாநாட்டில்

# விவசாயத்துக்கு 50வீத மானியம்

**யாழ்ப்பாணம், நவ.1**

**யாழ்ப்பாண மாவட்டத்தில் விவசாயத்துக்கு 50 சதவீதம் மானியம் வழங்குவதற்குரிய நிதி கிடைத்துள்ளது என்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலக விவசாயப் பிரிவு தெரிவித்தது.**

இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாண மாவட்டத்தில் இந்த வருடத்துக்கான விவசாய நடவடிக்கைகளை 50 வீதம் மானிய அடிப்படையில் மேற்கொள்வதற்கு கொழும்பு விவசாய அமைச்சுநிதி ஒதுக்கியுள்ளது.

விவசாயத்துக்கு தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு 11மில்லியன்ரூபாநிதிஒதுக்கப்பட்டுள்ளது. சூரிய சக்தியில்செயற்படும்நீர்இறைக்கும் இயந்திரம் உட்பட ஏனைய உபகரணங்கள் பலவும் இந்த நிதியில்கொள்வனவுசெய்யப்படவுள்ளன.

4 பரப்பு காணியில் 220 வாழைக் கன்றுகள் வீதம் நடுகை செய்வதற்கு 5 மில்லியன்ரூபாஒதுக்கப்பட்டுள்ளது. 140 பேருக்கு இந்த வாழைக்கன்றுகளுக்கான மானியம் வழங்கப்படவுள்ளது. ஏற்றுமதிசெய்யகூடிய கவண்டிஸ் இன வாழை மரங்ககளைப்பயிர்செய்வதற்குஇந்தமானியம்வழங்கப்படவுள்ளது.

வெங்காயத்தைச் சேமித்துப் பாதுகாத்து வைக்கக் கூடியகொட்டில்கள்அமைப்பதற்கு 32மில்லியன்ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. 150 விவசாயக் கிணறுகளை சீரமைப்பதற்கு 26 மில்லியன் ரூபா, வயல் காணிகளைப் பாதுகாப்பதற்கு 1.5 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. (ம-7)



வடக்கு மாகாண மூத்த பொலிஸ் அத்தியட்சகர் கணேசநாதன் நெல்லியடி, பருத்தித்துறை, அச்சுவேலி ஆகிய பொலிஸ் நிலையங்களுக்கு நேற்று முன்தினம் திடீர் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டார். இதன்போது மேற்படி பொலிஸ் நிலையங்களில் நிலவுகின்ற குறைகளைக் கேட்டறிந்த அவர் அதற்கான தீர்வுகளைப் பெற்றுத்தருவதாக உறுதி அளித்தார். (ம-26)

## முதியோர் மதிப்புறுத்தல்

யாழ்ப்பாணம், நவ. 2

நல்லூர் மூத்த விநாயகர் சனசமூக நிலையம் முதியோர் மதிப்புறுத்தல் நிகழ்வை அண்மையில் நடத்தியது.

நல்லூர் மூத்த விநாயகர் சன சமூகநிலையத்தில்கடந்த28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இந்த மதிப்புறுத்தல் நிகழ்வு நடைபெற்றது. தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களும் இந்த நிகழ்வில் மதிப்புறுத்தப்பட்டனர். (ம)

## இலந்தைக்குளம்வாய்க்காலை சீரமைக்க மக்கள் கோரிக்கை

### உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ். மாநகர பிரதிமுதல்வர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 1

கொழும்புத்துறையினூடாகச் செல்லும் இலந்தைக்குளம்வீதிக்குசமாந்தரமாகச்செல்லும்வாய்க்காலை சீரமைத்துத் தருமாறு அந்தப்பகுதிமக்கள் கோரிக்கையை முன்வைத்தனர். நீண்டகாலமாக அந்த வாய்க்கால் சீரமைக்கப்படவோ துப்புரவாக்கப்படவோ இல்லை என்றும்அவர்கள்குற்றம் சாட்டுகின்றனர்.

கடந்த வருடங்களில் மழைக்காலத்தில்வாய்க்காலில்குப்பைகூளங்கள் நிரம்பி இருந்தமையால் மழை நீர் சீராக வழிந்து ஓடாமல் வாய்க்கலுக்கு மேல்மேவிவீதியைமூடி வீடுகளுக்குள் புகுந்தது. இதனால் அந்தப் பகுதி மக்கள் பெரும் சிரமங்களைஎதிர்கொண்டனர். தற்போது மழைக்காலம் மீண்டும்ஆரம்பித்துள்ளதால்மக்கள்அந்தவாய்க்காலைத் துப்புரவு செய்து தருமாறுகோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

இந்தவிடயம்தொடர்பாக யாழ்ப்பாணம் மாநகர சபையின் பிரதி முதல்வரும்குறித்தவட்டாரத்தின் உறுப்பினருமானஈசனுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது,

குறித்த பகுதியில் குப்பைகளை அகற்ற இரண்டு நாள்களுக்குஒருதடவை நாம்மாநகரசபையின்கழிவகற்றல் வாகனத்தை அனுப்பியுள்ளோம். அத்துடன்அந்தப்பிரதேசத்தில் உள்ளவர்கள் குப்பைகளை கொட்டுவதற்கு எனக் குப்பைத் தொட்டியும்வைக்கப்பட்டுள்ளது. ஆனால் சில விசமிகள் வேண்டுமென்றே குப்பைகளைப் பொது இடங்களில் போடுகின்றனர். அதற்கும் நடவடிக்கை எடுக்க ஆலோசித்து வருகிறோம். குறித்த வாய்க்காலும் விரைவில் சீரமைத்துக் கொடுக்கப்படும் - என்றார். (ம-8)



தெல்லிப்பழை பிரதேச செயலக பன்னாட்டுச் சிறுவர் முதியோர் மற்றும் மாற்றுவலுவுள்ளோர் தின நிகழ்வு அண்மையில் பிரதேச செயலர் எஸ்சிவசிறிதலைமையில்பிரதேசசெயலகமண்டபத்தில்நடைபெற்றது. (ம-9)


## கொழும்புத்துறையில் வெள்ள வாய்க்கால்

யாழ்ப்பாணம், நவ. 2

கொழும்புத்துறை நெடுங்குளம் பிரதேசத்தில் வெள்ளம் தேங்கி நிற்காதவாறு வெள்ள வாய்க்கால்களைச் சீரமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாண மாநகர பிரதி முதல்வர் து.ஈசன் தெரிவித்தார்.

நெடுங்குளத்தில் இருந்து வயல்வெளி ஊடாக கொழும்புத்துறைக் கடற்கரையை நோக்கி வெள்ளத்தைத் தள்ளக்கூடிய வகையில் இந்த வாய்க்கால் அமைக்கப்பட்டு வருகிறது.

தாழ்வான பகுதிகளிலும் இதுபோன்ற வாய்க்கால்கள் அமைக்கப்படும் என்று ஈசன் மேலும் தெரிவித்தார் (ம-17)



## பரிசளிப்புநிகழ்வுகள்

கொடிகாமம் நவ1


**அச்சுவேலி ஆரம்பப் பாடசாலை**

அச்சுவேலி ஆரம்பப் பாடசாலையின் பரிசில்நாள் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு அச்சுவேலி இராஜமாணிக்கம் திருமண மண்டபத்தில் பாடசாலை அதிபர் வே. குணசீலன்தலைமையில்நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வுக்கு தலைமை விருந்தினராக வடக்கு மாகாணகல்விபண்பாட்டலுவல்கள்விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் சி. சத்தியசீலன் கலந்துகொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணக் கல்வி வலய, வலயக்கல்வி நிர்வாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி. மாணிக்கராஜா, யாழ்ப்பாணக் கல்வி வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ப. சசிகுமார் ஆகியோரும், மதிப்புறு விருந்தினராக வலி. கிழக்கு பிரதேச சபை உறுப்பினர் செ. நிக்சனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

**பளை தர்மக்கேணி அ.த.க. பாடசாலை**

பளை தர்மக்கேணி அ.த.க. பாடசாலையின் பரிசில் நாள் நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

அதிபர் வே. செல்வகுமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கிளிநொச்சி கல்வி வலய, கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் பா. வாசுதேவன்கலந்துகொள்ளவுள்ளார். சிறப்புவிருந்தினர்களாக யாழ்ப்பாணம் கிருபா லேணேர்ஸ் உரிமையாளர் அ. கிருபாகரன், பளை பிரதேச செயலக அபிவிருத்தி அலுவலர் ந. பிரேமவாசன் ஆகியோரும் மதிப்புறு விருந்தினராக கிளிநொச்சி கல்வி வலய தகவல் தொழில்நுட்ப பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் க. குமரனும் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-159,9)



## பாரம்பரியபொருள்களின்கண்காட்சி

கொடிகாமம், நவ. 2

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பாரம்பரியப் பொருள்களைக் கொண்ட கண்காட்சியையும் முப்பரிமாண நூலகக் காட்சியையும் சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட கச்சாய் பொது நூலகம் நேற்றுமுன்தினம் காலை 11 மணிக்கு நடத்தியது.

நூலகமண்டபத்தில்சாவகச்சேரிபிரதேச சபைத் தவிசாளர் க. வாமதேவன் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன.

பிரதேச வளமான பாரம்பரிய பனம்பொருள் உற்பத்திப் பொருள்கள் அதன் பண்பாடும்நோய்களைத்தடுக்கும்வழிகளும், பாவனையில் இல்லாத வெளிநாட்டு உள்நாட்டு நாணயங்கள், ஓலைச் சுவடிகள் போன்றவை நிகழ்வில் காட்சிப் படுத்தப்பட்டன. (ம-159,9)

# மறைந்தவர்களை நினைவுகூருவது பாராட்டத்தக்கது

## யாழ்ப்பாண கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் தெரிவித்தார்



யாழ்ப்பாணம், நவ. 2
மறைந்தவர்களை நினைவு கூருவது பாராட்டுக்குரியது என்று தெரிவித்தார் யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஜனாபா.
யாழ்ப்பாணம் வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியின் நிறுவுனர் மறைந்த சு.நடேசு, பொதுமுகாமையாளர் க.சந்திரராசா ஆகியோரது நினைவு தினம் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் முதன்மைவிருந்தினராகக்கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
ஒரு மனிதன் தனது வாழ்வியலில் தனது குடும்பத்துக்கும் தன்னை நம்பியுள்ள சமூகத்துக்கும் தலைமைத்துவத்தின் மூலம் சேவை செய்வாராயின் அவருடைய தலைமைத்துவப் பண்பு என்றும் அழியா நினைவிடமாகின்றது. அதேபோன்றுதான் இன்று நினைவு கூரப்படுகின்றவர்களும் சங்க வளர்ச்சி, அங்கத்தவர்களின் வளர்ச்சி என்பவற்றில் அதீத அக்கறையுடன் செயற்பட்டவர்கள். எனவே நாம் அவர்களை நினைவுகூருவது தவிர்க்க முடியாதது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-63)

# யாழ்ப்பாணக் குடாநாட்டில் கள்ளின் உற்பத்தி பாதிப்பு

யாழ்ப்பாணம், நவ. 2
**யாழ்ப்பாணக் குடாநாட்டில் கள் உற்பத்தி அண்மைக்காலமாக பாதிக்கப்பட்டுள்ளது. தற்போது மழைக் காலம் ஆரம்பித்துள்ளதால் பனை, தென்னை மரங்களில் கள்ளின் ஊற்று குறைவடைந்ததை அடுத்தே கள் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது என்று பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் தலைவர் வ.தெய்வேந்திரம் தெரிவித்தார்.**

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
இந்தப் பருவப்பெயர்ச்சி மழை காலத்தில் கள் உற்பத்தி பாதிப்பை எதிர்கொண்டுள்ளது. எனினும் போத்தல்களில் அடைக்கப்பட்ட கள்ளின் மூலம் வாடிக்கையாளர்களின் தேவை தற்போது நிவர்த்தி செய்யப்பட்டு வருகிறது. போதியளவு போத்தல் கள் பாதுகாப்பான முறையில் அடைத்து வைக்கப்பட்டுள்ளதால் அடுத்த போகம் வரைக்கும் அவற்றிற்கு பற்றாக்குறை ஏற்படவாய்ப்பில்லை. கள் உற்பத்தியில் ஈடுபடும் தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிப்பாகாமல் இருப்பதற்காக ஏற்ற நிவாரணங்களை வழங்கி வைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது - என்றார். (ம-17)



வடக்கு மாகாண சபையின் முன்னாள் அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் இந்த வருடத்துக்கான தனது குறித்தொதுக் கப்பட்ட நிதியொதுக்கீட்டில் யாழ்ப்பாணம் கோப்பாய் வடக்கு றோ.க.த.க. பாடசாலைக்கு அண்மையில் அலுமாரியொன்றை அன்பளிப்புச் செய்தார். (ம)

# நூலக தினமும் சஞ்சிகை வெளியீடும்

யாழ்ப்பாணம், நவ. 2
யாழ்ப்பாணம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் நூலக தினமும் 'ஸ்கந்தம்' சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வும் கல்லூரியின் நூலக மண்டபத்தில் நூலக மன்றத் தலைவர் து.கம்சாயினி தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன.
முதன்மை விருந்தினராக ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலையின் அதிபர் பொ.தயானந்தன் கலந்துகொண்டு நூலை வெளியிட்டு வைக்க வி.என். கல்வி நிலைய இயக்குநர் வி. கஜரூபன் முதற் பிரதியைப் பெற்றுக்கொண்டார். தொடர்ந்து நூலக வாரத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டதுடன் நூல் கண்காட்சி நிகழ்வும் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் அதிபர் மு.செல்வஸ்தான், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் கல்விசார் கல்விசாரா ஊழியர்களும் கலந்துகொண்டனர். (ம)



# 11,500 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் யாழ். குடாநாட்டில் நெற்செய்கை

யாழ்ப்பாணம், நவ. 2
யாழ்ப்பாணக் குடாநாட்டில் இம்முறை காலபோக நெற்செய்கையின் போது சுமார் 11 ஆயிரத்து 500 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் நெல் விதைக்கப்பட்டுள்ளது. குடாநாட்டில் வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சி, தீவு பகுதி ஆகியவற்றிலேயே பெருமளவு நிலப்பர ப்புக்களில் நெல் விதைக்கப்பட்டுள்ளது. இந்தக் காலபோக நெற்செய்கைக்கு ஏற்றவாறு மழை பெய்து கொடுப்பதால் நெற்பயிர்கள் நல்ல நிலையில் காணப்படுவதாக மாவட்ட விவசாயத் திணைக்களம் தெரிவித்தது. அதேநேரம் மழைக்கு ஏற்றவாறு வயல்களில் களைகளின் பெருக்கம் திடீரென அதிகரித்துள்ளதாலும் அவைநெற்பயிர்களைச்சூழ்ந்துமுளைத்திருப்பதாலும் நெற்பயிர்களைப் பாதிக்காத வகையில் களைகளை உடனடியாகக் கட்டுப்படுத்த வேண்டும் என்று செய்கையாளர்களை விவசாயத் திணைக்களம் கேட்டுள்ளது. நெல் வயல்களில் முளைத்திருக்கும் இந்தக் களைகளை செய்கையாளர்கள் பிடுங்கியும் கிருமிநாசினிகளின் மூலமாகவும் அழித்து வருகின்றனர். (ம-17)

## நூல் கண்காட்சி

யாழ்ப்பாணம், நவ. 2
வலி வடக்குப் பிரதேச சபையின் அளவெட்டிப் பொதுநூலகம் நூல் கண்காட்சியொன்றை இன்று நடத்தவுள்ளது.
யாழ்ப்பாணம் அருணாசலம் வித்தியாலயத்தில் இன்று காலை 8.30 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை இந்த நூல் கண்காட்சி நடைபெறவுள்ளது. நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வலிகாமம் வடக்குப் பிரதேச சபையின் தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தன் கலந்து கொள்ளவுள்ளார்.
சிறப்பு விருந்தினர்களாக வலி. வடக்குப் பிரதேச சபையின் செயலாளர் இ.பகீரதன், அருணாசலம் வித்தியாலயத்தின் அதிபர் குமாரவேல் லங்கா பிரதீபன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம)

## சிறுவர், முதியோர் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், நவ. 2
உடுவில் முதியோர் மன்றம் நடத்தும் சிறுவர், முதியோர் தின நிகழ்வுகள் இன்று இடம்பெறவுள்ளன.
உடுவில் மேற்குப் பாலர் பாடசாலை மண்டபத்தில் இன்று பிற்பகல் 3.30 மணியளவில் இந்த நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.
முதன்மைவிருந்தினராக தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளியின் அதிபர் த.வாமதேவன் கலந்து கொள்ளவுள்ளார். (ம)

## கலைஞர்கள் ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், நவ. 2
வலி தென்மேற்குப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கலைஞர்கள் ஒன்றுகூடல் நிகழ்வு இன்று நடைபெறவுள்ளது.
வலி தென்மேற்குப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இன்று காலை 9.30 மணிக்கு இந்த நிகழ்வுகள் நடைபெறவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)



யாழ்ப்பாணம் கல்வியங்காடு இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் அண்மையில் இடம்பெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை மதிப்புறுத்தும் நிகழ்வு பாடசாலை அதிபர் திருமதி கௌரி பரந்தாமன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. (ம)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

### அரசியல்...

களமிறங்கியுள்ளது.

தமது நாட்டு பிரதிநிதிகளைக்கொண்டு இலங்கையின் அரசியல் தலைவர்களுடன் இரகசியச் சந்திப்புகளை இந்திய அரசு நடத்தி வருகின்றது என்று அறியமுடி கின்றது.

எதிர்க்கட்சித்தலைவரும்தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனுடன் இந்தியாவின் முன் னாள் அயலுறவுத்துறைச் செயலாளர்களான லலித் மன்சிங் மற்றும் பேராசிரியர் சுக் டியோ முனி ஆகியோர் கொழும்பில் நேற்றுச் சந்திப்புக்களை நடத்தியுள்ளனர். இந்தச் சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் எதிர்க்கட்சித்தலைவரும்தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்ததாவது, பேச வேண்டிய விடயங்களை எல்லாம் பேசினேன். இலங் கையில் என்ன நடந்தாலும் அது நாட்டின் அரசமைப் புக்கு இணங்க நாடாளுமன்றத்தின் பெரும்பான்மைப் பலத்துடன் நடைபெற வேண்டும் என்று என்னைச் சந் தித்த இந்தியப் பிரதிநிதிகளிடம் எடுத்துரைத்தேன். இந் தியா எமது அயல் நாடு. எனவே, இலங்கை விடயத்தில் இந்தியா நடுநிலையுடன் நிதானமாகச் செயற்பட வேண் டும் என்று அவர்களிடம் கூறினேன் - என்றார். (5)

### நாடாளுமன்றத்தை...

நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் உள்ள குழு அறை யில் இந்த சந்திப்பு இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 16ஆம் திகதி வரை நாடாளுமன்றத்தை இடைநிறுத்தியுள்ளார் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன. புதிய தலைமை அமைச்சராக நியமிக்கப்பட் டுள்ள மகிந்த ராஜபக்ச பெரும்பான்மையைப் பெறுவ தற்கு குதிரைப் பேரத்தை முடிக்க வசதியாக இந்த அவ காசம் வழங்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியிருந்தது.

மைத்திரியின் முடிவுக்கு எதிராகச் சபாநாயகர் கரு ஜய சூரிய போர்க்கொடி உயர்த்தினார். அதைத் தொடர்ந்து ஐ.தே.க, தமிழ் தேசிய கூட்டமைப்பு, ஜே.வி.பி. உள் ளிட்ட கட்சிகளை சேர்ந்த 125 உறுப்பினர்கள் கையெ ழுத்திட்டு, நாடாளுமன்றத்தைக் கூட்டும்படி வலியுறுத் தும் கடிதத்தை சபாநாயகரிடம் கையளித்தனர்.

இந்தநிலையில், நாடாளுமன்றத்தில் குழு அறையில் சபாநாயகர் தலைமையில் கூட்டம் இடம்பெறுகிறது. நாடாளுமன்றத்தை கூட்டும்படி வலியுறுத்தி கையொப் பமிட்ட 125 உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றம் முடக்கப்பட்டது, ரணில் பதவி மீதான நம்பிக்கை வாக்கெடுப்பு விவகா ரத்தில் இதுவரையான நிலைமை, நாடாளுமன்றத்தை கூட்டுவதற்கு இதுவரை தான் எடுத்த முயற்சிகள், நடந்த பேச்சு விபரங்களை பற்றி சபாநாயகர் இந்த கூட்டத்தில் உறுப்பினர்களிற்கு விளக்கமளிக்கவுள்ளார்.

113 உறுப்பினர்களின் ஆதரவு தமக்கிருப்பதாக இரண்டு தரப்பும் கூறி வருகின்றன. எனினும், நேற்று மாலை நிலவரத்தின்படி மகிந்த ராஜபக்ச 113 உறுப்பினர்களின் ஆதரவை பெற்றுவிட்டதாக தகவல் வெளியாகியுள்ளது. சபாநாயகர் அழைப்பு விடுத்துள்ள கூட்டத்தில் கலந்து கொள்ளும் உறுப்பினர்களின் எண்ணிக்கை அடிப்ப டையில், ரணிலுக்கான ஆதரவுத் தளம் எந்த நிலமை யில் இருக்கின்றது என்பது கணிக்கப்படக் கூடும் என்று தெரியவருகின்றது. (5)

### ரணிலின்...

மகிந்த ராஜபக்சவுக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று சபாநாயகர் அலுவலகம் தெரிவித்துள்ளது. தலைமை அமைச்சராக மகிந்த ராஜபக்சவின் பெயர் அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளதால், இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பாக நாடாளுமன்ற அதிகாரிகள் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றனர். இந்த விடயத் தில் சபாநாயகர் தலையீடு செய்ய மாட்டார் என்று சபா நாயகரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ள தாவது,

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசமைப்புக் குழப்பநிலை கார ணமாக விரைவாக நாடாளுமன்றம் கூட்டப்பட வேண் டும் என்று நாட்டிற்குள் மாத்திரமன்றி பன்னாட்டு ரீதியி லும் வலியுறுத்தப்பட்டது. அரச தலைவருக்கும் சபாநா யகருக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் இடம்பெற்றிருந்தது.

நாடாளுமன்றம் விரைவாகக் கூட்டப்பட வேண்டியதன் அவசியத்தை முன்னிறுத்திய காரணிகள் சபாநாயக ரால் அரச தலைவருக்கு எடுத்துக்கூறப்பட்டுள்ளது. அவற்றைச் செவிமடுத்த அரச தலைவர், இது தொடர் பில் சிந்தித்து இறுதித் தீர்மானத்தை அறிவிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தில் புதிய தலைமை அமைச்சருக்கான வசதிகளை ஆயத்தம் செய்வது தொடர்பில் அரச தலை வரால் சபாநாயகரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட் டது. அதற்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது என்றுள்ளது. (5,71)

## பொய்யான பரப்புரைகளை நம்பாதீர்கள்என்கிறதுஅரசு

அடிப்படையற்ற பொய்ப் பரப்புரைகளுக்கு ஏமாறாதுபுரிந்துணர்வோடுமக்கள்செயற்பட வேண்டும்என்றுஅரசுவேண்டுகோள் விடுத் துள்ளது.

உத்தியோகப்பூர்வதகவல்களைமக்களுக்கு வழங்க வேண்டிய பொறுப்பு அரச தகவல் திணைக்களத்துக்குஉள்ளதால், உறுதிசெய் யப்பட்டதகவல்களைஅந்தத்திணைக்களம் துரிதமாக மக்களுக்கு வழங்கும்என்றுஅரச திணைக்களம்வெளியிட்டுள்ளஅறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் அரசியல் மற்றும் பொருளா தாரமேம்பாட்டுக்கும்உறுதிப்பாட்டுக்குமாகப் பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படு கின் றன. இந்தசந்தர்ப்பத்தில்நாட்டுமக்கள்தேசிய உணர்வோடு, புரிந்துணர்வுடன் செயற்படு தல்மக்களின்நலனுக்குஇன்றியமையாதது என்றுஅரசதகவல்திணைக்களம்குறிப்பிடப் பட்டுள்ளது.

தேசிய ஒற்றுமை மற்றும் புரிந்துணர்வை சீர்குலைப்பதற் காக பல்வேறு தரப்பினரும் சில திட்டமிட்ட அணிகளும் தற்போது பல் வேறு வழிறைகளினூடாக போலியான, தவறானவழியில்இட்டுச்செல்லும்பரப்புரை களை மேற்கொண்டு வருகின்றன என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சமூக வலைத்தளங்கள், இணையத் தளங் கள் மற்றும் சில ஊடகங்களில் இத்தகைய தவறான மற்றும்அடிப்படையற்றகருத்துக்க ளும் செய்தி களும் பரப்பப்படுகின்றன என் றும்அந்தஅறிக்கையில்சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தவறானகருத்துக்களினூடாகநாட்டில்அரசி யல் நிலையற்ற தன்மையை ஏற்படுத்தவும் வேலைத்தளங்கள் உள்ளிட்ட பல இடங்க ளில் அமைதியின்மையை உருவாக்கவும் இந்தகுழுக்கள்முயற்சிக் கின்றனஎன்றும் அரசதகவல்திணைக்களம்எச்சரிக்கைவிடுத் துள்ளது. (ற)

## கிளிநொச்சி வர்த்தகர்கள் 12 பேருக்கு 53,000 தண்டம்

கிளிநொச்சி வர்த்தகர்கள் 12 பேருக்கு 53ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது கிளி நொச்சி மாவட்ட நீதிவான் மன்று.

கிளிநொச்சி மாவட்ட நுகர்வோர் அதிகார சபையினர் மேற்கொண்ட சிறப்பு நட வடிக் கையின்போது வியாபார நிலையங்களில் காலாவதியான பொருள்களை விற்ப னைக்கு வைத்திருந்தமை மற்றும் விலைப் பட்டி யல் காட்சிப்படுத்தாமை, கட்டுப்பாட்டு விலைக்கு மேலதிகமாக விற்பனை செய் தமை, பொருள்களுக்கான உத்தரவாதம் வழங்காமை, இறக்குமதியாளர்களின் விப ரம் இல்லாது பொருள்களை விற்பனை செய்தமை போன்ற குற்றச்சாட்டுகளை முன்வைத்து 14 வர்த்தகர்களுக்கு எதி ராக நேற்றுமுன்தினம் கிளிநொச்சி நீதிவான் மன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இதில் காலாவதியான பொருள்களை விற் பனை செய்ய காட்சிப்படுத்திய 6 வர்த்தகர் களுக்கு 30ஆயிரம் ரூபா தண்டம் விதிக் கப்பட்டது.

விலைப்பட்டியல் காட்சிப்படுத்தாத 4 வர்த கர்களுக்கு 12ஆயிரம் ரூபா தண்டமும், கட்டுப்பாட்டு விலைக்கு அதிகமாக பொருள் களை விற்ப னை செய்த வர்த்தகருக்கு 6 ஆயிரம் ரூபா தண்டமும், இலத்திரனியல் பொருள்களுக்கு உத்தரவாதம் வழங்காத வர்த்தகருக்கு 3ஆயிரம் ரூபா தண்டமும், இறக்கு மதியாளரின் பெயர் குறிப்பிடாது பொருள்களை விற் பனை செய்த வர்த்தக ருக்கு 2ஆயி ரம் ரூபா தண்டமும், என 12 வர்தகர்களுக்கு 53ஆயிரம் ரூபா தண்டம் அறவிடப்பட்டது. இரு வர்த் தகர்கள் சமூக மளிக்கவில்லை. (6)

## வவுனியா பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாதப்போட்டிகள்

வவுனியா,நவ .2

வவுனியா பொது நூலகத்தில் நேற்றுமுன் தினம் மாலை 3 மணியளவில் சிறுவர் களுக்கான வர்ணம் தீட்டும்போட்டிகள், குறுக்கெழுத்துப் போட்டிகள் பொது நூலகத் தின் நூலகர் திருமதி பாமினி உருச்சந்திரன் தலைமையில் நூலகத்தில் இடம்பெற்றது.

தேசிய வாசிப்பு மாதத் தினை முன்னிட்டு பொது நூலகத்தின் வாசகர்களிடையே வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் முக மாக, நிறந்தீட்டும் போட்டிகள், குறுக் கெழுத்துப்போட்டிகள், கவிதைகள், சிறுகதை கள்,கட்டுரைகள் நடை பெற்றன.



பெருமளவான சிறுவர் கள் ஆர்வத்துடன் தமது பெற்றோர்களு டன் வந்து கலந்து கொண்டனர். இப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள் நடுவர்களினால் தெரிவு செய் யப்பட்டு, இவர்களுக்கான பரிசில்கள் வழங் கும் நிகழ்வுகள் இடம்பெறும்போது சான்றி தழ்களும் வழங்கிவைக்கப்படும் என்று, வவுனியா நூலகத்தின் நூலகர் திருமதி பாமினி உருச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

## மாடுவெட்டிய மூவர் கைது

கிளிநொச்சி,நவ.2

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட நாதன் திட்டம் கிரா மத்தில் அனுமதி இன்றி தமது மாட்டை இறைச்சிக்கு வெட்டிய உரிமையாளர் உட் பட மூவர் தர்மபுரம் பொலி ஸாரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் குறித்த வீட்டை சோதனை யிட்டபோது சுமார் நூறு கிலோவுக்கும் அதிகமான மாட்டிறைச்சி ,ஒன்பது கத்தி ,ஒரு கோடரி என்பவற்றைப் பொலிஸார் மீட்டுள்ளதோடு மூவரைக் கைது செய்துள்ள னர்.

கைது செய்யப்பட்டவர்களை நேற்றுக் கிளிநொச்சி நீத வான் நீதிமன்றில் முன்னி லைப்படுத்தி இருப்பதாக தர் மபுரம் பொலிஸ் வட்டாரத் தகவல்கள் தெரிவிகின்றன. (35)

## வவுனியாவில் ரூ.10 லட்சம் கொள்ளை

வவுனியா, நவ: 2

10 லட்சம் ரூபா பணத்தை வங்கியில் வைப்பிலிடுவ தற்கு உந்துருளியில் எடுத்துச் சென்றபோது, மற்றொரு உந்துருளி யில் வந்தவர்களால் மிரட்டிக் கொள்ளையிடப் பட்டுள்ளதாக வவுனி யாப் பொலிஸ் நிலையத் தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கண்டிவீதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலை யத்தின் ஊழியர்கள் இரு வர் உந்துருளியில் 10 லட்சம் ரூபா பணத்தை வங்கியில் வைப்பிலிடுவ தற்காக நேற்று மாலை 6 மணிக்குச் சென்றுள்ள னர். இலங்கைப் போக்கு வரத்துச் சபையின் சாலைக்கு அருகில் சென்றுகொண்டிருந்த போது, மற்றொரு உந்து ருளியில் வந்த இருவ ரால் பணம் கொள்ளை யிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் பொலிஸா ரின் அவசர அலைபேசி இலக்கம் ஊடாகத் தெரி யப்படுத்தப்பட்டது. சம் பவ இடத்துக்கு வந்த பொலிஸார் விசாரணை களை மேற்கொண்டுள் ளனர். (5,110)

## யாழ்ப்பாணத்தில் கொள்ளை மற்றும் திருட்டு

யாழ்ப்பாணம், நவ. 2

யாழ்ப்பாணத்தில் நேற்று இரு இடங்களில் இடம் பெற்ற பல லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் மற்றும் பொருள்கள் அப கரிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ்நிலையங்களில் முறைப்பாடு பதிவு செய் யப்பட்டுள்ளது.

கரவெட்டி தில்லையம் பலம் பகுதியில் உள்ள வயோதிபத் தம்பதிகள் வசித்து வரும் வீட்டுக்குள் நேற்றுமுன்தினம் புகுந்த 5 பேர் கொண்ட கும்பல் அங்கிருந்தவர்களைக் கடுமையாகத்தாக்கிவிட்டு வீட்டில் இருந்த பணம், நகைகளை கொள்ளைய டித்துச் சென்றுள்ளனர். 15 லட்சம் ரூபா பெறுமதி யான நகைகள் கொள் ளையடிக்கப்பட்டுள்ளதா கப் பாதிக்கப்பட்டவர் நெல் லியடிப் பொலிஸ் நிலை யத்தில் முறைப்பாடு செய் துள்ளார்.

இதேவேளை அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புத்தூர் பகுதியில் உள்ள அலைபேசி விற்பனை நிலையத்தின் கூரை யைப் பிரித்து இறங்கிய திருடர்கள் அங்கு இருந்த பெறுமதியான அலைபே சிகளையும், அலைபேசி மீள்நிரப்பு அட்டைகளை யும் களவாடிச் சென்றுள் ளனர். 4 இலட்சம் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாகப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட் டுள்ளது. (5,8,26)



## கற்றல் உபகரணப் பெட்டிகள் வழங்கல்

முல்லைத்தீவு,நவ .1

முல்லைத்தீவு பெரிய இத்திமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் கல்வி கற்று வரும் தாய்,தந்தையை இழந்த, பொருளாதார நிலையில் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்குப் புத்தகப்பைகளும், மாணவர்களின் கற்றலுக்கு போதுமான அப்பியாசக் கொப்பிகள், கற்றல் உபகரணப் பெட்டிகள் என்பவற்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். பெல்ஜியம் நாட்டில் வசித்து வரும் சுந்தரேசன் (சுரேஸ்) தம்பதியினரின் மகன் சு.பிரவீனின் 4 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு இந்த உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. (222)

# காணாமற்போன உறவினர்களால் வவுனியாவில் பெரும் ஆர்பாட்டம்

**வவுனியா,நவ.2**

**வடக்கு - கிழக்கில் கையளிக்கப்பட்டும், கடத்தப்பட்டும், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் வவுனியாவில் முன்னெடுக்கப்பட்டுவரும் போராட்டம் ,617 நாட்களை எட்டியுள்ள நிலையில் நேற்றைய தினம் மாலை கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.**



அவர்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வரும், வீதி அபிவிருத்தி திணைக்களத்துக்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

எந்த அரசு ஆட்சிக்கு வந்தாலும், தங்களுடைய காணமல் போன உறவினர்களுக்கு தீர்வினை பெற்றுத்தர முடியாது. எனவே பன்னாடுகள் தலையிட்டு,இதற்கான தீர்வினைப் பெற்றுத் தர வேண்டும் என்ற கோரிக்கையை அவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தின் போது முன்வைத்திருந்தனர்.

617ஆவதுநாளாகஇடம்பெற்றுவரும் இந்தப்போராட்டம், கடும் மழைக்கு மத்தியிலும் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (110)

# ஒட்டுசுட்டான் பகுதியில் கட்டாக்காலிகளால் தொல்லை

முல்லைத்தீவு ,நவ .2

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் இரவுவேளைகளில் கால்நடைகளைப் பட்டிகளில் அடைக்காமையினால் பயிரழிவு, வாகன ,விபத்துக்கள், ஏற்படுகின்றன. வீதிகளில் இரவு வேளைகளில் நடமாடும் கால்நடைகளைப் புதுக்குடியிருப்புப் பிரதேசசபையினர் கட்டுப்படுத்தத் தவறியுள்ளனர். ஒட்டுசுட்டான் கமநலச்சேவை நிலையத்தில் இதுபற்றித்தெரிவித்த போது, வீதிகளிலும் பொது இடங்களிலும் தங்கிநின்று அழிவுசெய்யும் கால்நடைகளைப் பிரதேச சபை கட்டுப்படுத்த வேண்டும் எனப் பெரும்பாலான உத்தியோகத்தர் தெரிவித்தார். (500)

# வவுனியாவில் கலைஞர்களுக்கு மதிப்பளிப்பு

வவுனியா,நவ .2

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்கள அனுசரணையுடன், வவுனியா மாவட்டக் கலாசார பேரவையும், மாவட்டச் செயலகமும் இணைந்து நடத்திய வவுனியா மாவட்ட பண்பாட்டுப் பெருவிழாவில் கலைஞர்கள் ஊடகவியலாளர்கள் எனப் பலர் மதிப்பளிக்கப்பட்டிருந்தனர்.

வவுனியா மாவட்ட மேலதிக அரச செயலர் தி.திரேஸ்குமார் தலைமையில் நேற்று நடைபெற்ற இந்த நிகழ்வில் மாவட்ட அரச செயலர் எம்.ஐ. கனீபா கலைஞர்களுக்கான விருதுகளை வழங்கி வைத்திருந்தார்.

வவுனியம் மூத்த கலைஞர் விருது மற்றும் வவுனியம் கலை இளவல் விருதுகள் .வாத்தியம், இசை நாடகம், ஓவியம், ஊடகம், ஒளிப்படம், நடிப்பு, இலக்கியம் ஆகிய துறைகளுக்கும் விருதுகள் வழங்கி வைக்கப்பட்டன.

"வவுனியம் மூத்த கலைஞர் விருதுகள்" பெற்றோர்; மாசிலாமணி தர்மகுலசிங்கம்,கனகசபை கோபால்,மரியம்பிள்ளை செபமாலை, மாணிக்கம் மயில்வாகனம்,

"வவுனியம் இளம்கலைஞர் விருது" பெற்றோர்;

சிங்காரம் சந்திரகாசன்,கிருஸ்ணகுமார் வசந்தரூபன்,ஜேசுதாசன் ஜெபநேசன்,சொக்கலிங்கம் கிருசன்,சதுனிகா மதுகாசினி ஜினதாச,கயானி மதுசிகா,சிறிராம் ரயிதன்,திருநாவுக்கரசு புஸ்பகரன்.

ஊடகத்துறையினூடாக கலை, இலக்கியத்திற்குப் பணியாற்றியமைக்காக வவுனியா பிராந்திய ஊடகவியலாளர் கிருஸ்ணகுமார் வசந்தரூபனுக்கு பிரதேச செயலர் க.உதயராசாவினால் "வவுனியம் கலை இளவல்" என்ற விருது வழங்கி வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் வவுனியா மாவட்ட செயலர் எம்.கனீபா, மேலதிக அரச செயலர் தி.திரேஸ்குமார், உதவிமாவட்ட செயலர் ந.கமலதாஸ், பிரதேச செயலர் கா.உதயராயா, கலாசார திணைக்கள உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (110)





## சிறப்புத் தேவையுடையோர் தின நிகழ்வு

மன்னார், நவ .2

மாந்தை மேற்குப் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் பன்னாட்டு முதியோர் மற்றும் சிறப்புத் தேவையுடையோர் தினம் நேற்றுமுந்தினம் மாந்தை மேற்குப் பிரதேச செயலகத்தில் மாந்தை மேற்குப் பிரதேச செயலர் எஸ்.கேதீஸ்வரன் தலைமையில் இடம் பெற்றது.

முதியோர் மற்றும் சிறப்புத் தேவையுடையவர்களுக்கான பல்வேறு போட்டிகளும் இடம்பெற்றன.

வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களும் மாந்தை மேற்குப் பிரதேச செயலர் எஸ்.கேதீஸ்வரனினால் வழங்கி வைக்கப்பட்டது.

நிகழ்வில் விருந்தினராக மடு வலயக்கல்வி பணிப்பாளர் மற்றும் மாந்தை மேற்குப் பிரதேச செயலக பணியாளர்கள்,கிராம மக்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (56)

# பரீட்சை வழிகாட்டல் செயலமர்வு

கிளிநொச்சி,நவ.1

துளிர் சமூக சேவைகள் அமைப்பினால் இந்த வருடம் க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான "பரீட்சை வழிகாட்டல் செயலமர்வு" கடந்த 30,31 ஆகிய இரு நாட்கள் கிளிநொச்சி பாரதி மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இதில் வரலாற்றுப் பாடம் ஆசிரியர் சங்கராலும் கணித பாட வலயக் கல்வி அலுவலக ஆசிரிய ஆலோசகர் ஜெயகாந்தவால் நடத்தப்பட்டு நேற்றுடன் நிறைவு பெற்றது. (222)




# அனிஞ்சியன்குளம் பொது மண்டப வீதி சீரின்மையால் மக்கள் அவலம்

முல்லைத்தீவு ,நவ .2

முல்லைத்தீவு மாவட்டம் மல்லாவி பிரதேசத்தில் உள்ள அனிஞ்சியன்குளம் 2 ஆம் பகுதியில் உள்ள பொதுநோக்கு மண்டப வீதியின் ஐந்தாம் ஒழுங்கை இதுவரை சீராக்கப்படாமையால் வீதியால் பயணம் செய்வதில் மக்கள் பெரும் இடர்களை எதிர் நோக்கியுள்ளதாகப் பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவித்துள்ளார்கள்.

அதேவேளை துணுக்காய் பிரதேச சபையின் கீழ் காணப்படும் 2.5 கிலோமீற்றர் நீளம் கொண்ட இந்த வீதியினை நம்பி 800 வரையான குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றார்கள். ஐநூறிற்கும் மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட இந்தக் கிராமத்தில் இருந்து பாடசாலை செல்லும் மாணவர்கள் கர்பிணிப் பெண்கள் ஆகியோர் இந்த வீதியினையே பயன்படுத்துகின்றார்கள்.

எங்கள் பிரதேசத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இருக்கின்றார் பிரதேச சபை உறுப்பினர்களும் இருக்கின்றார்கள். ஆனால் இந்த வீதியினை இதுவரை யாரும் வந்து பார்க்கவில்லை என்று குறிப்பிடுகின்றனர். (ரி -3)



# VACANCIES
# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications from the qualified persons for the under mentioned posts.

**FACULTY OF MANAGEMENT STUDIES AND COMMERCE**

Senior Professor/ Professor of **Accounting / Commerce /Financial Management /Human Resource Management/ Marketing**

Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II/Lecturer (Unconfirmed)/ Lecturer (Probationary) in **Financial Management**

Instructor in Computer Technology Grade II

**FACULTY OF AGRICULTURE**

Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II/Lecturer (Unconfirmed)/ Lecturer (Probationary) in **Agricultural Biology**

**SALARY AND OTHER BENEFITS**

| Post | Salary scale |
|---|---|
| Senior Professor | Rs.139,175 – 11 x 2,925– 171,350/-p.m |
| Professor | Rs.117,350-13 x 2,700-152,450/-p.m |
| Senior Lecturer Grade I | Rs.91,310-7 x 2,170-106,500/-p.m |
| Senior Lecturer Grade II | Rs.79,360-11 x 1,630-97,290/-p.m |
| Lecturer (Unconfirmed) | Rs.69,580-5 x 1,630-77,730/-p.m |
| Lecturer (Probationary) | Rs.54,600-10 x 1,335-67,950/-p.m |
| Instructor in Computer Technology Gr.II | Rs.50,625 – 3x1335– 54,630(EB) 55,965-14 x 1,335-74,655/-p.m |

**Note :**

The above salary scales for permanent positions are fully operative w.e.f 01.01.2020 and the placement of salary applicable to the posts for the years 2018, 2019 & 2020 will be made in accordance with the University Grants Commission Circular No.17/2016(v) dated 01.05.2018.

In addition to the above salary,

1. The following allowances will be paid as the percentage of the basic salary to the academic staff:
   i) Academic allowance

| | |
|---|---|
| Senior Professor | - 167% |
| Professor | - 162% |
| Senior Lecturer Gr.I/Gr.II | - 151% |
| Lecturer (Unconfirmed) | - 131% |
| Lecturer (Probationary) | - 115% |

   II) Research allowance - 35% (Payable to the Academic Staff based on the research activity)
2. Additional monthly allowance – 20% (For all the post)
3. Cost of living allowance of Rs.7,800/-p.m. (For all the post)
4. Monthly Compensatory Allowance (MCA) of 45 % for Instructor in Computer Technology

**Statutory benefits:**

*I. Sabbatical leave entitlement for the holder of the Post of Senior Lecturer Gr.II and above*
*II. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University system*
*III. Gratuity payments*
*IV. Employees' Trust Fund benefits*
*V. Free Medical Services*

**Closing dates**

Application should reach us on or before as indicated below:

| | |
|---|---|
| **Post of Senior Professor/ Professor** | **-31.01.2019** |
| **Other posts** | **-03.12.2018** |

Applications and other documents for the Post of **Senior Professor/Professor** shall be sent to the **Vice-Chancellor** with a covering letter. **Applications for the other posts**, completed applications along with certified copies of the statements of the Degrees should be sent to the **Deputy Registrar/Academic Establishments**, University of Jaffna, Sri Lanka.

* Applicants for the **Post of Professor** are requested to submit the following in addition to the prescribed Application Form:

a) 18 copies of his/her Curriculum Vitae
b) 18 copies of self-assessment of his/her whole career that lists and specifies the contribution to:
   - Teaching, Scholarship and Academic Development
   - Research, Scholarship and Creative Work
   - Dissemination of Knowledge
   - Awards, University, National and International Development Activities

   The Self Assessment should be prepared in accordance with the marking scheme, (issued with this document) giving details under each heading/sub heading.
c) Three copies each of the documents to support self assessment in :
   - Teaching, Scholarship and Academic Development (Section 1.0)
   - Research, Scholarship and Creative Work (Section 2.0)
   - Dissemination of Knowledge (Section 3.1)
   - Awards, University, National and International Development Activities and other relevant documents listed in the self assessment. (Section 3.2 & 3.3)
     (Section 2.0 & 3.1 could be prepared as a separate document)
d) Titles of five (05) outstanding research publications/research papers by the candidate.

Application forms and other details will be available in the University website **www.jfn.ac.lk**. Downloaded application forms should accompany with the paid Bank Slip for the deposit of a sum of Rs.100/- credited to the Peoples Bank Account No: **162-1-001-6-0000880** of Bursar, University of Jaffna.

Application forms and other details may be obtained from the office of the **Deputy Registrar, Academic Establishments**, University of Jaffna, Sri Lanka, on a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a self – addressed stamped envelope 23x10 c.m. in size along with the paid Bank Slip to the above address.

The candidates who apply for **more than one** position should submit **separate application** along with separate **Bank slip**. The post applied for should be marked on the top left hand corner of the envelope.

Applicants from the University System/Government Departments /Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions, but may send an advance copy in the first instance. However, no such applicant will be considered for interview, if the application channeled through the Head of the Department is not received.

Illegible & incomplete applications, and applications received by the University after the closing date will be rejected without intimation. Only short- listed applicants will be called for an interview.

REGISTRAR
UNIVERSITY OF JAFFNA
SRI LANKA.
**31.10.2018**

(IN/8224)(10)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




தென்மராட்சி பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கங்களின் கொத்தணி, வரணி கல்வி உத்தியோகத்தரும் தென் கிழக்கு பலநோக்கு கூட்டுறவுசங்கம் கொடிகாமம் கிளை 09, வரணி, இடைக்குறிச்சி கிளைக்குழு செயலாளரும் வரணி மத்திய வைத்தியசாலை நோயாளர் நலன்புரி சங்க பொருளாளரும் அருள் மிகு ஸ்ரீ உதிரமகாளி அம்மன் மாசேரி வரணி பொருளாளரும் மாசேரி வரணி கலைமகள் சனசமூக நிலைய ஸ்தாபகரும் சமூக சேவையாளருமான

**திரு. ஆழ்வான் மகேந்திரன்** அவர்கள்


கடந்த 25.10.2018 வியாழக்கிழமை சாவகச்சேரி நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி கஜநிதிபாலன் முன்நிலையில் யாழ். மாவட்ட சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்தமையை பாராட்டி வாழ்த்துவதுடன் இவர் மேல் மேலும் பல சேவைகள் செய்து வாழ்வாங்கு வாழ வாழ்த்துகின்றோம்.

மாசேரி, கிழக்கு,
வரணி.

வாழ்த்துவோர்:
அருள் மிகு ஸ்ரீ உதிரமகாளி அம்மன்
ஆலயபரிபாலன சபையினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
11 . 12 . 1949



விண்ணில்
02 . 11 . 2017

**ஞானப்பிரகாசம் எட்வின் தேவகுமார்**

"அன்பெனும் நீரிலும் அருங்குண ஒளியிலும்
அனுதினம் என்னை வாழ வைப்பவர் இயேசு "

இன்முகத்துடன் எந்நேரமும் எம்மோடு
உரையாடி நல் துணைவனாய் நல்தந்தையாய்
சீராக வாழ்ந்து எம்மை வழி நடத்தினீர்
ஆண்டு ஒன்று சென்றாலும் அழியாத ஓவியமாய்
எம் நெஞ்சங்களில் குடி கொண்டிருக்கின்றீர்

எம் குடும்பத்தின் குலவிளக்கே எம் இல்லம்
ஒளியிழந்து போனதுவே ஒளியாய் மிளிர்ந்து
ஓய்வின்றி உழைத்து இனிமையின் உறைவிடமாய்
வாழ்ந்த உங்கள் ஆன்மா இறைவனில்
இன்புற்றிருக்க வேண்டுகின்றோம்.



இல. 55, ஆசீர்வாதப்பர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(CS 20955) (14.17)

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
29 . 01 . 1945



மறைவு
02 . 11 . 2012

**திருமதி அம்பிகாவதி சண்முகவடிவேல்**

திதி:- 02.11.2018

ஆண்டுகள் ஆறு ஆனதென்று
அழுதிங்கு புலம்புகின்றோம்
கோடி ஆண்டுகள் ஓடியிங்கு போனாலும்
அழியாது என்றென்றும் அழகான உன் நினைவுகள்

ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

(CS00637)(11)

கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
மாமி, மச்சாள்மார்,
மச்சான்மார், சகோதர, சகோதரிகள்

தகவல்:-
க.சி.பாலகிருஷ்ணன்
(சகோதரர் - சட்டத்தரணி)
077 757 6256

### இலங்கைக் கிரிக்கெட் அணியில்

# வடக்கு இளைஞர்களை உள்ளீர்க்க உரியவாறு தயார்ப்படுத்துங்கள்!

### வடக்கு ஆளுநர் கூறுகிறார்

*யாழ்ப்பாணம், நவ. 2*

*இலங்கைக்கிரிக்கெட் அணியில்வடக்கு மாகாணதமிழ் இளைஞர்களும் இணைந்து கொள்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தும் வகையில் இங்குள்ள இளைஞர்களை விளையாட்டில் ஊக்குவிப்பது அவசியம் என்று வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே தெரிவித்துள்ளார்.*



வடமராட்சிகல்விவலயத்தின்ஏற்பாட்டில் நடைபெற்ற வர்ண இரவுகள் நிகழ்வு நெல்லியடி மத்திய கல்லூரி அரங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணக் குடாநாட்டிலே முன்னொரு காலத்தில் மாணவர்கள் எவ்வாறு கல்வி பயின்றார்கள் என்பதை என்துபெற்றோர்எனக்குச்சிறுவயதில் சொல்லிக் கொடுத்திருக்கின்றார்கள். வீட்டில் வெளிச்சம் இல்லாத இரவுகளில்வீதிவிளக்குகளின்வெளிச்சத்திலிருந்து கல்வி கற்றார்கள் என்று சொன்னார்கள். அவ்வாறுகல்விகற்றவர்கள்தான் தென்பகுதியில் பெரிய பெரிய உத்தியோகங்களில் இருக்கின்றார்கள் என்று சொன்னார்கள். அவ்வாறு ஒருகஸ்டமான காலத்தில்கல்வி முன்னேற்றமாக இருந்தது. ஆனால் சில வருடங்களில் கல்வி பின்னோக்கிச் சென்றது. தற்போது மீண்டும் கொஞ்சங்கொஞ்சமாகக்கல்விமுன்னோக்கி வருகின்றது.

எதிர்வீரசிங்கம், ஆழிக்குமரன்ஆனந்தன், தற்போது ஆசிய கூடைப்பந்தாட்டத்தைச் சுவீகரித்த தர்சினி போன்றவர்கள் வடக்கு மாகாணத்திலிருந்தே இந்த நாட்டுக்குப் பெருமை சேர்த்துள்ளனர். அதேபோன்று இங்குள்ள பலர் தேசிய மட்டத்தில்பல பதக்கங்களைப் பெற்றிருக்கின்றார்கள். அவர்களை மேலும் வளப்படுத்த வேண்டும். பன்னாட்டு அணிகளுடன் விளையாடக் கூடிய வகையில் அவர்களுக்கான பயிற்சிகளைவழங்கவேண்டும். ஆசியாவில் விளையாடி இலங்கைக்குப் பெருமை தேடித்தந்த செல்வி தர்சினியைப் பாராட்டும் அளவுக்கு எனக்குத் தமிழ் மொழி தெரியாது. அதனால் கவலை அடைகிறேன்.

அரசியல் வாதிகள் மக்கள் மத்தியில் பிழையானகருத்துகளைத்தெரிவித்து அவர்களைப் பிளவுபடுத்த நினைக்கின்றார்கள். தமது தலைமைத்துவத்தைத் தக்கவைக்க நினைக்கின் றார்கள். அவர்களின் பிழையான தகவல்களைக் கருத்திற்கொள்ளாது சரியானவற்றை இனங்கண்டுசெயற்படுமாறு அனைவரிடமும் கேட்டுக்கொள்கின்றேன் - என்றார்.

இந்த நிகழ்வில் தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர்எஸ்.நந்தகுமார், வடக்குமாகாணசபையின்முன்னாள் உறுப்பினர் எஸ். அகிலதாஸ் அதிபர்கள் ஆசிரியர்கள் எனப் பலர் கலந்துகொண்டிருந்தனர். (4)

## பயன்படாதுள்ள சகல கட்டடங்களையும் பயன்பாட்டுக்கு விடுமாறு குழு பணிப்பு

யாழ்ப்பாணம், நவ. 2

வடக்குமாகாண உள்ளூராட்சி சபைகளின் கீழ் உள்ள பயன்தரக் கூடிய கட்டடங்களை முழுமையாகப் பாவனைக்கு விடும் வகையில் நடவடிக்கைகளை எடுக்குமாறு நாடாளுமன்ற பொதுக் கணக்குக் குழு பணித்துள்ளது.

நாடாளுமன்ற பொதுக் கணக்குக் குழு கடந்த மாதம் கூடியது. இதில் மாகாண கணக்கு சார் அலுவலர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள் பங்குபற்றியிருந்தனர். இதன் போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி சபைகளின் கீழ் சபைக்குவருமானம்தரக்கூடிய அநேகமான விடயங்கள் பயன்பாடற்றுள்ளன. அமைக்கப்பட்ட சந்தைகள் மற்றும் கடைகள் இன்னமும் பாவனைக்கு வராமல் உள்ளன. சந்தை செயற்படும் சந்தர்ப்பத்தில் கடைகள் இன்னமும் பயன்பாட்டுக்கு வராமல் உள்ளன. உடற்பயிற்சி நிலையங்கள் செயற்படாமல் உள்ளன. அதேபோன்று சுற்றுலாமற்றும்ஏனையநடவடிக்கைகளுக்கு வழங்கப்பட்ட பொருள்கள் பாவனைக்கு வராமல் உள்ளன. இவை அனைத்தும் பாவனைக்குவரும் பட்சத்தில்சபைக்குவருமானம்கிடைப்பதோடு சபை மற்றும் மக்களுக்குஇடையிலானதொடர்பும் அதிகரிக்கும். ஆகவே வருமானம்தரக்கூடியசபையின்ஆளுகைக்குஉட்படவிடயங்களைப் பாவனைக்கு விடும்வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நாடாளுமன்ற பொதுக் கணக்குக் குழு தெரிவித்துள்ளது. (4.7)

## வவுனியாவில் சிறப்புற நடந்த பன்னாட்டு முதியோர் நிகழ்வு

வவுனியா, நவ. 2

வவுனியா மாவட்ட சமூக சேவை அலுவலகமும் முதியோர் சங்கமும் இணைந்து நடத்தும் பன்னாட்டு முதியோர் தின நிகழ்வு வவுனியாவில் நேற்று நடைபெற்றது.

"முதியவர்களின் திறமைகளைத் தூண்டிவிடுவதன் ஊடாகச் சமூகத்தில் பங்கேற்கவும், பங்களிப்புச் செய்வதன் மூலமாக அவர்களின் எதிர்காலத்தை நிலைநிறுத்தல்" எனும் தொனிப்பொருளில் குறித்த நிகழ்வுநடைபெற்றது.

இரண்டு அம்சங்களாக நடைபெற்ற நிகழ்வில் காலை நிகழ்வாக வவுனியா புதியபேருந்து நிலையத்தில் ஒன்றுகூடல் நடைபெற்றது. வவுனியா மாவட்டச் செயலர் எம். கனீபா, மேலதிக மாவட்டச் செயலர் திரேஸ்குமார், முதன்மைக் கணக்காளர் அ. பாலகுமார், பிரதேச செயலாளர்களான க. பரந்தாமன், க. சிவகரன், சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர் ஜெயகெனடி ஆகியோர் கலந்துகொண்டனர்.

அரச, தனியார் பேருந்துகளில் முதியோருக்கு முக்கியத்துவம் கொடுக்கபடவேண்டும் என்பதை வலியுறுத்தி ஆசனங்களை ஒதுக்கும் ஸ்டிக்கர்களை காட்சிப்படுத்தும்நிகழ்வைமாவட்டச்செயலர்ஆரம்பித்துவைத்தார். பின்னர் புதியபேருந்து நிலையத்தில் இருந்து முதியோர்கள், விருந்தினர்கள், மாணவர்கள் ஆகியோர் வவுனியா நகரசபைக்கலாசாரமண்டபம்வரை ஊர்வலமாகச் சென்றனர்.

வவனியா நகரசபை மண்டபத்தில் ஏனைய நிகழ்வுகள் நடைபெற்றன.

முற்பகல் 9 மணிக்கு சமூக சேவைகள் திணைக்களத்தின் மாகாணப்பணிப்பாளர்வனயா செல்வரட்ணம் தலைமையில் அரங்க நிகழ்வு இடம்பெற்றது. அதில்முதன்மைவிருந்தினராக மாகாண பொதுசேவைகள் ஆணைக்குழுவின்செயலாளர் அ. சிவபாலசுந்தரன் கலந்துகொண்டார்.

இறம்பைக்குளம் மகளிர் வித்தியாலயம், முஸ்லிம் மகா வித்தியாலயங்களுக்கிடையிலான பொதுஅறிவு வினாடிவினா இறுதிப்போட்டி நடைபெற்றது. முதியோர்களுக்கான போட்டியும் நடைபெற்றது. கலைநிகழ்வுகளை தொடர்ந்து முதியோர் மதிப்பளிப்பு நடைபெற்றது. பல்துறை சாதனையாளர்களுக்கு விருதுவழங்கப்பட்டன. (4,110)



## அரசதலைவர் நடமாடும் சேவையில் 44 ஆயிரம் பிரச்சினைகளுக்குத் தீர்வு

### மிகுதிக்கு ஆலோசனை வழங்கப்பட்டன

யாழ்ப்பாணம், நவ. 2

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த ஒகஸ்ட் மாதம் தொடக்கம் நடைபெற்ற அரச தலைவர் நடமாடும் சேவையில் 44 ஆயிரத்து 719 பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளனஎன்றுமாவட்டச்செயலகம்தெரிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது.

அரச தலைவரின் மக்கள் சேவை நிகழ்ச்சித்திட்டம் கடந்த மாதம் தெர்டக்கம் 15 பிரதேச செயலர் பிரிவுகளிலும்நடைபெற்றது. ஒகஸ்ட்மாதம் 24ஆம்திகதி தொட்க்கம்ஒக்டோபர்மாதம்14ஆம்திகதிவரைஇது நடைபெற்றது.

மக்களின் பல்வேறு பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு அரச தலைவரின் சிறப்பான நடமாடும் சேவையாக இது அமைந்திருந்தது. தேசிய அடையாளஅட்டை, திருமணச்சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், இறப்புச் சான்றிதழ், குடிதண்ணீர்ப் பிரச்சினை, மலசல கூடம் அமைத்தல், வீட்டுத் திட்டம்பெறுதல், காணிப் பிரச்சினை, மாற்றுத்திறனாளிகளின் பிரச்சினைகள், சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொடுத்தல் போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாணமாவட்டத்திலுள்ள 15 பிரதேசசெயலர் பிரிவுகளிலும் 52 ஆயிரத்து 991பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டன. இவற்றில்44ஆயிரத்து179 பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கப்பட்டுள்ளது. தீர்க்கப்படவேண்டிய மிகுதி 8 ஆயிரத்து 272 பிரச்சினைகளுக்கு தீர்வுக்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளனஎன்றுமேலும்தெரிவிக்கப்பட்டது. (4,7)

### யாழ்ப்பாண மாவட்டத்தில்

## 20 பழ மரக் கிராமங்கள் உருவாக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், நவ. 2

யாழ்ப்பாணமாவட்டத்தில்20பழமரகிராமங்களைஉருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட செயலக விவசாயப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,

யாழ்ப்பாணமாவட்டத்தில்பழமரசெய்கையை ஊக்குவிக்கும் நோக்கில் பழ மர கிராமங்கள் உருவாக்கப்படவுள்ளன.

இதற்காகக் கொழும்பு விவசாய அமைச்சு 2 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது. ஒவ்வொரு கிராமத்திலும் 500 கன்றுகள் வீதம் நடுகை செய்யப்படவுள்ளன. இதற்குப் பிரதேச செயலர் பிரிவுகளில் 20 கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. பயனாளிகள் தெரிவும் நிறைவு பெற்றுள்ளது. மா மரக் கன்றுகளையேஅதிகளவில்நடுவதற்குத்தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (4,7)

## தேசோதய உறுப்பினர்களுக்கு கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ. 2

யாழ்ப்பாண மாவட்ட தேசோதய உறுப்பினர்களுக்கான ஒன்றுகூடல் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் எதிர்வரும் 10 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

அனைத்துப்பிரதேசங்களிலுமுள்ளவட்டார உறுப்பினர்களை நாளை சனிக்கிழமை பி.ப 3மணிக்கு யாழ்ப்பாண மாவட்ட சர்வோதய தலைமைக் காரியாலயத்தில் தேசோதய சர்வோதயஅமைப்பாளர்கள்பங்குகொள்ளும்நிகழ்வில்கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கோரியுள்ளனர். (4)

## ஹெரோய்ன் போதைப் பொருளுடன் கைதான பெண்ணுக்கு மறியல்

சாவகச்சேரி, நவ. 2

பலஆயிரம்ரூபாபெறுமதியானஹெரோய்ன்போதைப்பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டில் நாவற்குளியைச் சேர்ந்த 30 வயதுப் பெண்ணைவிளக்கமறியலில்வைக்குமாறுசாவகச்சேரிநீதிமன்று உத்தரவிட்டது.

சாவகச்சேரிப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து நாவற்குளி ஐயனார் கோவிலடி வீடொன்றில் சோதனை நடத்தியபோது ஒரு கிராம் 550 மில்லிகிராம் போதைப் பொருள்கள் வைத்திருந்தமை கண்டறியப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (4,9)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## மைத்திரியின் நிலைப்பாடு வெட்கப்படவேண்டியது

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர்களைச் சந்தித்து தற்போதைய அரசியல் நிலமை தொடர்பில் கலந்துரையாடிய அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ள கருத்து அதிர்ச்சியையும் ஏமாற்றத்தையும் அளிக்கிறது. தான் உயிரோடு இருக்கும் வரைக்கும் வடக்கு, கிழக்கு இணைப்புக்கும் கூட்டாட்சித் தீர்வுக்கும் ஒருபோதும் இணங்கப் போவதில்லை என்று விசத்தைக் கக்கியுள்ளார் அவர்.

தன்னுடைய மனதில் கடந்த மூன்றரை வருடங்களாக மறைத்து வைத்திருந்த உண்மையை, உளக் கிடக்கையை அவர் இப்போது வெளிப்படுத்தியிருக்கிறார். 2015ஆம் ஆண்டு தை மாதம் முதல் நாட்டு மக்களுக்கு, குறிப்பாகத் தமிழ் மக்களுக்குதான் காட்டி வந்த முகத்திரையைக் கிழித்துத் தனது உண்மையான சொரூபத்தைக் காட்டியுள்ளார் மைத்திரிபால.

புதிய அரசமைப்பு ஒன்று உருவாகி விடாத வகையில் அரசமைப்பு வழிகாட்டல் குழுவில் அரசதலைவரின் சிறிலங்கா சுதந்திரக் கட்சி கடந்த மூன்று வருடங்களாகப் புரிந்து வந்த இடைஞ்சல்கள், குழறுபடிகள், முட்டுக்கட்டைகள் என்பவற்றின் பின்னணியிலும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவே இருந்திருப்பார் என்பதை இப்போது உணர்ந்துகொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் இத்தகைய தலைவர் ஒருவரைப் பெற்றதற்காக இலங்கை நாடே வெட்கித் தலைகுனிய வேண்டும். நேர்மைத் திறமும், நேர்படப் பேசும் நெஞ்சுரமும் அற்ற ஒரு தலைவரைத் தேர்ந்தெடுத்துவிட்டு, இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வரலாற்று வாய்ப்பாக அவரது ஆட்சிக் காலத்தைக் கணித்தவர்கள் அனைவருமே ஆடைகளைந்த நிலையில் நிற்பதைப்போன்றே உணரவேண்டியிருக்கிறது.

ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் அவற்றோடு இணைந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் முஸ்லிம் கட்சிகளும் என தீர்வுக்கான கால நேரம் கூடி வருவதாகப் பன்னாட்டுச் சமூகமும்கூட நம்பியிருந்தது. ஆனால் பாம்புக்குப் பால் வார்த்த கதையாக முடிந்துவிட்டது.


தான் உயிரோடு இருக்கும் வரையில் (பதவியில் இருக்கும் வரையில் மட்டுமல்ல என்பதைக் கவனிக்கவும்) வடக்கு – கிழக்கு மாகாணங்களின் இணைப்புக்கு இடமளிக்கப்போவதில்லை என்றும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தனது கட்சி அமைப்பாளர்கள் மத்தியில் தெரிவித்திருக்கிறார்.

வடக்கு– கிழக்கு மாகாணங்கள் இணைந்த தமிழர் தாயகத்தில் தனிநாடு அல்லது தன்னாட்சி அதிகாரம் கொண்ட கூட்டாட்சி தீர்வு என்பதே தமிழர்களின் எதிர்பார்ப்பு என்பதை தந்தை செல்வா காலம் முதற்கொண்டு தமிழர்கள் தெளிவாகவே கொழும்புக்கு எடுத்துரைத்து வருகிறார்கள். அறவழியிலும் ஆயுத வன்முறை வழியிலும் மீண்டும் அறவழியிலுமாக அந்த இலக்கை அடைவதற்கான போராட்டத்திலேயே அவர்கள் ஈடுபட்டுள்ளார்கள். இதனைத் தெளிவாகத் தெரிந்து வைத்துக்கொண்டுதான் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பேன் என்கிற முழக்கத்துடன் தமிழ் மக்களின் ஆதரவைத்தேடி வந்தார் மைத்திரி. ஆனால், இன்றோ தமிழர்களின் அடிப்படைக் கோரிக்கைகள் இரண்டையும் முற்றாக நிராகரித்து நிற்கின்றார்.

இத்தகைய நிலைப்பாட்டைக் கொண்ட ஒரு தலைவரின் கீழ், சந்திரிகாவின் தீர்வுப் பொதியை நடைமுறைப்படுத்துவதாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று மகிந்தவுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிபந்தனை விதிப்பது செல்லாக்காசு. அறப் போராட்டம் தவிர தமிழர்களுக்கு மீட்சி தரும் வழி வேறு ஏதுமில்லை.

# ஆளுநரின் பிடியில் வடக்கு மாகாணசபை!

இந்துமதி



வடக்கு மாகாண சபையின் நிர்வாகம் ஆளுநரின் ஆளுகையின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. மாகாண சபையின் ஆயுட்காலம் முடிவடைந்த மறுநாளே ஆளுநர் தமது அதிகாரத்தைக் கையிலெடுத்துக் கொண்டார். மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் மாகாணசபையின் நிர்வாகத்தைக் கடந்த ஐந்து ஆண்டுகளாகக் கவனித்து வந்திருந்தனர். தற்போது தனியொருவர் அதைக் கவனிக்கப் போகின்றார்.

வடக்கைப் பொறுத்தவரையில் அந்த மாகாண சபையினரின் நிர்வாகத்தில் மக்கள் திருப்தியடையாத போதிலும் தம்மால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் செயற்பாடுகளை அவதானித்தே வந்துள்ளனர். அதிகாரங்கள் வழங்கப்படாமையால் தம்மால் எதுவுமே செய்ய முடியவில்லையென்ற காரணத்தைக் கூறியே காலத்தைக் கடத்தி விட்டனர் மக்கள் பிரதிநிதிகள். ஆனால் தமக்குரிய வரப்பிரசாதங்களைப் பெறுவதில் அவர்கள் மிகுந்த விழிப்புடன் செயலாற்றியுள்ளனர். இதனால் மாகாணசபை மக்களுக்கானதா? அல்லது மக்கள் பிரதிநிதிகளுக்குரியதா? என்ற சந்தேகமும் எழுந்தது.

### சனியன் அகன்றதாகவே மக்கள் கருதுகின்றனர்


ஏழரைச் சனியன் எம்மைவிட்டு அகன்றுவிட்டதென மக்கள் கூறும் அளவுக்கு மாகாண சபையின் நிர்வாகம் சீர்கேடுகள் நிறைந்து காணப்பட்டது. அங்கு ஊழல் மோசடிகளும், அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தியமையும் நிறையவே இடம்பெற்றுள்ளன. மக்களின் வரிப்பணம் வீணடிக்கப்பட்டதே தவிர மாகாணசபையால் மக்களுக்கு எந்தவிதமான நன்மையும் கிடைக்கவில்லை. இந்த நிலையில், சிறப்பாகச் செயற்பட்டு மாகாணத்தின் வளர்ச்சியை மேம்படுத்துவதற்கும் தன்னுடைய கீர்த்தியை நிலைநிறுத்துவதற்கும் ஆளுநர் முயல்வார். மாகாணத்தின் சகல அதிகாரங்களையும் அவர் கொண்டிருப்பதால் இதைச் செய்வதில் அவருக்குத் தடை எதுவும் இருக்கப் போவதில்லை. ஒரு பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களுக்கு எல்லாவற்றையும் விட அவர்களின் பாதுகாப்பே முதன்மையானது. ஆனால் யாழ்ப்பாணம் உட்பட வடக்கின் சில மாவட்டங்களில் இதைக் காண முடியவில்லை. குறிப்பாக வாள்வெட்டு, திருட்டு, கொள்ளை, கொலை என்பன இங்கு இடம்பெற்று வருகின்றன. யாழ். குடாநாட்டில் ஊரெழு என்ற கிராமத்தில் கொலை வெறிபிடித்த கும்பல் ஒன்றினால் மகனைப் பாதுகாக்கச் சென்ற தாயொருவர் அடித்துக் கொல்லப்பட்டிருக்கிறார். ஒரு பெண் என்றும் பார்க்காமல் அந்தத் தாய் கொல்லப்பட்டதை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

### மக்களின் பாதுகாப்புக்காகப் பணியாற்றலாம்

வாள்வெட்டுக் குழுக்களின் அடாவடித் தனங்கள் அளவு கணக்கற்று அதிகரித்து விட்டன. பொலிஸாரால் இவற்றை முழுமையாகக் கட்டுப்படுத்த முடியவில்லை என்பதுதான் உண்மையாகும். இதற்குரிய காரணங்களைப் புரிந்துகொள்ள முடியவில்லை. பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படாமையால் தம்மால் எதுவுமே செய்ய முடியாதென வடக்கு மாகாண சபையும் கையை விரித்திருந்த நிலையில், பொலிசாரும் இந்த விடயத்தில் சரிசரச் செயற்பட்டிருக்காதது, மக்களை மிகவும் பாதிப்புக்குள்ளேயே அமிழ்த்தி வைத்திருக்கிறது. இதே வேளை வடமாகாணத்தின் அதிகாரங்கள் தமது கைகளில் வந்து மூன்றே மாதங்களில் வாள்வெட்டுக் குழுக்களின் அட்டகாசங்களை அடக்கிக் காட்டுவதாக ஆளுநர் தெரிவித்ததாகத் தகவல்கள் வெளிவந்தன. இந்த அறிவிப்புத் தொடர்பாக முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஆளுநருக்கு எதிராக விமர்சனங்களை வெளியிட்டிருந்தார். என்னதான் இருந்தாலும் இந்த விடயத்தில் தான் சொன்னதை நிறைவேற்றி வைப்பது ஆளுநரின் முக்கிய கடமையாகும். இதைவிட வடக்கில் நிலையெடுத்து வருகின்ற கேரளாக் கஞ்சாவையும் தடுத்து நிறுத்துவதும், முற்றுப்புள்ளி இடுவதும் அவரது முக்கிய கடமைகளில் ஒன்றாகும். மக்களின் வாழ்வியலுக்குப் பாதகமளிக்கின்ற இத்தகைய விடயங்களைத் தேடியறிந்து தீர்ப்பதுடன், அடுத்த வடக்கு மாகாண சபைக்கான தேர்தலை உடனடியாக நடத்துவதற்கு முன்னின்று உழைப்பதற்கும் அவர் முன்வர வேண்டும்.

### ஊழல்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கலாம்

கடந்த மாகாணசபையின் நிர்வாகத்தில் ஊழல்கள் இடம்பெற்றதாகக்கூறி நான்கு அமைச்சர்களின் பதவிகள் பறிக்கப்பட்டன. ஆனால் இது தொடர்பாக மேற்கொண்டு நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. அத்துடன் பளையில் மாகாணசபையின் ஏற்பட்டில் அமைக்கப்பட்ட காற்றாலை தொடர்பாகவும் ஊழல் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டபோதிலும் பின்னர் அந்த விடயம் அமுக்கப்பட்டுவிட்டது. இதில் மாகாணசபைக்குப் பெரும் நட்டம் ஏற்பட்டதாகவும் கூறப்பட்டது. ஆகவே இவை தொடர்பாக ஆளுநர் முழுமையான விசாரணைகளை முன்னெடுத்துக், குற்றவாளிகளைச் சட்டத்தின் முன்பாக நிறுத்த வேண்டும். இதைவிட சில மாகாணசபை உறுப்பினர்களின் கடந்தகால நடவடிக்கைகள் தொடர்பாகவும் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. இவை தொடர்பாகவும் ஆராயப்படுதல் வேண்டும். கடந்த மாகாணசபையின் நிர்வாகம் சிறப்பாகச் செயற்படவில்லையென்ற குற்றச்சாட்டுக்கள் வடபகுதி மக்களால் தெரிவிக்கப்பட்டது. ஆளுநருக்கும் இது தெரியும். அவர் அதற்கான காரணங்களைக் கண்டறிந்து, இனி வரப்போகின்ற புதிய மாகாண சபை உறுப்பினர்களுக்கு அதுசார்ந்த ஆலோசனைகளை வழங்க முடியும்.



எது எப்படியிருப்பினும், ஆளுநரும், ஆட்சிக்கு வரப்போகின்றவர்களும் மக்களுக்குச் சிறப்பான சேவையை வழங்க வேண்டும். அதைவிடுத்துக் கடந்த ஆட்சியாளர்களைப்போல் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டுத் தமது வயிற்றை வளர்ப்பதற்காக மக்களின் வயிற்றில் அடிப்பதைச் செய்யாதிருக்க வேண்டும். இப்போது ஆளுநரின் கைக்கு வந்திருக்கின்ற மாகாணசபையின் போக்கு எப்படியிருக்கப்போகின்றது என்று காலவோட்டத்தில் நாம் அறிந்து கொள்ள முடியும்.

# விடுதலைப் போராட்டத்தின் ஆத்மம் ஆகுதியான அரசியல் போராளி...!

மு.ஈழத்தமிழ்மணி

ஆட்சியாளர்களால் ஒடுக்கப்பட்டு வருகின்ற தமிழர்களுக்காகக் குரல்கொடுக்கவேண்டியும், அவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கவும் போராடிய தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளரான சு.ப.தமிழ்ச்செல்வன் இராணுவ விமானக் குண்டுவீச்சு மூலம் கொல்லப்பட்டிருந்தார். ஆனாலும், அவர் இன்றும் தமிழ்மக்களின் மனங்களில் நித்திய புன்னகையுடன் வீற்றி ருக்கின்றார். தமிழ்மக்களின் விடுதலைக் கனவைச் சுமந்து, விடுதலைப் போராட்டத்தில் பங்காற்றிய அரசியல் போராளியான இவர் ஏழு வருட காலங்கள் வரையில் ஆயுதப் போராளியாகவும், இருபத்தியொரு வருடகாலம் வரையில் அரசியல் போராளியாகவும் இருந்தவர். அவர் கொல்லப்பட்டுப் பதினொரு வருடங்கள் நிறைவாகின்றன. அவரை மனங்கொள்கிறது இந்த ஆக்கம்.



'தினேஸ்' என்ற பெயருடன் 18வயதில் விடுதலைப்புலிகள் அமைப்புடன் இணைந்துகொண்ட காலத்தில் ஆயுதப் பேராளியகவே அவர் செயற்பட்டார். அரச படைகளை எதிர்த்துப் பெரும் தாக்குதல்களை மேற்கொண்டு தனது திறமைகளைப் பல தடவைகளில் தலைமைத்துவத்துக்கு வெளிப்படுத்தினார். விடுதலைப் புலிகளின் தலைமை தமிழ்ச்செல்வன் மீது பெருமதிப்பு வைத்திருந்ததையடுத்து அரசியல்துறைப் பொறுப்பாளராக அவர் நியமிக்கப்பட்டார். அதற்கிடையில் அவர் தன்னுடைய கால் ஒன்றையும் சண்டைக் களத்தில் இழந்திருந்தார். வலது கையில் ஊன்றுகோல் தாங்கிய அவரது உடலும் உள்ளமும் எமது இனத்தின் மீதான நகர்வாகவே இறுதிவரை இருந்தது.

1993ஆம் ஆண்டிலிருந்து 2007ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 2ஆம் திகதி அதிகாலை வரையில் விடுதலைப் போராட்டத்துக்கு அரசியல் ரீதியாக அவர் ஆற்றிய பணிகள் காத்திரமானவை.

### ஆற்றல் பல நிறைந்தவர் தமிழ்ச்செல்வன்

புலிகளின் தலைவரது யதார்த்தபூர்வமான சிந்தனைகளையும் செயற்பாடுகளையும் புடம்போட்டுச் செயற்படுத்தக்கூடிய அறிவாற்றல் கொண்டவராகத் தமிழ்ச்செல்வன் இருந்தார். விடுதலை இயக்கத்தின் அரசியல் நகர்வுகள் மிகக் கடுமையானவை. பரப்புரைகள் முன்னெடுப்பு, பன்னாட்டையும் போராளிகளையும் சமகாலத்தில் சமாளிக்கின்ற திறமை, அரசியல் கொள்கைகளை நகர்த்திச் செல்லும் திறன் என்பன தமிழ்ச்செல்வனுக்குப் பெரும் சுமையாக இருக்கவில்லை. 1995ஆம் ஆண்டில் ஏற்பட்ட யாழ்ப்பாண மக்களது இடப்பெயர்வானது புலிகள் அமைப்புக்குப் பெரும் போராட்டமாக இருந்தது. ஐந்து இலட்சம் மக்கள் வரையில் இடம்பெயர்வுக்குள்ளாகி வன்னிக்குத் தஞ்சமடைந்தபோதும் தென்மராட்சிக்குள் சிக்குண்ட மக்களுக்குரிய பிரச்சினைகளைச் சமாளிக்க வேண்டிய பெரும் சுமை தமிழ்ச்செல்வனுக்கு ஏற்பட்டது. மக்களின் பிரச்சினைகளைச் சுமூகமாகத் தீர்த்த தமிழ்ச்செல்வனின் அணுகுமுறையும், தனித்திறமையும் இடம்பெயர்ந்து சென்ற மக்களுக்கு ஆறுதலை அளித்தன. இடப்பெயர்வு, நோய்த்தாக்கம், உணவுப் பிரச்சினைகள் அத்தனையையும் எதிர்கொண்டு நிறைவேற்றி முடிக்கின்ற பணிகள் அவரது கைகளிலேயே தங்கியிருந்தன.



### அரசியல் அணுகுமுறை

ஒரு புறத்தில் போர் மறுபக்கத்தில் அரசியல் பணி. இவற்றுக்கு மத்தியில் தமிழ்ச்செல்வன் வன்னிப் பெருநிலப்பரப்பைத் தனது ஆளுகைக்குள் கொண்டுவந்து தென்னிலங்கை அரசியல் தலைவர்களை திணறடிக்க வைத்தார். தமிழ்ச்செல்வனின் நிதானமான போக்கு, மென்மையான அணுகுமுறை, அவரிடம் காணப்பட்ட ஆக்கபூர்வமான சிந்தனைகள் அரவணைத்துச்செல்கின்ற மனப்பான்மை, அவரது மனதில் எழுந்து வருகின்ற கருத்துக்கள் யாவற்றுக்கும் பொருத்தமான தலைவராக அவர் விளங்கியிருந்தார். தமிழ்ச்செல்வனின் வெற்றிகரமான செயற்பாட்டுக்கு மத்தியில் அரசியல்துறைக்கான நிர்வாகக் கட்டமைப்புகள் நிலைகுலையாமலிருந்தன. புலிகள் இயக்கத்தில் ஆளுமைகொண்டவராக உயர்ந்து நின்றார். விடுதலைப் போராட்டத்துக்கு அவருடைய பணிகள் வலுவாக அமைந்திருந்தன. வன்னியின் அரசியல் நிர்வாகம் சீராக இடம்பெற்றுக் கொண்டிருந்தது.

2004ஆம் ஆண்டில் நாட்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி அரசமைத்துக்கொண்டது. இனப்பிரச்சினை சம்பந்தமான பல பேச்சுக்களை விடுதலைப்புலிகள் மேற்கொண்டபோதும் அரசுடனான, சிங்கள ஆட்சியாளர்களின் சதி வலையில் விழ்ந்து விடவில்லை. பன்னாட்டுத் தரப்புக்கள் விரித்த சதிவலைக்குள் சிக்கிக்கொள்ளக்கூடும் என்ற மக்களின் எதிர்பார்ப்பையும் உடைத்துச் சிங்கள அரசுக்கும் பன்னாட்டுக்கும் தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியிருந்ததுடன் தமிழ்ச்செல்வன் பன்னாட்டு இராஜதந்திரங்களையும் சரியாகப் புரிந்து வைத்திருந்தார். பன்னாட்டு இராஜதந்திரங்களுக்கு ஈடுகொடுத்து கொள்கையையும் இலட்சியத்தையும் தலைமையின் முடிவுகளுக்கு அமையப் பாதுகாக்கின்ற இராஜதந்திரப் போராளியாகவும் செயற்பட்டார். அவ்ருடைய அரசியல் இராஜதந்திரத்தை அரசுகளாலும் பன்னாட்டு இராஜதந்திரிகளாலும் தோற்கடிக்க முடியவில்லை. ஐக்கிய தேசியக் கட்சி அரசையும் அதன் பின்னர் ஆட்சி அமைத்த மகிந்த அரசையும் சரியாக எடைபோட்டிருந்தார்.

### அடிபணியாத தன்மையும் பிடி கொடுக்காத நுட்பமும்

தன்னுடைய அரசியல் அனுபவத்தாலும், ஆளுமையாலும் தமிழினத்தின் போராட்ட நியாயத்தன்மைகளை, அதன் தாற்பரியங்களை, கொள்கைகளை எட்டுத்திக்குகளிலும் கொண்டுசென்று அனைவருக்கும்செவ்வனே புரியவைத்திருந்தார் தமிழ்ச் செல்வன். ஜெனிவாவில் நடைபெற்ற பேச்சுக்களின்போது அரசின் போலித் திரையைக் கிழித்தெறிந்தார். அந்தப் பேச்சுக்குத் தமிழ்ச்செல்வனே தலைமை தாங்கினார். ஜெனிவா- 2ஆம் சுற்றுப் பேச்சானது நடைபெற்றபோது நோர்வே நாட்டின் சார்பாகப் பேச்சுக்கு அனுசரணையானராகச் செயற்பட்ட எரிக்சொல்ஹெய்ம் தமிழ்ச்செல்வனிடம் நீங்கள் அடுத்த கட்டப் பேச்சுக்கு ஒப்புக் கொள்ளாவிடில் பேச்சு முறிந்ததாகவே கருதப்புடும். நீங்கள் இங்கிருந்து நாட்டுக்குத் திரும்பும்போது உங்கள் பயணத்தின்போது பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாது எனக்கூறினார். உயிர் அச்சுறுத்தல்களைக் கொடுத்து விடுதலைப்புலிகளைப் பணியவைக்க முடியாது எனத் தமிழ்ச்செல்வன் பதிலளித்தார். நீங்கள் மறு பேச்சுக்குத் திகதி குறிக்காமல் போவது நல்லதல்ல என அமெரிக்க அரச தலைவர் ஜோர்ச் புஷ் கருதுகிறார் என்று எரிக்சொல்ஹெய்ம் கூற, அதற்கும்கூடத் தமிழ்ச்செல்வன் சொன்ன பதில் எரிக் சொல்ஹெய்மையும் அங்கிருந்த ராஜதந்திரிகளையும் சங்கடத்தில் ஆழ்த்தியிருந்தது. நாங்கள் அமெரிக்காவின் முன்னாள் அரசதலைவர்களான, வோசிங்டன், ஆபிரகாம் லிங்கன், வுட்ரோ வில்சன் ஆகியோர்களது கருத்துக்களில்தான் கரிசனை கொண்டுள்ளோம் என்றார். உலகத்துக்குப் பிடிகொடுக்காத மதிநுட்பம் மிகுந்த அரசியல் ராஜதந்திரியாக நடந்துகொண்ட தமிழ்ச்செல்வன் ஈழத் தமிழ்மக்களைப் பொறுத்தவரையில் ஒரு வரலாறாகும். தமிழ் மக்கள் மத்தியில் அவர் தொடர்ந்து பேசப்பட்டுக்கொண்டேயிருப்பார்.

## ஆசிரியருக்கான கடிதம்

## சம்பந்தன் ஐயாவும் அறவழிப் போராட்டமும்

கடந்த 14.10.2018 ஞாயிறு உதயனில் சம்பந்தன் ஐயாவின் அறவழிப் போராட்டம் பற்றிய செய்தி பதிப்பாகியிருந்தது. இதைப் பார்த்த எனக்குச் சம்பந்தன் ஐயா இந்த உலகத்தில்தான் இருக்கின்றாரா என்று எண்ணத் தோன்றியது. 1948ஆம் ஆண்டுக்குப் பின் தந்தை செல்வாவின் தலைமையில் அறவழிப் போராட்டங்கள் பல நடந்து வந்தன. யாவும் பயனற்றுப்போயின. மட்டுமல்ல படையினரின் அச்சுறுத்தல்களுக்கும் உள்ளாகின. முதலாவது அறவழிப் போராட்டம் காலிமுகத்திடலில் நாடாளுமன்றச் சதுக்கத்தில் ஆரம்பிக்கப்பட்டுச் சிங்கள காடையர்களின் காட்டுமிராண்டித்தனத்துக்கு உள்ளானது. இதை அன்றைய தலைமை அமைச்சர் பண்டாரநாயக்கா பார்த்து இரசித்துக்கொண்டிருந்தார். எல்லாப் போராட்டங்களும் பயனற்றுப்போன நிலையிலும், ஆட்சியில் இருந்த அரசுகள் காலத்துக்குக் காலம் கொண்டு வந்த சட்டங்களும் பல்கலைக்கழக தரப்படுத்தல் வெட்டுப்புள்ளி முறையும் இளைஞர்களைக் கொதிப்படையச் செய்தது. இவற்றின் விளைவே ஆயுதப் போராட்டம். ஆட்சியாளர்கள் சமாதான வழியில் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முயற்சிக்கவில்லை. இன்னும் சொல்லப்போனால் பகவான் புத்தரும்கூட அகிம்சையை விரும்புவதாகத் தெரியவில்லை. இந்த நிலையில் சம்பந்தன் ஐயா அறவழிப் போராட்டம் பற்றிப் புலம்புவது வேடிக்கையும் வேதனையும் அளிக்கின்றது.

*ப.யேசுபாதம்*

## மழை கால வீதிகளில் அவதானத்துடன் வாகனம் செலுத்துவார்களா?

மழை ஆரம்பித்திருக்கிறது. நம்மூர் வீதிகளைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை. நீர் தேங்கி நிற்பதாகவும், பள்ளமும், குட்டையுமாகக் காணப்படுகின்ற வீதிகளில் பஸ் போன்ற வாகனங்களைச் செலுத்துகின்ற சாரதிகள் கவனத்துடன் செயற்படுவது சிறந்தது. வீதிகளில் நீர் தேங்கி நிற்பதால், பாதாசாரிகள், மற்றும் சைக்கிள்களில் பயணம் செய்யும் தரப்பினர் மீது வீதி ஓரத்தில் தேங்கி நிற்கின்ற நீரைப் பாய்ச்சியடித்துவிட்டு வேகமெடுப்பதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். "வீதிகளின் நிலையும் அப்படி! வாகனம் செலுத்தும் சாரதிகளும் அப்படி" என்பதாக அடிமட்ட மக்கள் பலரும் மழைக்காலங்களில் இத்தகைய அசௌகரியத்துக்கு முகம்கொடுத்து மனம் நொந்து கொள்வதைக் காண முடிகின்றது. ஆகவே வாகனச் சாரதிகள் இந்த விடயத்தில் அக்கறையுடன் நடந்து கொள்வார்களா...?

*சயந்தன் புங்குடுதீவு*



# ஜமால் கொலை விவகாரத்தின் எதிரொலி ஜேர்மனியைத் தொடர்ந்து சுவிஸ் அதிரடி

## சவூதிக்கு ஆயுதம் வழங்குவதை நிறுத்தியது

பேர்ன்.நவ.2
பத்திரிகையாளர் ஜமால் கஷோகிஜி கொலைவழக்கைக் கருத்தில் கொண்டு சவூதிக்கான ஆயுத ஏற்றுமதியை நிறுத்துவதாக ஐரோப்பிய நாடான சுவிட்சர்லாந்து தெரிவித்துள்ளது. இது குறித்து சுவிட்சர்லாந்தின் பொருளாதாரத் துறைக்கான செய்தித் தொடர்பாளர் கூறும்போது, 'சவுதிக்கு ஆயுத ஏற்றுமதி தற்காலிகமாக நிறுத்தப்படுகிறது. ஜமால் கொலையில் அடுத்தடுத்துத் தெரியவரும் முன்னேற்றங்கள் தொடர்ந்து இந்த முடிவு திரும்ப பெறப்படலாம்' என்றுள்ளார். ஜமாலின் கொலை தொடர்பாக, பிரான்ஸ், அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளும் சவூதிக்கு எதிராக பொருளாதாரத் தடை விதிக்கப்படும் என்று எச்சரித்தன. இதில் சவூதிக்கான தன்னுடைய ஆயுத ஏற்றுமதி நிறுத்தப்படும் என்று ஜேர்மனி அறிவித்தது. இந்த நிலையில் ஜேர்மனியை அடுத்து சுவிட்சர்லாந்தும் சவூதிக்கு ஆயுதம் வழங்குவது நிறுத்தப்படும் என்று தெரிவித்துள்ளது.

**பின்னணி**
அமெரிக்காவிலுள்ள 'வோஷிங்டன் போஸ்ட்' பத்திரிகையில் சவூதி அரசை விமர்சித்தும் குறிப்பாக அதன் இளவரசர் முகமது பின் சல்மானை விமர்சித்தும் கட்டுரைகளை எழுதி வந்தவர் ஜமால்.
துருக்கியைச் சேர்ந்த பெண்ணை ஜமால் திருமணம் செய்யவிருந்த நிலையில் துருக்கி இஸ்தான்புல் நகரிலுள்ள சவூதித் தூதரக அலுவலகத்துக்குச் சென்றபோது காணாமல் போயிருந்தார். இது தொடர்பாக, சவூதியைச் சேர்ந்த 15 பேரின் பெயரைத் துருக்கி வெளியிட்டது. ஜமாலைச் சவூதிதான் கொலை செய்திருக்கிறது என்று துருக்கி உறுதியாகக் கூறியதுடன், ஆதாரத்தையும் வெளியிட்டது. துருக்கியில் உள்ள சவுதி அரேபியா தூதரகத்தின் உள்ளே ஜமாலின் விரல்கள் துண்டிக்கப்பட்டு சித்ரவதை செய்யப்பட்டு, பின்னர் அவரது தலை துண்டிக்கப்பட்டு கொடூரமாகக் கொலை செய்யப்பட்டதாகவும் துருக்கி குற்றம் சாட்டியது. இதையடுத்து ஜமால் கொல்லப்பட்டதை சவூதி ஒப்புக் கொண்டது. இந்த விவகாரம் பன்னாட்;டு அளவில் சவூதிக்குப் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

# 3குழந்தைகள் பெற்றால் இலவச நிலம்! இத்தாலி அரசு ஆச்சரியமான அறிவிப்பு



உரோம்.நவ.2
குழந்தை பெறுவதை ஊக்குவிப்பதற்காகப் புதிய திட்டங்களை இத்தாலி அரசு உருவாக்க உள்ளது. அதன்படி 3ஆவது குழந்தை பெற்றால் அவர்களுக்கு இலவசமாக விவசாய நிலம் வழங்கலாம் என்று முடிவெ டுத்துள்ளது இத்தாலி அரசு.
ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் குழந்தை பிறப்பு விகிதம் குறைந்து வருகிறது. எனவே அந்த நாடுகள் பிறப்பு விகிதத்தை அதிகரிப்பதங்காகப் பல்வேறு திட்டங்களை உருவாக்கி வருகின்றன. ஐரோப்பிய நாடுகளிலே இத்தாலியில் தான் குழந்தை பிறப்பு விகிதம் மிக குறைவாக இருக்கிறது. கடந்த ஆண்டு அந்த நாட்டில் 4இலட்சத்து 66 ஆயிரம் குழந்தைகள் மட்டுமே பிறந்துள்ளன. குழந்தை பிறப்பு குறைவாக இருப்பதால் அங்கு குழந்தைகள், இளைஞர்களை விட முதியவர்களே அதிகமாக உள்ளனர். அந்த நாட்டில் பல ஆண் பெண்கள் ஒன்று சேர்ந்து குடும்பமாக வாழ்கிறார்கள். ஆனால் அவர்கள் திருமணம் செய்து கொள்வது இல்லை.
திருமணம் செய்தாலும் குழந்தை பெற்றுக் கொள்வதில் ஆர்வம் காட்டுவது இல்லை. இது தான் பிறப்பு வீதம் குறைந்திருப்பதற்கு முக்கிய காரணமாக இருக்கிறது. மேலும், தம்பதியினருக்கும் குழந்தை பிறப்பதும் குறைவாகவே இருக்கிறது. ஒன்றிரண்டு குழந்தைகளுக்கு மேல் பெற்றுக்கொள்ள விருப்பம் இல்லாமலும் பலர் குழந்தை பெறுவதை தவிர்த்து விடுகிறார்கள்.
எனவே குழந்தை பிறப்பை ஊக்குவிப்பதற்காக புதிய திட்டங்களை அரசு உருவாக்க உள்ளது. அதன்படி 3ஆவது குழந்தை பெற்றால் அவர்களுக்கு இலவசமாக விவசாய நிலம் வழங்கலாம் என்று முடி வெடுத்துள்ளது.
இத்தாலியில் 12இலட்சம் ஏக்கர் விவசாய நிலங்கள் அரசுக்குச் சொந்தமாக உள்ளன. இவற்றை 3ஆவது குழந்தை பெற்றவர்களுக்கு வழங்கலாம் என்று முடி வெடுத்துள்ளது.
இது சம்பந்தமான அறிவிப்பு வருகிற வரவு - செலவுத் திட்ட அறிக்கையில் வெளியிடப்பட இருக்கிறது. இதை எப்படி நடைமுறைப்படுத்துவது என்பது பற்றியும் அந்த நாடு ஆராய்ந்து வருகிறது.

# இந்தோனேசியா வ...

## சோகத்தில் ஆழ்த்துகின்ற... வானூர்தியின் கறுப்புப் ...

ஜகார்த்தா.நவ.2
இந்தோனேசியாவில் விபத்துக்குள்ளான வானூர்தியின் கறுப்புப் பெட்டி கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. வேகம் குறைந்ததாலேயே அது கடலில் விழுந்ததாகப் புதிய தகவல் வெளியாகியுள்ளது. அத்தோடு விபத்துக்கு முன்னதாக, விபத்தை உணர்ந்து பயணிகள் கதறியழுவதைச் சித்திரிக்கின்ற காணொலி வெளியாகியிருக்கிறது. அது அனைவரையும் சோகத்தில் ஆழ்த்தியிருக்கிறது.





இந்தோனேசியாவின் ஜகார்த்தாவில் இருந்து பங்கால் பினாங்கு தீவுக்கு சென்ற 'லயன் ஏர்' பபணிகள் வானூர்தியானது புறப்பட்ட 13 நிமி டத்தில் கடலில் விழுந்து விபத்துக்குள்ளாகி யிருந்தது. இந்த விபத்தில் விமானத்தில் பயணம் செய்த 178 பயணிகள், 2 குழந்தைகள், ஒரு சிறுவன், 2 விமானிகள், 6 பணியாளர்கள் என எல்லாமுமாக 189 பேர் சாவடைந்திருந்தனர். வானூர்தி கடலில் விழுவதற்குச் சற்று நேரத்துக்கு முன்னர் அலைபேசியில் பதிவாகியதான காணொலி வெளியாகியுள்ளது. அதில் இயந்திரத்தின் இயக்கம் நின்று மின் விளக்கு, குளிரூட்டி, காற்றழுத்தக் கருவி போன்றவைகள் செயல்படாததால் பயணிகள் அதிர்ச்சியுடன் கதறினார்கள். இனி உயிர்பிழைக்க வழியில்லை என்று உயிர் போகும் கடைசி நிமிடத்தில் கடவுளை உருக்கமாக வேண்டி அழுவதும் தெரிகிறது. இந்தக் காணொலி உலகையே சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.



**கறுப்புப் பெட்டி கண்டுபிடிப்பு**
விபத்து நடந்தபோது விமானி அறையில் நடந்த உரையாடல்கள் வானூர்தியில் உள்ள கறுப்புப் பெட்டியில் (பிளக் பொக்ஸ்) பதிவாகி இருக்கும். இதையடுத்து, விபத்து நடந்த கடல் பகுதியில் கறுப்புப் பெட்டியைத் தேடும் பணியில் மீட்புக் குழுவினர் தீவிரமாக ஈடுபட்டனர். இந்த நிலையில் கறுப்புப் பெட்டியைக் கைப்பற்றியுள்ளதாக தேடுதலில் ஈடுபட்ட நீச்சல்காரர் ஒருவர் தெரிவித்துள்ளார். கறுப்புப் பெட்டி விமானத்தின்


பிடத்தக்... குக் க... குறைந்...

**பின்னை...**
இந்தே... விமான... கடலில்... (189 பே... விமான... தொட... விபத்து... ரம் அடி... வந்தது... யின் வ... இடத்தி... டுபிடிக்... னர் அ... நடவடி...

# அகதிக் குழந்தைகளுக்குக்... ட்ரம்ப்பின் தீர்மானத்துக்...

வோசிங்டன்.நவ.2
அமெரிக்காவில் குடியேறியுள்ள குடியுரிமை இல்லாத பெற்றோருக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கும் இனிக் குடியுரிமை வழங்கப்படாது என்ற

ட்ரம்... எதி...



# வானூர்தி விபத்து

## ...ின்ற காணொலிப் பதிவு
## ...புப் பெட்டி கண்டுபிடிப்பு

பெட்டி
கடலில்
முன்ன
ணொலி
கிறது.






தகவல்களைப் பதிவு செய்யும் சாதனமா அல்லது விமானி அறை (காக்பிட்) உரையாடல்களைப் பதிவு செய்யும் சாதனமா என்பது இன்னும் தெரியவில்லை. பொதுவாக இவை இரண்டுமே கறுப்புப் பெட்டியாகக் கருதப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனாலும் குறித்த வானூர்தி விபத்துக்குக் காரணம் வானூர்தியின் வேகம் குறைந்தமையே என்றும் கூறப்படுகின்றது.

**பின்னணி**

இந்தோனேசியாவில் லயன் எயார்லைன்ஸ் விமான நிறுவனத்துக்குச் சொந்தமான விமானம் கடலில் விழுந்ததில் அதில் பயணித்த அனைவரும் (189 பேர்) சாவடைந்திருந்தனர். விமானத்துக்கும் விமான கட்டுப்பாட்டு அறைக்கும் உள்ள தகவல் தொடர்பு பதிவின்படி அந்த விமானம் விபத்துக்குள்ளானபோது 3 ஆயிரம் முதல் 5 ஆயிரம் அடி உயரத்தில் பறந்து கொண்டிருந்தது தெரிய வந்தது. அதையடுத்து, ஜகார்த்தாவின்; கடல் பகுதியின் வடகடலில் உள்ள தன்ஜூங் பிரியோக் என்ற இடத்தில் விமானத்தின் உடைந்த பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. மீட்புப் படையினர், கடற்படையினர் அந்தப் பகுதிக்கு விரைந்து சென்று தேடுதல் நடவடிக்கையைத் தொடங்கினர். உலங்கு வானூர்திகள் மூலமும் தேடுதல் பணிகள் நடைபெற்றன. மீட்புப் பணிகளில் இந்தோனேசிய கடற்படையைச் சேர்ந்த கேஆர்ஜ ரிஜெல்933 என்ற கப்பல் ஈடுபட்டது.

சுமார் 40 ஆழ்கடல் நீச்சல் வீரர்கள் கடலில் இறங்கி தேடினர். அதைத் தொடர்ந்து விமானம் விழுந்த பகுதியில் பயணிகளின் உடைமைகள் கடலில் மிதப்பதை மீட்புப் படையினர் கண்டுபிடித்து அவற்றைக் கைப்பற்றினர். விமானத்தின் உடைந்த பாகங்கள்கடலில்மிதப்பதுகண்டுபிடிக்கப்பட்டதால், மீட்புப் படை அந்தப் பகுதிக்கு விரைந்தது. ஜகார்த்தா, பாண்டுங், லம்பங் ஆகிய பகுதிகளில் இருந்து படகுகள், உலங்குவானூர்திகள்;, கடற்படை கப்பல்கள் தேடும் பணிக்கு அனுப்பப்பட்டன. மீட்புக் குழுவினர் பயணிகள் சிலரது உடல்கள், ஆவணங்களை மீட்டுள்ளனர். இராணுவ வீரர்கள், மீனவர்கள் என 300க்கும் மேற்பட்டோர் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். 3 சிறப்பு கப்பல்களும் தேடுதல் வேட்டையில் இறங்கியுள்ளன.

விமானம் சில மாதங்களுக்கு முன்புதான் பராமரிப்புப் பணிக்கு அனுப்பப்பட்டது. இந்த நிலையில் மீண்டும் அதில் தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டுள்ளது. ஆயினும் கறுப்புப் பெட்டியைக் கண்டுபிடித்த பிறகே விமான விபத்துக்;கான முழு விவரங்கள் தெரிய வரும் என்றும் கூறப்படுகின்றது.



# ஆப்கானிஸ்தானில் உலங்கு வானூர்தி விழுந்து நொருங்கியது

## பயணம் செய்த அரச உயர் அதிகாரிகள் அனைவரும் சாவு


காபூல்.நவ.2 ,

ஆப்கானிஸ்தானில் அரச உயரதிகாரிகள் சென்ற இராணுவ உலங்கு வானூர்தி மோசமான வானிலை மாற்றம் காரணமாக விழுந்து நொருங்கியுள்ளது. அதன்போது அதில் பயணம் செய்த 25 பேர் சாவடைந்திருக்கின்றனர். ஆப்கானிஸ்தான் நாட்டின் பரா மாகாணத்தில் இருந்து அருகாமையில் உள்ள ஹேரட் மாகாணத்தை நோக்கி பரா மாகாணத் தலைவர் மற்றும் இராணுவ உயரதிகாரிகள் 25 பேர் ஓர் இராணுவ உலங்கு வானூர்தியில் சென்று கொண்டிருந்தனர். இரண்டு மாகாணங்களுக்கும் இடையிலான அனார் டாரா மாவட்டத்துக்கு உட்பட்ட மலைப் பகுதி வழியாக உலங்கு வானூர்தி சென்றிகொண்டிருந்தபோது மோசமான வானிலை உணரப்பட்டிருக்கிறது. கட்டுப்பாட்டை இழந்த உலங்கு வானூர்தி கீழே விழுந்து நொருங்கியது. இந்த விபத்தில் வானூர்தியில் பயணித்த 25 பேரும் சாவடைந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# சாவுத்தண்டனைக் கைதி அசியா பீபி விடுதலை பாகிஸ்தானில் எதிர்ப்புக்களும் கலவரங்களும்

## வன்முறையாளர்களுக்கு இம்ரான் கான் எச்சரிக்கை

இஸ்லாமபாத்.நவ.2



மத அவமதிப்பு வழக்கில் விடுவிக்கப்பட்ட கிறிஸ்தவப் பெண்ணுக்கு எதிராகப் போராடுபவர்களை, மாநில அரசுடன் மோத வேண்டாம் என பாகிஸ்தான் தலைமை அமைச்சர் இம்ரான் கான் எச்சரித்துள்ளார். பாகிஸ்தானில் லாகூர் புறநகர் பகுதியை சேர்ந்தவர் ஆசியா பீபி. அந்த நாட்டின் சிறுபான்மையி னத்தவரான கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த இவர், தனது அயல் வீட்டாருடன் ஏற்பட்ட முரண்பாட்டின்போது முகம்மது நபியைத் தரக்குறைவாகப் பேசியதாக மத அவமதிப்பு வழக்கை எதிர்கொண்டு வந்தார். இதில் அவருக்குச் சாவுத் தண்டனை விதித்து 2010ஆம் ஆண்டு அந்த நாட்டின் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இதையடுத்து, சிறையில் அடைக்கப்பட்ட ஆசியா பீபி, தனது சாவுத் தண்டனையை நீக்கம் செய்யுமாறு பாகிஸ்தான் உயர் நீதிமன்றில் மேல்முறையீடு செய்திருந்தார். இவருடைய மேல்முறையீட்டை உயர் நீதி மன்றத் தலைமை நீதிபதி மியான் சகிப் நிசார் தலைமையிலான 3 நீதிபதிகள் கொண்ட குழு விசாரணை நடத்தி வந்தது. முடியில் இந்த வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டது. ஆசியா பீபிக்கு விதிக்கப்பட்ட சாவுத் தண்டனையை நீக்குவதற்கு உத்தர விடப்பட்டது. சாவுத் தண்டனையில் இருந்து ஆசியா பீபியை விடுவித்து வெளியான தீர்ப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்துப் பாகிஸ்தானின் இஸ்லாமாபாத், லாகூர், கராச்சி உள்ளிட்ட பெருநகரங்களிலும் நாட்டின் பிறபகுதிகளிலும் இஸ்லாமிய அமைப்புகளைச் சேர்ந்த பலர் போராட்டங்களிலும், ஆர்ப்பாட்டங்களிலும் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில்தான், "மத அவமதிப்பு வழக்கில் விடுவிக்கப்பட்ட கிறிஸ்தவப் பெண்ணுக்கு எதிராகப் போராடுபவர்களை, மாநில அரசுடன் மோத வேண்டாம்" எனப் பாகிஸ்தானின் தலைமை அமைச்சர் இம்ரான் கான் எச்சரித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "அரசுக்கு எதிரான நடவடிக்கையில் யாரும் ஈடுபட வேண்டாம். நீதிமன்றத் தீர்ப்பை மதிக்க வேண்டுமே அன்றி மீறக்கூடாது. இது விடயமாகப் பொதுமக்களை தூண்டி விடுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்" என எச்சரித்துள்ளார். இந்தப் போராட்டங்களும், ஆர்ப்பாட்டங்களும் கலவரமாகவும், வன்முறையாகவும் மாறாமல் இருப்பதற்காகப் பதற்றம் நிறைந்த பகுதிகளில் ஏராளமான பொலிஸ் மற்றும் உதவி இராணுவப் படைகள் குவிக்கப்பட்டு ள்ளன.



# ...குக் குடியுரிமை கிடையாது
# ...துக்கு வலுக்கும் எதிர்ப்பு



ட்ரம்ப்பின் தீர்மானத்துக்கு அமெரிக்கா எங்கிலும் எதிர்ப்பு வலுத்து வருகிறது. ட்ரம்ப்பின் இந்தத் தீர்மானத்துக்கு அந்த நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து நாடாளுமன்ற உறுப்பினர்களின் சபாநாயகர் பால் ராய்ன் கூறும்போது, "உங்கள் உத்தரவின் மூலம் குடிமக்களின் பிறப்புரி மையைத் தடுக்க முடியாது. முன்னாள் அதிபர் ஒபாமா கொண்டு வரவிருந்த புதிய குடியு ரிமைச் சட்டத்தையும் நாங்கள் எதிர்த்தோம்" என்றார். அமெரிக்கக் குடியுரிமை நிர்வாக இயக்குநர் பெத் வெர்லின் கூறும்போது, "அமெரிக்கப் பிறப்புரிமை என்பது நம்மை ஒரு தேசத்தைச் சேர்ந்தவர்களாக வரையறுக்கிறது.

மேலும் இது அமெரிக்கப் பாரம்பரியம் மற்றும் வரலாற்றின் ஒரு முக்கிய பகுதியாக உள்ளது. நடைமுறையில் இருக்கும் பிறப்புரி மைச் சட்டத்தை நீக்குவதன் மூலம் குடியுரிமைப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. எந்த அதிபராலும் பேனாவைக் கொண்டு அரசமைப்பைத் திருத்த முடியாது. புதிய அரசமைப்புச் சட்டத்தைக் கொண்டு வருவதன் மூலமே இதை நீக்க முடியும்" என்றார். "அது மாத்திரமல்லாமல், ட்ரம்ப்பின் இந்தத் திட்டத்துக்கு அவரது சொந்தக் கட்சியான குடியரசுக் கட்சியிடமிருந்தும் எதிர்ப்புகள் எழுந்துள்ளன.

**பின்னணி**

அமெரிக்காவில் இடைத்தேர்தலுக்கு நடக்கவிருக்கிறது. அமெரிக்க அரசமைப்புச் சட்டத்தின் 14ஆவது திருத்தத்தின்படி, அந்த நாட்டில் பிறக்கும் குழந்தை களுக்கு அமெரிக்கக் குடியுரிமை பெறுவதற்கான சட்ட நடைமுறை இருந்து வருகிறது. இந்த நிலையில், அகதிகளுக்கு விதிக்கப்பட உள்ள புதிய திட்டங்கள் குறித்து தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் பேசியிருந்தார். அப்போது, குடியுரிமை இல்லாது அமெரிக்காவுக்குள் நுழைந்தி ருக்கின்ற பெற்றோருக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு இனிக் குடியுரிமை கிடையாது என்ற புதிய உத்தரவை விதிக்க விரும்புகிறேன். எனது முடிவை வெள்ளை மாளிகை வழக்கறிஞர் பரிசீலனை செய்து வருகின்றார்" என்றிருந்தார்.

# அப்போது சூர்யாவுக்கு இப்போது கார்த்திக்கு பாடுகிறார் எஸ்.பி.



கார்த்தி நடிப்பில் தற்போது உருவாகி வரும் படம்'தேவ்'. இதில்இவருக்குஜோடியாகரகுல் ப்ரீத் சிங் நடிக்கிறார்.
அறிமுக இயக்குநர் ரஜத் ரவிஷங்கர் இயக்கும் இந்தப் படத்துக்குக் ஹாரிஸ் ஜெயராஜ் இசையமைக்கிறார்.
இந்தப் படத்தின் படப்பிடிப்புகள் முடிந்து பின்னணி வேலைகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. இந்த நிலையில், ஹாரிஸ் ஜெயராஜ் இசையில் ஒரு பாடலைப் பாடி இருக்கிறார் எஸ்.பி. பாலசுப்ரமணியம்.
இவர் இதற்கு முன் சூர்யாவுக்காகக் ஹாரிஸ் ஜெயராஜ் இசையில் வெளியான '7ம் அறிவு' படத்தில் 'யம்மா யம்மா...' என்ற பாடலை பாடியிருந்தார்.
இந்தப்படத்தின் முதல் சுவரொட்டியை நடிகர் சூர்யா சில தினங்களுக்கு முன்பு வெளி யிட்டார். இது இரசிகர்களிடையே அதிகம் வரவேற்பு பெற்றது.

# f முட்டாள் அரசியல்




இங்கிலாந்து மகாராணியை அவரது அரண்மனையில் சந்தித்த மைத்திரி ஐயா..
"உங்கள் குடும்பம் எப்போதும் அதிகாரத்தில் தொடர்ந்துஇருப்பதுபோல,நானும்தொடர்ந்து ஆட்சியில்இருக்கஎனக்குஏதாவதுயோசனை சொல்ல முடியுமா?" என்றார்.
"சரி" என்றராணி, "அதற்குப்புத்திசாலிகளைஎப்போதும் உங்கள் பக்கத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்" என்றார்.
மைத்திரி குழப்பமாகி, "ஆனால் என்னைச் சுற்றி இருப்பவர்கள் புத்திசாலி என்று நான் எப்படித் தெரிந்து கொள்வது?" என்றார்.
ராணி, "மிக எளிது நீங்கள் ஒரு புதிர் சொல்லி பதில் கேளுங்கள்" என்று சொல்லிக்கொண்டே,
தன்னுடைய அறைக்குள் உள்ள அழைப்பு மணியை அழுத்தி, "டேவிட் கமரூன், தயவுசெய்து, என் அறைக்கு ஒரு நிமிடம் வர முடியுமா?" என்றார்.
டேவிட் கமரூன் அறைக்குள் வந்து, "சொல்லுங்கள் அம்மா" என்றார்.
ராணி சிரித்துக் கொண்டே கேட்டார், "டேவிட், உங்கள் அம்மா, அப்பாவுக்கு ஒரு குழந்தை இருக்கிறது. அது உங்கள் சகோதரன் அல்ல, உங்கள் சகோதரி அல்ல. அப்போ அது யார்?"
ஒரு கணமும் யோசிக்காமல், டேவிட் கமரூன், "அது நான்தான் மேடம்" என்றார்.
"நன்றி டேவிட் !" என்று கூறி ராணி அவரை அனுப்பி விட்டு, புன்னகையுடன் மைத்திரி பக்கம் திரும்பி "பார்த்தீர்களா?" என்றார்.
மைத்திரி தன்னுடைய சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு இலங்கை வந்தவுடன் கேட்டார்,
"சம்பிக உங்கள் அம்மா, அப்பாவுக்கு ஒரு குழந்தை இருக்கிறது. அது உங்கள் சகோதரன் அல்ல, உங்கள் சகோதரி அல்ல. யார் அது?"
"உறுதியாகத்தெரியவில்லை. நாளைக்குச்சொல்றேன்" என்ற சம்பிக்க அனைவரிடமும் கேட்டும் பதில் தெரியாததால் அனுர குமாரவிடம் ஓடி,
"நீங்கள் ஒரு புதிருக்குப் பதில் சொல்ல வேண்டும். உங்கள் அம்மா, அப்பாவுக்கு ஒரு குழந்தை இருக்கிறது. அது உங்கள் சகோதரன் அல்ல, உங்கள் சகோதரி அல்ல. யார் அது?" என்று கேட்டார்.
அனுர குமார, "அது நான்தான்!" என்றார்.
விடயத்தைக்கேள்விப்பட்டசம்பிக்கமைத்திரியிடம்ஓடி, "எனக்கு விடை தெரியும்" என்றார்.
"சொல்லு".
"அனுரகுமாரதான் அது".
மைத்திரிஅவரைக்கன்னத்தில்அறைந்துவிட்டுச்சொன்னார், முட்டாள்!அது டேவிட்கமரூன்டா!"முட்டாப்பயலுக கிட்ட நாட்டக் கொடுத்துட்டு நாம படுற பாடிருக்கே..









# இன்றைய நாள்

**மேடம்:** பகைமை குணம் உள்ளவரிடம் விலகுவது நல்லது. தொழிலில் திட்டமிட்ட இலக்கை அடைய கூடுதல் அவகாசம் தேவை. இலாபம் ஓரளவுக்கு இருக்கும். குடும்ப செலவு அதிகரிக்கும்.

**இடபம்:** மனதில் உற்சாகம் நிறைந்திருக்கும். பணியில் திறமையை வளர்த்து கொள்வீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை திருப்திகரமாக இருக்கும். மேலதிக வருமானம் கிடைக்கும்.

**மிதுனம்:** எதிர்பாராமல் சிரமம் குறுக்கிடலாம். தொழில் வியாபா ரத்தில் முன்னேற்றம் பெற விடா முயற்சி தேவை. இலாபம் சுமார். பணத் தேவை அதிகரிக்கும்.

**கடகம்:** நண்பரிடம் கேட்ட உதவி கிடைக்கும். தொழில் வியாபாரம் வளர்ச்சிக்கான நவீன மாற்றம் செய்வீர்கள். பணவரவு அதிகரிக்கும். பெண்கள் கலையம்சம் நிறைந்த பொருள் வாங்குவர்.

**சிங்கம்:** இனம் புரியாத குழப்பம் ஏற்படலாம். குடும்பத்தினரின் ஆலோசனை நல்ல மாற்றம் தரும். தொழிலில் கூடுதல் கவனம் செலுத்துவீர்கள். சீரான இலாபம் கிடைக்கும்.

**கன்னி:** முக்கியப்பணி நிறைவேற உற்சாகமுடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்திப்பணி செய்வீர்கள். லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் சலுகை பெறுவர்.

**துலாம்:** உறவினர் அன்பும் ஆதரவும் கிடைக்கும். தொழிலில் வளர்ச்சி திருப்திகரமாக இருக்கும். நிலுவைப் பணம் வசூலாகும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர். அரசியல்வாதிகளுக்கு எதிர்பார்த்த பதவி வரும்.

**விருச்சிகம்:** அக்கம்பக்கத்தினரால் சிரமம் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் இருக்கிற அனுகூலத்தன்மை பாதுகாப்பது நல்லது. பணவரவு ஓரளவுக்கு இருக்கும்.

**தனுசு:** குடும்ப பிரச்னையை பிறரிடம் பேச வேண்டாம். தொழிலில் நிலுவைப்பணி நிறைவேற்றுவதால் லாபம் சீராகும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர்.

**மகரம்:** நண்பரின் குறையை சரி செய்வீர்கள். உங்களைப் பற்றி நல்ல மதிப்பீடு உருவாகும்.தொழில் வியாபாரத் தொடர்பு பலம் பெறும். நிலுவைப் பணம் வசூலாகும்.

**கும்பம்:** குடும்ப பெரியவர்களின் வழிகாட்டுதலால் முன்னேறுவீர்கள். தொழிலில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும்.

**மீனம்:** மனதில் குழப்பம் உருவாகலாம். தகுதி மீறிய செயல் எதிலும் ஈடுபட வேண்டாம். தொழிலில் உற்பத்தி விற்பனை சீராகும். சேமிப்புத் தொகை திடீர் செல வால் கரையும்.

## சுயமொழி

நட்புத் துரோகிகளுக்கும் நண்பர்கள் உண்டு.

நீ சிரித்தால் உலகமும் உன்னுடன் சிரிக்கும். நீ அழுதால்அவனவனுக்குஆயிரம்பிரச்சினைகள்.

தமிழன் என்று சொல்லடா! இன்னொரு முறை சொல்லடா!



# கூண்டுக்கிளி தன் கதை கூறல்

ஒருசிறுவர்கூட்டமேஎன்னைப்பார்த்துமகிழ்வுடன்பாடிக் கொண்டிருந்தது. அவர்களது மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. ஆனால்எனக்குமகிழ்ச்சியேஇல்லை. ஏனெனில் நான் இருப்பதுவோ ஒரு அழகான தங்கக் கூட்டில்தான். உண்பதற்கு பலவிதமான பழங்கள். பருகுவதற்குப் பால் எல்லாம் இந்தக் கூட்டில் எனக்குக் கிடைக்கின்றன. ஆனாலும் இவை எதிலும் எனக்கு நாட்டம் ஏற்படவில்லை. ஏன் தெரியுமா? எனது உற்றார், உறவினர்கள், நண்பர்கள் என எவருமே என் அருகில் இல்லையே! எல்லையற்ற பரந்த வானிலே பறந்து திரிய யாரென்று தெரிகிறதா? நான் இப்போது கூண்டில் அடைப்பட்டிருக்கும் ஒரு பச்சைக்கிளி.

நான் பிறந்த சூழல் மிகவும் அழகான இயற்கைக் காட்சிகளைக் கொண்டது. பச்சைக் கம்பளம் விரித்தது போன்ற மலைத்தொடர்கள்இன்னிசைக்கீதம்இசைத்தபடிபாய்ந்து வரும்அருவிகள்நன்குசெழித்துவளர்ந்திருக்கும்மரங்கள் அவற்றிலே பழுத்து மணம் பரப்பும் கனிகள். அக்காட்சிகளைப் பார்த்துக் கனிகளை உண்டு நான் உல்லாசமாகப் பறந்து கொண்டிருப்பேன்.

மறுநாள் எப்போது விடியும் எனக் காத்திருப்பேன். விடிந்ததும்என்நண்பர்களுடன்சேர்ந்துகொண்டுமழலைபேசிய வண்ணம்பறப்பேன். சூரியனதுபொற்கிரகணங்களையும் தென்றல் காற்றினது இதமான வருடலையும் என்றும் மறக்க முடியாது.

மாலை வேளையும் எனக்கு விருப்பமானதுதான். சந்திரனையும், கண்சிமிட்டும் நட்சத்திரங்களையும் எனது கூட்டத்தாருடன் சேர்ந்து இரசிப்பேன். மேலும் சின்னச்சின்ன மழைத்துளிகளில் நனைய எனக்கு மிகவும் விருப்பம். அத்துளிகளில்நனைந்தபடிபறந்துசெல்லும்போது மழைத்துளி பட்டுச் சிரிக்கும் மரங்களையும் கண்டு இரசிப்பேன். உங்களைப் போன்ற குழந்தைகளும் மழையில் ஆனந்தத்தோடு நனைந்து மகிழ்வதையும் நான் கண்டு அனுபவிப்பதுண்டு. இப்போது நீங்களும் என்னைப் பார்த்து மகிழ்கிறீர்கள். ஆனால்நான்கவலைப்பட்டுக்கொண்டிருப்பது உங்களுக்குத் தெரிகிறதா? இல்லையே!

எத்தனை விதம் விதமான பழங்களை நீங்கள் எனக்கத் தந்திருக்கிறீர்கள். ஆனாலும் சுதந்திரமாகப் பறந்து திரிந்து மரங்களிலே பழுத்திருந்தும் கனிகளைத் கொத்தித் தின்பதிலுள்ள சுவை இதிலே கிடைத்திடுமா? அதுபோல் சுதந்திரமாகத் தானியங்களைக் கொத்தி உண்பதில் உள்ள சுகம் இங்கே உண்டா?

முன்பெல்லாம் சின்னஞ்சிறிய வயிற்றுக்கு உணவாகத் தானியங்களையும் தேடிச் செல்வேன். தனியாக அல்ல கூட்டமாக. பரந்த வயல் வெளிகள் எமது நிறத்தைப் போலவே பசுமையாகக் காட்சி தரும் கதிர்களில் எதைச் சுவைப்பது எனத்தெரியாது. அங்கொன்றும் இங்கொன்றுமாக கொறித்துத் திரிவோம். நாம் கூட்டமாகச்சென்று அட்டகாசம் புரிவதால் மனிதர் எம்மைக் கண்டதும் விரட்டுவார்கள். நாமும் பயந்து திரும்பிச் செல்வதாகப் போக்குக் காட்டிவிட்டு மீண்டும் அவ்விடத்துக்கே மீண்டும் வந்து சேர்ந்து விடுவோம்.


என் நிலையை உணர்ந்து எனக்கு விடுதலை பெற்றுத்தர விரும்பும் மனித உள்ளங்களை எதிர்பார்த்து என் வாழ்நாளைக்கழித்துவருகிறேன். எப்போதுஎனக்குவிடிவுகிட்டும்?




## நீர் அருந்தாத உயிரினனங்கள்

தண்ணீர் விடயத்தில் ஒட்டகம் எங்களுக்கு ஈடாக முடியாது என்று சவால் விடும் சில உயிரினங்கள் உள்ளன. வடஅமெரிக்கப் பாலைவனங்களில் வாழும் கங்காரு எலி. தன் வாழ்நாளில் தண்ணீர் அருந்துவதே இல்லை. அந்த எலிகளுக்கு வியர்வையோ நாக்கில் தண்ணீர் வடிவதோ கிடையாது. தனக்குத் தேவையான நீரை உண்ணும் விதைகளில் இருந்தே பெற்றுவிடுகின்றன.

அதேபோல ஆஸ்திரேலியப் பாலைவனங்களில் காணப்படும் 'பில்பி' என்ற பாலூட்டியும் தன் உணவில் இருந்தே நீரை எடுத்துக் கொள்கிறது.



## கல் மீன்!

உலகிலேயே அதிக விஷம்கொண்டது, கல் மீன் (Stone fish). கடலின் தரையில், பவளத்திட்டுப் பாறைகளுக்கு அருகில் வசிக்கும். தன்னுடைய துடுப்பால் மண்ணைக் கிளறும். அசையாமல் ஒரே இடத்தில் இருக்கும். அருகில் தனக்கான இரை வந்ததும், தன் உடம்பில் உள்ள முட்களால் விஷத்தைச் செலுத்தி, செயலிழக்கவைத்து, உணவாக்கிக் கொள்ளும். மனிதர்கள் மீது இதன் முள் பட்டாலும் பிழைப்பது கஷ்டம். இந்தியப் பெருங்கடலில் இந்த மீன்கள் காணப் படுகின்றன.

## சுவர்ப் பத்திரிகை

### உணவில் அவசியம் ஆறு சுவைகள்

#### துவர்ப்பு

வாழைக்காய், மாதுளை, மா, மஞ்சள், அத்திக்காய் என்பன துவர்ப்புச் சுவையுடையவை. உடல் நலத்துக்கு மிகவும் உகந்தவை. வியர்வை குருதிப் போக்கு, வயிற்றுப்போக்கைச் சரி செய்யும்.

#### கசப்பு

பாகற்காய், சுண்டங்காய், கத்திரிக்காய், வெந்தயம், பூண்டு, எள், வேப்பம்பூ, ஓமம், வெங்காயம் என்பவற்றில் கசப்புச் சுவையைப் பெறலாம். பெரும்பாலும் வெறுப்பை ஏற்படுத்தும் சுவை. ஆனால் உடலுக்கு நன்மையைத்தரக்கூடிய சுவை. நோய் எதிர்ப்புச் சக்தியாகச் செயற்படும். தாகம், உடல் எரிச்சல் ஆகியவற்றைத்தணிக்கும்குருதியைச்சுத்திகரிக்கும்.

#### உவர்ப்பு

கீரைத்தண்டு, வாழைத் தண்டு, முள்ளங்கி, பூசணி, சுரைக்காய் , பீர்க்கங்காய் போன்றவற்றில் உவர்ப்புச் சுவை மிகுதியாக உள்ளது. அனைவரும் இந்தச் சுவை தவிர்க்க இயலாதது. உமிழ் நீரைச் சுரக்கச் செய்யும் மற்றைய சுவைகளைச் சமன் செய்யும். உடன்உணவைச் சமிபாடடையச்செய்யும்.

#### புளிப்பு

எலுமிச்சை, புளிக்கீரை, இட்லி, தோசை, தக்காளி, புளி, மாங்காய், தயிர், மோர், நாரத்தங்காய் போன்றவை புளிப்புச்சுவை உடையவை. உணவின் சுவையை அதிகரிக்கச் செய்வதோடு பசியைத் தூண்டும் நரம்புகளை வலுவடையச் செய்யும்.

#### உறைப்பு


வெங்காயம், மிளகாய், இஞ்சி, பூண்டு, மிளகு, கடுகு போன்றவை காரச் சுவை கொண்டவை.

#### இனிப்பு

பழங்கள், கிழங்கு வகைகள் கரட், கோதுமை, கரும்புப் பொருள்களில் இனிப்புச் சுவை அதிகம் உள்ளது.



## வழிகாட்டுவோம்




## பூவா... தலையா?

காசை சுண்டிப் பார்த்து (Toss), முடிவு எடுக்கும் பழக்கத்தை உலகுக்கு அறிமுகப்படுத்தியவர்கள் ரோமானியர்கள். அந்தக் காலத்தில், ஜூலியஸ் சீசரின் தலை பொறித்த காசை சுண்டிப் பார்த்துதான், ரோமானியர்கள் எந்த முடிவையும் எடுப்பார்கள்.



# மூர்த்தி சிறிது கீர்த்தி பெரிது

■ மு.க.மாசிலாமணி

வட்டுக்கோட்டை உடுக்கியவளைப்பதியில் வீற்றிருந்து அருளாட்சி புரியும் மகா கணபதிப்பிள்ளையாரின் 'பெருஞ்சாந்தி திருவிழா' என விதந்து கூறப்படும் மகாகும்பாபிசேகம் மிக அண்மையில் வெகு சிறப்பாக இடம்பெற்றது. 'மூர்த்தி சிறிது கீர்த்தி பெரிது' என்பது போல வட்டுக்கோட்டையிலுள்ள பழம்பெருஞ் சிறப்புமிகு ஆலயங்களில் இதுவுமொன்று. இந்த ஆலயத்தில் குறிப்பாக 1969, 1990, 2004ஆம் ஆண்டு காலப்பகுதி மற்றும் நடப்பாண்டில் இடம்பெற்ற மகா கும்பாபிசேகப் பெருவிழாவை முன்னிட்டு ஆலயத்தில் திருப்பணிகள் பல மேற்கொள்ளப்பட்டுள்ளன. புதுப் பொலிவுடன் காட்சிதரும் ஆலயத்தின் இன்றைய எழிலான தோற்றம் இதை மிகத் தெளிவாகக் காண்பிக்கின்றது.

ஆலயக் கருவறையின் விமானம் அழகாகப் புனரமைக்கப்பட்டுள்ளதுடன், ஆங்கு மிக நேர்த்தியாகச் செதுக்கப்பட்ட வண்ணமும், அழகியல்பும் மிக்க கருங்கற் பீடத்தில், மூலமூர்த்தியாகிய மகாகணபதி தனது தரிசனம் மிகத் துலக்கமாகத் தெரியும் வண்ணம் அலங்காரமாக எழுந்தருளி வீற்றிருக்கிறார்.

மகாமண்டபத்தின் வடக்குப் பக்கமாக உற்சவ மூர்த்திகளின் பகுதியில் புதிதாகத் 'தேவசபை' அமைத்து, அதில் பஞ்சமுக ஏரம்பர் உற்று நோக்குவோரின் நெஞ்சங்களை நெகிழ வைக்கும் மிக அழகான கோலத்தில் காட்சி தருகின்றார். இத்தகைய அதி அலங்காரமான அமைப்பில் பஞ்சமுகரின் தரிசனத்தை இன்று நாம் காணுகின்றபோது உள்ளத்தில் எழுகின்ற மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. உண்மையில் இற்றைக்குப் பதின்நான்கு ஆண்டுகளுக்கு முன்பு நாட்டில் அசாதாரண சூழலும், அமைதியின்மையும் நிலவிய அக்காலச் சூழ்நிலையில் பஞ்சமுக ஏரம்பரைக் கொழும்பிலிருந்து அவரின் நிரந்தர இடத்துக்குக் கொண்டுவந்து சேர்த்த போது ஏற்பட்ட பயமும் பதட்டமும் நிறைந்த அனுபவங்கள் எங்கோ மறைந்து போயின.




புதிய உற்வச மூர்த்தியாக 2004 இல் இடம்பெற்ற கும்பாபிசேகத்தின் போது ஆலயத்தில் எழுந்தருளப்பெற்றுள்ள பஞ்சமுக ஏரம்பர் விக்கிரகம், ஐம்பொன் விக்கிரக வார்ப்புக்குப் பிரசித்திபெற்ற தமிழ்நாடு கும்பகோணத்திலிருந்து அன்பர் ஒருவர் மூலமாக 2003 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் கொழும்புக்குக் கொண்டுவரப்பட்டது. அந்த விக்கிரகத்தை உரிய இடத்துக்கு உடன் கொண்டுவந்து சேர்ப்பதற்கு அப்போதைய சூழ்நிலை இடம்தராத காரணத்தால், வெள்ளவத்தையில் சமய நிறுவனமொன்றுக்குச் சொந்தமான தியான மண்டபத்தில் பஞ்சமுகர் வைக்கப்பட்டார்.

ஐந்து மாத காலம் உருண்டோடியது. கும்பாபிசேகத்துக்கான சுபமுகூர்த்தத் திகதி தீர்மானிக்கப்பட்டுள்ளது என்ற செய்தி எமக்குக் கிடைத்ததும் எம்பெருமானின் அருளாசியோடு பஞ்சமுகரை அவரின் நிரந்தர இடத்துக்குக் கொண்டு வந்து சேர்த்தோம். "தனதடி வழிபடுமவரிடர் கடி கணபதி" என்ற ஞான சம்பந்தரின் ஞான வாக்கை உளமாரப் புரிந்து கொண்டோம்.

புதியவரான பஞ்சமுகருக்கு கும்பாபிசேகத்தின் போது விசேட யாகம், கோமங்கள், கிரியைகள் ஒழுங்காகவும் சிறப்பாகவும் இடம்பெற்றுக் கும்பாபிசேகமும் மிக விமரிசையாக 2004இல் நிறைவேறியது. இந்த ஆலயத்தில் பிள்ளையார் கதை இருபது நாள்களுமே சிறப்பு உற்சவங்களாக இடம்பெறுவது வழக்கம். குறிப்பாக பிள்ளையார் கதை விவரிக்கப்பட்டுப் பிள்ளையாரின் இலட்ச நாமங்களை இருபது நாள்களும் ஓதுகின்ற 'இலட்சார்ச்சனை' என்னும் விசேட உற்வசம் ஆண்டுதோறும் மிகச் சிறப்பாக இடம்பெற்று வருகின்றது.



இத்தகைய இறையருள் மகத்துவம் மிக்க விசேட உற்வசங்கள் ஆலயத்தில் மிகச் சிறப்பாக இடம்பெற வழிசமைத்த ஆலய தர்மகர்த்தா, சிவாச்சாரியார்கள், திருவிழா உபயகாரர்கள், அடியவர்கள் என அனைவரும் பஞ்சமுக ஏரம்பரின் கருணைக்கும் அருளுக்கும் பாத்திரமானவர்கள்.

தற்போது ஆலயத்தின் நிருத்த மண்டபம், அதில் அமைந்துள்ள சிவன், பார்வதிக்கான சந்நிதி, தம்ப மண்டபம், தம்பப் பிள்ளையார், வயிரவர் சந்நிதி, வெளி மண்டபம், நிவேதனம் ஆக்கும் அறை, களஞ்சிய அறை, வாகன சாலை, சுற்றுக் கொட்டகைகள் என அனைத்துக் கட்டட அமைப்புகளும் மிக நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டுக் கலையழகு மிளிரும் வண்ணம் புதுப்பொலிவோடு காட்சி தருகின்றன அந்தவகையிலே வட்டுக்கோட்டை உடுக்கியவளைப்பதியில் வீற்றிருந்து அருளாட்சி புரியும் மகாகணபதிப்பிள்ளையார் ஆலயத்தின் விளம்பிவருட "அஷ்டபந்தன சமர்ப்பண பிரதிஷ்டா" மகா கும்பாபிசேக நிகழ்வு வெகு சிறப்பாக இடம்பெற்றது. கும்பாபிசேகக் கிரியைகளைச் 'சிவாகம கிரியா தத்துவநிதி' கௌரிபாலக் குருக்கள் அற்புதமாக நிறைவேற்றி னார்.

அவருக்கு உதவியாக ஆலய சிவாச்சாரியார்களும், ஏனைய சைவ ஆலயங்களின் சிவாச்சாரியார்க ளும் பக்கபலமாகவிருந்து கும்பாபிசேகத்தைச் சிறப்பாக வழிநடத்தினர். ஆலய நிகழ்வுகளில் எப்போதும் பங்காற்றுகின்ற இலக்கிய கலாநிதி, வாழ்நாள் போராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர் கும்பாபிசேக நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி வாழ்த்தி தெய்வீக நிகழ்வை நிறைவாக்கினார். மேலும் ஆலயத்தின் தற்போதைய எழில்மிகு தோற்றத்தை காணும் திருத்தொண்டில் நிதி உதவி புரிந்த அடியவர்களும், முன்னின்று செயலாற்றி திருப்பணிகளை ஒழுங்காகவும் சிறப்பாகவும் உரிய காலத்தில் நிறைவேற்றிச் செயலாற்றும் திறன்மிக்க இளைஞர்களை உள்ளடக்கிய திருப்பணிச் சபையினரும், ஆலய தர்மகர்த்தாக்கள் சபையினரும், கும்பாபிசேக நிகழ்வு களை மக்கள் மயப்படுத்திய ஊடகத் தொண்டர்களும் எம்பெருமான் விநாயகரின் அருளாசிக்குப் பாத்திரமானவர்கள். இவ்வாறு எம்பெருமான் விநாயகரின் தெய்வீகமான கைங்கரியம் சிறப்புற அமைந்து நிறைவான ஆன்மிகப் பெருவிழாவாக நிறைவுறப் பங்களிப்பு நல்கிய அனைவரும் அனைத்து நலன்களும் பெற்று இன்புற்று வாழவும், நாட்டில் சாந்தியும் சமாதானமும் நிலவி மக்கள் நிறைவாகவும் நிம்மதியாகவும் வாழவும் எல்லாம் வல்ல உடுக்கியவளைப்பதியில் உறையும் மகாகணபதிப் பிள்ளையாரின் திருவடிகளை இறைஞ்சுவோமாக. ■

# 'மில்க்வைற்' தொழிலதிபர் கனகராசா

## சிந்தைக்கினிய சிவதர்ம வள்ளல்

■ வை.பாலகிருஷ்ணன்

**பிறப்பு**

யாழ்ப்பாணத்தில் கொட்டடி என்னும் பழைய ஊரில் சைவத்தமிழ் நாகரீக சூழ்நிலையில் வாழ்ந்த மீனாட்சிப்பிள்ளை 1924ஆம் ஆண்டு காரைநகரைச் சேர்ந்த முருகேசு கந்தையா என்னும் விற்பன்னரை விவாகம் செய்து சிக்கன வாழ்வில் செம்மையாக இல்லறம் நடத்தி வந்தனர். அதன் பயனாய் கந்தையா மீனாட்சி தம்பதிகளின் இரண்டாவது புத்திரனாக கனகராசா 1927ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 2ஆம் திகதி திருவோண நாளில் இப்பூவுலகில் பிறப்பெய்தினார்.



**பணிச் சிறப்பு**

கால ஓட்டத்தில் கல்வியில் சிறந்து கற்க வேண்டியவற்றை கசடறக்கற்று கம்பளையில் ஆசிரியப் பணி புரிந்தார். சிறிது காலத்தின் பின் தந்தையின் அழைப்பை ஏற்று ஆசிரியப் பணியில் இருந்து இடைவிலகினார். தந்தைக்கு உதவியாக இருந்து குடிசைக் கைத்தொழிலை மேற்கொண்டு வந்தார். பால் வெண்மைச் சவர்க்காரம் துணிகளை வெண்மையாக்குவது போல அன்னார் வெளியிட்ட சிறு கைநூல்கள் மற்றும் தேவார திருவாசகங்கள், திருக்குறள் கருத்துக்கள் , பொன்மொழிகள், நன்மொழிகள், அறச் சிந்தனைகள், காந்தீயக் கருத்துக்கள் அடங்கிய மில்கவைற் செய்தி இதழ்கள், நூல்கள் மற்றும் பிரசுரங்கள் மக்களின் மனத் தூய்மைக்கும் ஆத்ம வளர்ச்சிக்கும் வழிசமைத்தன.

தொழில்வளம் பெருக்கித் தாம் ஈட்டும் பணத்தை வைப்பிலிட்டு பணமுதலை அதீதமாக மீளுருவாக்கம் செய்கின்ற இக்கால நகர்வில், சிந்தைக்கினிய சிவதர்ம வள்ளலாய் "அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன் பெற்றான் வைத்துளி!" என்பதற்கிணங்க வறியோரின் பசிப்பிணியைப் போக்குதல், மண்டபம் அமைத்தல், நீர்நிலைகளைப் பேணுதல், பஸ்தரிப்பிடம் அமைத்தல், ஆலயங்கள், சனசமூக நிலையங்கள், பாடசாலைகள் போன்ற பொது நிறுவனங்களின் தேவைகளுக்கு நிதி உதவி வழங்குதல் என இவர் ஆற்றிய பணிகளின் தன்மை போற்றுதற்குரிது. மருத்துவமனைகள், சிறுவர் இல்லங்கள், முதியோர் இல்லங்கள் என்பவற்றுக்குத் தானே பயணம் மேற்கொண்டு உதவிகளைச் செய்து உறவாகி அன்பு பாராட்டினார்.

**சிந்தனையும் முன்மாதிரியான செயற்பாடுகளும்**

வறண்ட பிரதேசம் எங்கும் வாழ்வும் வளமும் பெற்று விளங்கப் பெரிய அளவில் மரம் நடும் பணியை தனி ஒரு மனிதனாக ஆரம்பித்த இவர், "மக்கள் யுகத்தின் மாண்பை அனுசரித்து அவரவர் பிறந்த நாள்களில் எம்மரமாயினும் ஒரு மரம் நடுக!" எனப் பணிவான வேண்டுகோளை முன்வைத்து பல்வேறு இன மரக்கன்றுகளையும் விதைகளையும் விநியோகம் செய்வதை வாழ்வியலின் பணிக்கூறாக கடைப்பிடித்தவர்.

'கன்னொருவ, மகா இலுப்பள்ளம, வவுனியா, கிளிநொச்சி, திருநெல்வேலி' ஆகிய இடங்களில் அமைந்துள்ள அரச விவசாயப் பண்ணைகளில் பல்வேறு இன மரக்கன்றுகளை கொள்வனவு செய்து அவற்றை மக்களுக்கு இலவசமாக விநியோகம் செய்த இயற்கை விரும்பியாகத் திகழ்கிறார்.

தன்னுடைய தொழிலகத்துக்கு அருகாகவே பெரிய நிலப்பரப்பைக் கொள்வனவு செய்து, செம்மண்ணும் பசுந்தாலும் எருவும் இட்டு பக்குவப்படுத்தி மா, பலா, தோடை , எலுமிச்சை, அகத்தி, கொய்யா, மாதுளை போன்ற இன்னோரன்ன பயிர்களை நாற்றுப் பண்ணையில் உற்பத்தி செய்து பருவமழை ஆரம்பித்ததும் பாடசாலைகள், ஆலயங்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள், சனசமூக நிலையங்கள், மாதர் சங்கங்களுக்கு விநியோகித்த பசுமைப் புரட்சியாளனாக மிளிர்கிறார். அவர் மேற்கொண்ட முயற்சியின் பயன் பசும்சோலைகளாகஎங்கும் காட்சியளிக்கின்றன. வடக்கு கிழக்கு மாகாணங்களில் பனைவளம் உயர்நிலைபெற்று நாட்டின் பொருளாதாரத்தில் அதன் பங்கு மேலோங்க வேண்டுமென்ற நோக்குடன், "பனம் பொருள்களின் வர்த்தக வாய்ப்பை ஆராய்தல், பனைவளத்தைத் திட்டமிட்ட சிறுதோப்புகளாக பயிரிட்டு விருத்தி செய்தல்,பனை ஆராய்ச்சி நிறுவனத்தை நிறுவுதல்" போன்ற செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துகின்ற பணிகளில் முன்னின்று செயற்பட்டார். இந்தப் பணிகளில் பேராசிரியர் கா.குலரட்ணம், வி.சிவசுப்பிரமணியம் ச.சச்சிதானந்தன் போன்றோருடன் இணைந்து செயலாற்றினார். 1978ஆம் ஆண்டு அரச நியதிச் சட்டத்தின் கீழ் பனை அபிவிருத்திச் சபை தோற்றம் பெற்றதும் அதன் இயக்குநர் சபைப் பணிப்பாளராக நியமனத்தைப் பெற்று சபையின் செயற்பாடுகளுக்கு மெருகூட்டினார். ■

# யாழ்ப்பாணம் மாநகர சபை

## சந்தைகள், இறைச்சிக் கடைகள், கருவாட்டுக்கடைகள், கோழிக்கடைகள், துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையங்கள், சிற்றுண்டிச்சாலைகள், மலசல கூட பராமரிப்பு என்பவற்றைக் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2019 (01.01.2019 - 31.12.2019)

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி கடைகள் 01.01.2019ஆம் திகதி முதல் 31.12.2019ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகின்றது.

| | |
|---|---|
| கேள்விப் படிவக் கட்டணம் | - ரூபா 500.00 (வரி நீங்கலாக) |
| கேள்விப் படிவம் விநியோகித்தல் | - 02.11.2018 - 15.11.2018 ( மு.ப 9.00- பி.ப.3.00 மணி வரை) |
| கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளல் | - 16.11.2018 மு.ப 9.30 மணி வரை |
| கேள்வி திறத்தல் | - 16.11.2018 மு.ப. 10.00 மணிக்கு |

விண்ணப்பபடிவத்தினை பூர்த்தி செய்து கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கடையின் பெயர் குறிப்பிடப்பட்டு மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

தபாலில் அனுப்புவோர் மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்று முகவரியிட்டு 16.11.2018 ஆம் திகதி மு.ப 9.30 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விக்காரர் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் ஒருவர் சமூகமளிக்கலாம்.

**நிபந்தனைகள் :**

1. சித்திபெற்றவர்கள் கேள்வித்தொகையின் 1/3 பகுதியை செலுத்தி சபையுடன் உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டும். 1/3 பகுதியை செலுத்தியவர்கள் மிகுதித் தொகையை 08 சம பங்குப்படி மாசி தொடக்கம் புரட்டாதி வரையான 08 மாத காலப்பகுதிக்குள் 2019 தை முதல் ஆவணி வரை ஒவ்வொரு மாதமும் அடுத்தமாதம் 10ஆம் திகதிக்கு முன் செலுத்துதல் வேண்டும். தவறும் பட்சத்தில் மாத குத்தகைப் பணத்தின் 10% தண்டமும் மேலதிகமாக அறவிடப்படும்.
2. கேள்விப்படிவத்தினைப் பெறுபவர் யாழ். மாவட்டத்தில் வசிப்பவராக இருப்பதுடன் அவரது வதிவிடத்தை கிராம அலுவலர் மற்றும் பிரதேச செயலர் மூலம் உறுதிப் படுத்திய கடிதம் மற்றும் தேசிய அடையாள அட்டை என்பவற்றை உரியவர் நேரடியாக சமர்ப்பிப்பதுடன் அதன் புகைப்படப் பிரதியும் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. கேள்விப்பத்திரங்களைப் பெறுபவர்கள், மாநகரசபைக்கு எந்தவித நிலுவைக் கட்டணங் களையும் முன்னைய காலங்களில், நடப்பு ஆண்டில் செலுத்த தவறியவர்களாக அல்லது கறுப்பு நிரல் பட்டியலில் சேர்க்கப்பட்டவராக இருந்தால், கேள்வியில் சித்தி பெற்றாலும் அவர்களுக்கு வழங்கப்பட மாட்டாது.
4. ஒன்றுக்கு மேற்பட்ட கடைகளுக்கு கேள்விதாரர் சித்தியடைந்திருப்பின் ஒரு கடை மாத்திரமே குத்தகைக்கு வழங்கப்படும் என்பதுடன் அது எத்தகைய கடை என்பது பற்றிய இறுதி முடிவு சபையினதாகும். அடுத்த நிலையில் உள்ள கேள்விதாரரின் சித்திகரத்தன்மை அவரது கேள்வித்தொகை, அனுபவம், சபையுடனான நல்லுறவு என்பவற்றை கருத்தில் கொண்டு பரிசீலிக்கப்படலாம்.
5. சந்தையை குத்தகைக்கு பெறுபவர் சந்தைக்கு வரும் பொருள்களின் மொத்தப் பெறுமதியின் 4 சதவீத கட்டணம் பெறலாம். வியாபாரிகள் மீன் வியாபாரம் செய்யும் இடத்துக்கு (கல்லுக்கு) நாள் ஒன்றுக்கு அதிக பட்சமாக ரூபா 50.00 பெறலாம், மரக்கறி வியாபாரம் செய்யும் இடத்துக்கு (5'X5') நாள் ஒன்றுக்கு ரூபா 50.00 பெறலாம். மேலதிகமாக எந்தவித கட்டணங்களும் அறவிடப்படலாகாது.
6. சபையின் சைக்கிள் பாதுகாப்பு நிலையங்களில் பாதுகாக்கப்படும் துவிச்சக்கர வண்டிகளுக்கு ரூபா 10.00 உம் மோட்டார் சைக்கிள்களுக்கு ரூபா 20.00ம் அறவிடலாம். மேலதிகமாக எந்த வரியும் அறவிடப்படலாகாது.
7. சபையின் கடைகளில் இறைச்சி/கருவாடு/கோழி ஆகியன விற்பனை செய்யும் உரிமையாளர்கள் சபையால் விதிக்கப்படும் மாத வாடகையை செலுத்துதல் வேண்டும்.
8. அதிகூடிய கேள்வித் தொகையை சமர்ப்பிப்பவர்களுக்கே குத்தகை வழங்கப்படும். அதிகூடிய கேள்வித் தொகையை சமர்ப்பித்தவர் குத்தகையை எடுக்கத் தவறின், அடுத்த நிலையிலுள்ள கேள்விதாரரின் கேள்வித்தொகை திருப்திப்படக்கூடிய வகையில் அமைந்தால் பரிசீலிக்கப்படலாம் அல்லது மீள்கேள்வி கோரப்படலாம்
9. **சிற்றுண்டிச்சாலைகளைக் குத்தகைக்குப் பெறுபவர்களுக்குரிய நிபந்தனைகள்.**
   - 9.1 சிற்றுண்டிச்சாலை காலை 07.00 மணி தொடக்கம் மாலை 07.00 மணி வரை வியாபாரம் செய்ய அனுமதிக்கப்படும்.
   - 9.2 சிற்றுண்டிச்சாலைக்குப் பயன்படுத்தும் மின்சாரத்துக்கான மின் கட்டணத்தை குத்தகைக்குப் பெறுபவர்களே செலுத்துதல் வேண்டும்.
   - 9.3 மின்சார கட்டணத்திற்கான பாதுகாப்பு வைப்பு கட்டணமாக ரூபா 20,000.00 ஐயும் உடனடியாகவே செலுத்துதல் வேண்டும். துரையப்பா விளையாட்டு அரங்கத்தில் நிகழ்வுகளின் போது நடத்தப்படும் சிற்றுண்டிச்சாலைக்கான கேள்வி கோருபவர் தடையறாத சேவையை வழங்க வேண்டும். இது தொடர்பான மேலதிக நிபந்தனைகள் தங்களால் பூர்த்தி செய்யப்பட வேண்டும். அவை கேள்விப்படிவத் துடன் தங்களுக்கு வழங்கப்படும்.
10. கேள்விப் படிவக் கட்டணம்,, கேள்வித் தொகை, மாத வாடகை என்பவற்றுக்கு அக்காலப்பகுதிக்குரிய VAT, NBT சேர்த்துச் செலுத்துதல் வேண்டும்.
11. சந்தைகளை குத்தகைக்கு பெறுபவர்கள் விரும்பினால் சந்தை வளாகத்தில் இடமிருக்கும் பட்சத்தில் அல்லது பிறிதொருவரின் காணியில் அனுமதியுடன் கூடாரம் இட்ட சைக்கிள் பாதுகாப்பு நிலையங்களை தங்களது செலவில் அமைத்து நடத்தலாம். எனினும் இந்நிலையத்தில் விடப்படும் சைக்கிள்களுக்கு குத்தகையாளர்களே பொறுப்பு என்பதுடன் மேலே இல.6 இல் குறிப்பிட்ட பாதுகாப்பு கட்டணங்களையே அறவிடப்பட முடியும்.
12. இறைச்சிகள் மற்றும் உணவு பொருட்களுக்கு மாவட்ட விலை நிர்ணயக் குழுவால் காலத்திற்குக் காலம் நிர்ணயிக்கப்படும் கட்டுப்பாட்டு விலைக்கே விற்பனை செய்யப்படல் வேண்டும்.
13. வெள்ளிக்கிழமை, பூரணை தினங்கள் மற்றும் அரசால் அறிவிக்கப்படும் தினங்களில் இறைச்சிக்கடைகள் பூட்டப்படல் வேண்டும்.
14. கடைகள் மற்றும் சந்தைகள் தற்போது இருக்கும் நிலையிலேயே குத்தகைக்கு வழங்கப்படும். அதனை தாங்கள் ஏற்றுக் கொண்டதாகக் கருதியே குறித்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்படும்.
15. வெளியிடங்களிலிருந்து சட்ட ஏற்பாடுகளுக்கமைய கால்நடைகள் கொண்டுவருவது குத்தகையாளரது பொறுப்பே ஆகும். இதற்கு சபை எவ்விதத்திலும் பொறுப்பேற்காது.
16. பன்றி இறைச்சிக்கடையை குத்தகைக்குப் பெற்றுக்கொள்பவர் அதற்கென தனியான கொல்கள ஏற்பாட்டை தாமே செய்து கொள்ள வேண்டும்.
17. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை காரணங்காட்டாது ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை யாழ்ப்பாணம் மாநகரசபைக்கே உரியது.
18. கொல்லப்படுவதற்கு 24 மணித்தியாலங்களுக்கு முன்னர் பொதுமக்களின் பார்வைக்காக கால்நடைகள் கட்டப்பட வேண்டும்
19. அறுக்கப்படும் விலங்குகள் உரிய அதிகாரிகளின் முன்னிலையிலேயே அறுக்கப்படல் வேண்டும்.
20. காதடையாளம், (Ear tag) சுகாதார சான்றிதழ் மற்றும் 1958ஆம் ஆண்டில் 29 ஆம் இலக்க விலங்குகள் சட்டத்தின் பிரகாரம் 2009.11.26 ஆம் திகதிய 1629/17 இலக்க அதிவிசேட வர்த்தமானியின் அட்டவணை 6 ஆம் இலக்க பிரசுரிக்கப்பட்டவாறான விலங்கு உறுதிச்சீட்டு உள்ள மாடுகளையே கொல்களத்தில் வெட்ட வேண்டும்.
21. கொல்களத்தில் காலை 6.00 மணிக்குப்பின்னரே விலங்குகளை வெட்ட முடியும்.
22. கொல்களத்தில் தொழில் புரிபவர்கள் மாநகர சபையில் முன்னரே பதிவு செய்யப்பட்டு இருத்தல் வேண்டும். பதிவு செய்யாதவர்கள் கொல்களத்தில் மாடு வெட்டும் மற்றும் ஏனைய வேலைகளில் ஈடுபட முடியாது.
23. கொல்களம், மற்றும் இறைச்சி விற்பனைக்கு குத்தகை உரிமையாளர்களால் தொழிலுக்கு அமர்த்தப்படுவோர் சரும நோய்கள், தொற்று நோய்கள் தமக்கு இல்லை என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச்சான்றிதழ் பெற வேண்டும்.
24. கொல்களம் மற்றும் இறைச்சிக்கடைகளில் பணிபுரிவோர் புகைத்தல், மதுபான பாவனை, வெற்றிலை பாவனை என்பன தடை செய்யப்பட வேண்டும். தகாத வார்த்தைப் பிரயோகங்களில் ஈடுபடக்கூடாது. அவ்வாறு ஈடுபட்டால் கொல்களத்தி லிருந்து உடனடியாக வெளியேற்றப்படுவர்.
25. கொல்களத்திலிருந்து இறைச்சியானது கடைகளிற்கு மூடிய பாத்திரங்களில் கொண்டு செல்லப்பட வேண்டும்.
26. கொல்களத்தில் தொழிலாளர்கள் காலுறை (Boots) மற்றும் கையுறை (gloves) அணிந்தே இறைச்சி வெட்டும் தொழிலில் ஈடு பட வேண்டும்.
27. இறைச்சி விற்பனையில் ஈடுபடுவோர் சுத்தமான ஆடைகள், மற்றும் மேலங்கி (ஏப்ரன்) தொப்பி அணிந்து விற்பனையில் ஈடுபட வேண்டும்.
28. இறைச்சி கொண்டு செல்லும் வாகனம் பொதுச்சுகாதார பரிசோதகரினால் முன்னரேயே பரிசோதிக்கப்பட்டு இறைச்சி கொண்டு செல்ல தகுதியானது என அனுமதிக்கப்பட்டால் மட்டுமே அவ்வாகனத்தில் இறைச்சி கொண்டு செல்ல முடியும்.
29. கொல்களத்தில் அறுக்கப்படும் ஆண் ஆடுகள் கிராமசேவகரினால் உறுதிப்படுத்தப்பட்ட உரிமையாளரின் கடிதத்துடனேயே கொல்களத்திற்கு வெட்டுவதற்கு கொண்டுவர முடியும்.
30. இனப்பெருக்கத்திற்குரிய நல்லின பெண் ஆடுகள் வெட்டப்படுவதை தடுப்பதற்காக அவை கொல்லப்படுவதாக இருந்தால் கிராம சேவையாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்திற்கு மேலதிகமாக பிரதேச கால்நடை வைத்திய அதிகாரியினால் இனப் பெருக்கத்திற்கு தகுதியற்றது என்ற சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
31. ஒவ்வொரு இறைச்சிக்கடை உரிமையாளரின் பெயரிலேயே விலங்கு உறுதிச்சீட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**இறைச்சிக்கடை குத்தகை - 2019**

| தொ. இல | இறைச்சிக்கடை | கடை இல | மீளளிக்கக் கூடிய கேள்வி பிணைப்பணம் | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (வரி நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 1 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 201,757.50 |
| 2 | பண்ணை கருவாட்டுக்கடை | இல.02 | 5,000.00 | 64,496.25 |
| 3 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 230,202.00 |
| 4 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 261,424.80 |
| 5 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.05 | 5,000.00 | 171,438.75 |
| 6 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 82,908.00 |
| 7 | பண்ணை கோழிக்கடை | இல.07 | 5,000.00 | 966,164.85 |
| 8 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.08 | 5,000.00 | 90,515.25 |
| 9 | பண்ணை மாட்டிறைச்சிக்கடை | இல.09 | 5,000.00 | 966,947.63 |
| 10 | பண்ணை மாட்டிறைச்சிக்கடை | இல.10 | 5,000.00 | 979,394.85 |
| 11 | செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 158,760.00 |
| 12 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 885,087.00 |
| 13 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 5,000.00 | 537,799.50 |
| 14 | புங்கன்குளம் ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 101,904.08 |
| 15 | புங்கன்குளம் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 347,287.50 |
| 16 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 874,337.63 |
| 17 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 5,000.00 | 336,372.75 |
| 18 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 277,664.63 |
| 19 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 396,900.00 |
| 20 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.05 | 5,000.00 | 352,800.00 |
| 21 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 248,172.75 |
| 22 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.07 | 5,000.00 | 248,062.50 |
| 23 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.08 | 5,000.00 | 220,665.38 |
| 24 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.09 | 5,000.00 | 245,085.75 |
| 25 | நாவாந்துறை கோழிக்கடை | இல.10 | 5,000.00 | 382,567.50 |
| 26 | நாவாந்துறை ஆட்டிறைச்சிக்கடை | இல.11 | 5,000.00 | 65,885.40 |
| 27 | நாவாந்துறை கருவாட்டுக்கடை | இல.12 | 5,000.00 | 12,725.60 |
| 28 | அரியாலை மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 624,555.23 |
| 29 | அரியாலை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 79,490.25 |
| 30 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 7,000.00 | 589,021.65 |
| 31 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 7,000.00 | 618,734.03 |
| 32 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.03 | 7,000.00 | 447,339.38 |
| 33 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 7,000.00 | 474,912.90 |
| 34 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.05 | 7,000.00 | 524,238.75 |
| 35 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 7,000.00 | 584,997.53 |
| 36 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.07 | 7,000.00 | 450,481.50 |
| 37 | குருநகர் பன்றி இறைச்சிக்கடை | | 5000.00 | 73,500.00 |

**பொதுச்சந்தைக் குத்தகை 2019**

| தொ. இல | பொதுச்சந்தைகள் | மீளளிக்கக் கூடிய கேள்வி பிணைப்பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (வரி நீங்கலாக) |
|---|---|---|---|
| 1 | பெரியகடை மரக்கறிச் சந்தை | 10,000.00 | 1,392,930.00 |
| 2 | பண்ணை மீன் சந்தை | 10,000.00 | 3,863,821.50 |
| 3 | குருநகர் மீன் சந்தை | 10,000.00 | 2,439,336.38 |
| 4 | நாவாந்துறை மீன் சந்தை | 10,000.00 | 604,335.38 |
| 5 | அரியாலை மீன் சந்தை | 1,000.00 | 74,231.33 |
| 6 | பாசையூர் மீன் சந்தை | 2,000.00 | 356,107.50 |
| 7 | சுப்பிரமணியம் பூங்கா வளாகத்திலுள்ள சிற்றுண்டிச்சாலை | 1,000.00 | 72,434.25 |
| 8 | பண்ணை மீன் சந்தை சிற்றுண்டிச்சாலை | 1,000.00 | 168,847.22 |
| 9 | புங்கன் குளம் உள்ளூர் உணவு உற்பத்திகளின் அறிமுகச் சந்தை | 2,000.00 | 8,955.05 |
| 10 | இந்து விடுதிக்கு தெற்குப் பக்கமாக உள்ள வாகனதரிப்பிட பாதுகாப்பு நிலையம் | 1,000.00 | 66,150.00 |
| 11 | யாழ் கச்சேரி சிறுவர் பூங்கா சிற்றுண்டிச்சாலை | 1,000.00 | 366,404.85 |
| 12 | யாழ். பொது நூலக சிற்றுண்டிச்சாலை | 5,000.00 | 264,600.00 |
| 13 | துரையப்பா விளையாட்டு அரங்கத்தில் நிகழ்வுகளின் போது நடத்தப்படும் சிற்றுண்டிச்சாலை (நிகழ்வு நடக்கும் நாள் ஒன்றுக்கு) | 1,000.00 | 858.19 |
| 14 | பொது மலசல கூடங்களை சுத்தம் செய்து பராமரிக்கும் சேவை | 2,000.00 | 165,375.00 |
| 15 | நீதிமன்ற துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் | 2,000.00 | 97,497.44 |

**மேலதிக விபரங்களை மாநகர சபையின் நானாவித இறைவரிப் பகுதியில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.**

மாநகரசபை அலுவலகம்
யாழ்ப்பாணம்.
2018.11.02

இம்மானுவல் ஆனல்ட்,
மாநகர முதல்வர்,
யாழ்ப்பாணம் மாநகர சபை

(C/8229)(10)

நீங்கள் சாதாரண தரப்பரீட்சையில் தோற்றி,

Registered with TVEC
TERTIARY AND VOCATIONAL EDUCATION COMMISSION SRI LANKA

# (O/L) 5 S

பெறுபேற்றினைப் பெற்றவரா?......

## மருத்துவத்துறையில் நீங்களும் ஒரு தாதியாவதற்கான (Nurse) அரிய சந்தர்ப்பம்



Hotline : 071 71 40000, 071 077 0770

சாதாரண தரப்பரீட்சையில் 5S பெறுபேற்றுடன் 30 வயதுக்குட்பட்ட ஆண் / பெண் அனைவரும் விண்ணப்பிக்கமுடியும்.

TVEC நிறுவனத்தினால் NVQ தர சான்றிதழ் வழங்கப்படும்.

**மாதாந்தம் 25,000/- அடிப்படை சம்பளத்துடன் உறுதியான தொழில் வாய்ப்பு**

| | | |
|---|---|---|
| 28 Bar Road Batticaloa<br>0718722353<br>0702705368 | 76/A Police station Road<br>Kalmunai<br>0719926682<br>0710770770 | 203, 1stFloor Main Street<br>Trincomalee<br>0719926681<br>0702705370 |
| 36/1,38/1 2ndCross Road<br>Vavuniya<br>0718722351<br>0702705367 | 323 Kashthooriya Road<br>Jaffna<br>0718722350<br>0718722352 | Thirukkovil<br>Boys Home Road<br>Thirukkovil<br>0710770770 |

## அய்வா தாதியர் பாடசாலை

323, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

36/1, 38/1 இரண்டாம் குறுக்கு வீதி, வவுனியா

071 872 2350, 071 872 2352, 071 872 2351, 070 270 5367, 070 270 5370

## அனைவருக்கும் இனிய தீபத்திருநாள் வாழ்த்துக்கள்

Rasi Collections

தீபத்திருநாளை முன்னிட்டு

# ராசி கலக்ஷன்ஸ்

## அதிரடி விலைக் கழிவு



சாரி வகைகள், சல்வார்வகை, ரொப் வகைகள், ஸ்கேட் வகைகள், பிளவுஸ் வகைகள், ஆண்கள் மற்றும் சிறுவர்களுக்கான ஆடை தினுசுகள் மேலும் பல ஆடை வகைகள் அதிரடி விலைக்கவு

**இன்றே முந்துங்கள்**

| | | |
|---|---|---|
| சாறி | 14,500.= | 7,500/= |
| கொட்டன் சாறி (Officeware) | 2,000.= | 1,500/= |
| சில்க்ஸ் சாறி | 1,200.= | 750/= |
| ரொப் | 2,000.= | 1,200/= |
| ரொப் | 1,400.= | 500/= |
| லெக் ஜீன்ஸ் | | 450/= |
| T.சேர்ட் | 1,200.= | 600/= |
| ரவுஸ்சர் | 2,500.= | 1,000/= |
| சல்வார் துணிகள் | 4,000.= | 1,500/= |
| பிளவுஸ் வகைகள் | 250/= முதல் | 900/= வரை |
| சல்வார்கள் | 5,000/= முதல் | 500/= வரை |

**உங்கள் தெரிவுகளுக்கு இன்றே முந்துங்கள்**

☎ 021 222 5571

199, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

# IIS இன் உயர்கல்விக்கான புலமைப் பரிசில் திட்டம்

கடந்த 2 தசாப்தங்களுக்கு மேல் வட இலங்கையில் உயர்கல்வியை வழங்கிவரும் IIS நிறுவனம் மாணவர்களை உயர்கல்வியின்பால் உற்சாகப் படுத்தும் நோக்குடன் புலமைப் பரிசில்களை வழங்கி வருகின்றது. அந்த வகையில் இவ்வருடம் சுமார் 1000 மாணவர்களை குடிசார் பொறியியல் (Civil Engineering), கணினி விஞ்ஞானம் (Computing), வர்த்தக முகாமைத்துவம் (Business Management) போன்ற துறைகளில் தமது உயர்கல்வி வாய்ப்பு களிற்காக எதிர்பார்த்து காத்திருக்கும் மாணவர்களிற்கு புலமைப்பரிசில்கள் வழங்குவதற்கு IIS இன் முகாமை தீர்மானித்துள்ளது.

மாணவர்கள் எவ்விதமான கட்டணமின்றி இப்புலமைப்பரிசில் திட்டத்திற்கு விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பபடிவங்கள் பரிசிலிக்கப்பட்டு நுண்ணறிவு, பொதுஅறிவு என்பவற்றை அடிப்படையாக கொண்ட போட்டிப்பரீட்சை ஒன்றி னூடாக தெரிவு செய்யப்படுவார்கள்.

போட்டிப்பரீட்சையில் மாணவர்கள் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் அடிப்படையில் அவர்களுக்கு புலமைப்பரிசில்கள் வழங்கப்படும். அதன்படி தமது கற்கை நெறிகளுக்கான கட்டணங்களில் 100% முதல் 25% வரை புலமைப் பரிசில்களை பெற்றுக்கொள்ள முடியும்.

இத்திட்டத்தின் ஊடாக கணினி விஞ்ஞானம் (Computing), குடிசார் பொறியியல் (Civil Engineering), வர்த்தக முகாமைத்துவம் (Business Management) துறைகளில் உயர் தேசிய டிப்ளோமா (HND) மற்றும் டிப்ளோமா (Diploma) கற்கை நெறிகளை மேற்கொள்ள முடியும். உயர்தேசிய டிப்ளோமா (HND) கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்கள் G.C.E A/L பரீட்சையில் 2 பாடங்கள் சித்தியடைந்திருப்பதுடன் December 2018 இல் 18 வயதை பூர்த்தி செய்தவராக இருக்க வேண்டும். டிப்ளோமா கற்கைநெறி களுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் December 2018இல் 15 வயதினை பூர்த்தி செய்தவராக இருக்க வேண்டும். இப்புலமைப்பரிசில் திட்டத்திற்காக பாடசாலை மாணவர்கள், O/L,A/L பரீட்சைக்கு தோற்றியமாணவர்கள், தொழில் வாய்ப்பை எதிர்பார்த்து காத்திருப்போர் மற்றும் பதவி உயர்வு /சம்பள உயர்வு களுக்காக உயர்கல்வியை தொடர விரும்புவோர் விண்ணப்பிக்க முடியும். பத்திரிகையில் அருகில் இருக்கும் இவ்விண்ணப்பபடிவத்தை அல்லது அதன் பிரதியை பூர்த்தி செய்து அனுப்புவதின் மூலமோ, விண்ணப் படிவங்களை IIS அலுவலகம், "IIS City Campus" எனும் IIS இன் facebook முகவரியில் தரவிறக்கம் செய்வத னூடாக மற்றும் IISஇனால் அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தர்களிடம் பெற்றுக் கொள்ளமுடியும்.

**விண்ணப்ப முடிவு திகதி 07.12.2018**

**மேலதிக விவரங்களுக்கு 021 222 8060**

**விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி :-**

இயக்குனர்,
**IIS CITY CAMPUS**
200, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.

(IN 8212)(10)

IIS CITY CAMPUS

## IIS வழங்கும் மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் - 2019
## விண்ணப்பப்படிவம்

1. Full Name (underline your name)

2. Postal Address

3. NIC Number

4. Date of Birth DDMMYYYY

5. Gender Male ☐ Female ☐

6. Telephone

7. Email

8. Qualification Earned

GCE O/L ☐ GCE A/L ☐ DIPLOMA ☐
HND ☐ DEGREE ☐ OTHER (s) ☐

9. Course applied for

HIGER NATIONAL DIPLOMA ☐ DIPLOMA ☐

I hereby declare that the all information furnished above are true to the best of my knowledge andbelief.

/ / DATE

SIGNATURE

OFFICE USE ONLY

ComBank கிரெடிட், டெபிட் கார்ட்டைப் பயன்படுத்தி
தீபாவளிப் பண்டிகைக் காலத்தில்
விரும்பியபடி கொள்வனவு செய்யுங்கள்

கிரெடிட் மற்றும் டெபிட் கார்ட்களுக்கு 35% வரையான விலைக்கழிவு

யாழ்ப்பாணம்

- நவம்பர் 1 - 5 வரை — GP — கிரெடிட் & டெபிட் - 35% வரை
- நவம்பர் 2 - 4 வரை — Thirumahal — கிரெடிட் - 30%** டெபிட் - 20%**
- நவம்பர் 2 - 4 வரை — Kabila Shoe Palace — கிரெடிட் - 25% டெபிட் - 15%
- நவம்பர் 2 - 4 வரை — LINGAA Lingaa Fashion — கிரெடிட் - 25% டெபிட் - 15%
- நவம்பர் 2 - 4 வரை — T.K T. KUMARASAMY TEXTILES — கிரெடிட் - 25% டெபிட் - 15%
- நவம்பர் 2 - 4 வரை — Stylish — கிரெடிட் - 25% டெபிட் - 15%
- நவம்பர் 3 - 5 வரை — MEKA MART — கிரெடிட் - 25% டெபிட் - 15%
- நவம்பர் 3 - 5 வரை — Vani Tex — கிரெடிட் - 25% டெபிட் - 15%
- நவம்பர் 3 - 5 வரை — Daily Food City — கிரெடிட் - 15%** டெபிட் - 5%**

திருகோணமலை

- நவம்பர் 2 - 4 வரை — KC — கிரெடிட் - 25% டெபிட் - 10%
- நவம்பர் 3 - 5 வரை — FASHION Park — கிரெடிட் - 20% டெபிட் - 10%
- நவம்பர் 3 - 5 வரை — MULTY Fashion — கிரெடிட் - 20% டெபிட் - 10%
- நவம்பர் 3 - 5 வரை — Shifan MENS WEAR EMPORIUM — கிரெடிட் - 20% டெபிட் - 10%
- நவம்பர் 3 - 5 வரை — OLIVE — கிரெடிட் - 15% டெபிட் - 10%

மட்டக்களப்பு

- நவம்பர் 3 - 5 வரை — MAHANATHI — கிரெடிட் - 35% டெபிட் - 25%

கிளிநொச்சி

- நவம்பர் 1 - 5 வரை — கிரெடிட் & டெபிட் - 20% வரை***
- நவம்பர் 1 - 5 வரை — Sun Furniy City — கிரெடிட் & டெபிட் - 25% வரை****

வவுனியா

- நவம்பர் 1 - 3 வரை — STAR Fashion — கிரெடிட் - 25% டெபிட் - 15%
- நவம்பர் 3 - 5 வரை — Katiyani Textile — கிரெடிட் - 25% டெபிட் - 15%

முல்லைத்தீவு

- நவம்பர் 1 - 5 வரை — Sun Furniy City — கிரெடிட் & டெபிட் - 25% வரை****

** தெரிவு செய்யப்பட்ட ஆடைகளுக்கு மட்டுமே விலைக்கழிவு
*** 20% வரையான விலைக்கழிவு + கிரெடிட் கார்ட்களுக்கு 12 மாத ComBank இலகு கொடுப்பனவுத்திட்டம்
**** 25% வரையான விலைக்கழிவு + கிரெடிட் கார்ட்களுக்கு 12 மாத ComBank இலகு கொடுப்பனவுத்திட்டம்

இச் சலுகை 2018 நவம்பர் 5 வரை மாத்திரமே

ComBank கிரெடிட் கார்ட் ஒன்றுக்கு விண்ணப்பிப்பதற்கு 0770 241 000 என்ற இலக்கத்திற்கு மிஸ் கோல் தரவும்.
இணைப்புக் கட்டணம் மற்றும் முதலாம் வருடக் கட்டணம் விலக்களிக்கப்படும்.

COMBANK MAX LOYALTY REWARDS

COMMERCIAL BANK

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது Fitch Rating - AA (lka) +94 11 2 353 353 www.combank.lk

கொக்குவில் குளப்பிட்டி
ஸ்ரீ மங்கள மகாகாளி அம்மன் ஆலய
பொதுக்கூட்டம்

மேற்படி ஆலய பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகசபை தெரிவும் இன்று (02.11.2018) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு ஆலய முன்றலில் நடைபெற இருப்பதனால் ஆலய உபயகாரர்கள் மற்றும் அடியவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். (CS 20963/15/18) - ஆலய அடியவர்கள் -

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 421
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2018.11.01
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 65,417,925/-
வெற்றி இலக்கங்கள்
26 29 68 75 X
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1514
சீட்டிழுப்பு திகதி 01.11.2018
வெற்றி இலக்கங்கள்
37 41 51 56 X
அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட்
ரூ 20, 740, 240/=
தொ.பே: 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

සංවර්ධන වාසනාව
அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் ▶ 191
சீட்டிழுப்பு திகதி ▶ 01.11.2018 நீலம்
ஆங்கில எழுத்து J
வெற்றி இலக்கங்கள் 10 20 40
விதி எண் 09
அடுத்த சுப்பர் பரிசுப்பொதி ரூ. 15,091,480/=
2018.11.03 ம் திகதி சனிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு 0114 824 824 www.dlb.lk


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

Best Wishes

## தரம்: 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2018

### யா/ திருக்குடும்ப கன்னியர் மடம் தேசிய பாடசாலை



முன் வரிசை இடமிருந்து வலம் - போ. நிலக்ஷிகா, தா.மேரிஸ்ரெலானி, த.அக்ஷயா, ம.டர்மிகா, ஜெ.கிருஜனா, ம.கரோலின்செரின், பி.செறின், கே.ஜீவிதா, அ.சுவிற்றா, சி.மேரிஷெரோனா


பின் வரிசை இடமிருந்து வலம் - ரொ.சயந்தினி, ஸ்.சங்கவை, ரா.யர்ஷிகா, ஜ.எஸ்தர், இ.நவோமி, ஜே.கபிஷா

**16 மாணவிகள் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்ததுடன்**

செல்வி **ஜெ.கிருஜனா** 196 புள்ளிகளைப் பெற்று மாவட்ட ரீதியில் 3ஆம் இடத்தினையும் தேசிய ரீதியில் 4 ஆம் இடத்தினையும் பெற்றதுடன் 112 மாணவர்கள் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர். இவர்களைப் பயிற்றுவித்த ஆசிரியர்கள், பகுதித் தலைவர், அதிபர் மற்றும் பாடசாலைச் சமூகத்தினரையும் பாராட்டி வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்: பெற்றோர், நலன்விரும்பிகள்.

# எங்கள் உயிர்த்தீபத்தின் ஓராண்டு நினைவலைகள்



மலர்வு 1946 . 05 . 01

உதிர்வு 2017 . 11 . 02

அமரர் உயர்திரு. **திருநாவுக்கரசு இராசநாயகம்**

கண்ணுக்கு இமையாக கல்வியே ஒளியாக
ஒழுக்கமேநெறியாக இல்லக் குழந்தைகளை
நொடிப்பொழுதும் உயர்த்திட உந்தனைஉருக்கி
ஆதரவற்றோர் உளம் பெருக்கி
சாதனைகள் படைத்திட வழிகாட்டிய
எம் இல்லப் பெருந்தகை

உங்களது ஆன்மா எமை விட்டு பிரிந்து ஓராண்டு ஓடினும் உத்தமர் உங்களின் வழிகாட்டல், நெறிப்படுத்தல் தொடர்ந்து எம்மையும் குழந்தைகளையும் உம் தடம் பற்றி வழி நடாத்திச் செல்லும் உம் நினைவுகள் என்றும் எம்முடன்...

என்றும் உங்கள் நினைவில் : தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள், இல்லக் குழந்தைகள் மகாதேவாசுவாமிகள் சிறுவர் இல்லம் ஜெயந்திநகர், கிளிநொச்சி.

# 5 ஆம் நாள் நினைவலைகள்



மலர்வு 12 . 08 . 1945

உதிர்வு 02 . 11 . 2013

**கந்தர் பழனி** (காரைநகர்)

ஆண்டுகள் ஐந்தல்ல ஆயிரம் ஆனாலும்
ஆறாது உங்கள் நினைவுகள்
ஊர் சிறக்க பேர் சிறக்க உத்தமராய் வாழ்ந்து வழிகாட்டிய
உங்கள் நினைவுடனே என்றும் நாம்
உங்கள் வழி தடம்பதித்து நடப்போம்

என்றும் உங்கள் நினைவுகளுடன் :
பிட்டியெல்லை, காரைநகர்.
சங்கம் வீதி, சங்கத்தானை.
குடும்பத்தினர்.

தீபாவளிப் பண்டிகையை
முன்னிட்டு யாழ்நகரில்
மாபெரும்

# மலிவு விற்பனை

# 50%
விலைக் கழிவு

ஆண், பெண், சிறார்களுக்கான
அனைத்து விதமான ஆடைகளும்
நவம்பர் மாதம் 3ம், 4ம் மற்றும் 5ம்
திகதிகளில்

இடம் : யாழ்ப்பாணம் YMCA (கச்சேரி) மண்டபம்

Signature
The Achiever's Choice

தொடர்புகளுக்கு : 0772398381 / 0774766296



எமது வாடிக்கையாளர்களுக்கு K.S.T. TEX இன் முன்கூட்டிய
இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்

# K.S.T. TEX - மலிவு விற்பனை

- தீபாவளியை முன்னிட்டு 5000 ரூபாவுக்கு மேல் சாறி மட்டும் கொள்வனவு செய்பவர்களுக்கு 1500/- பெறுமதியான சாறி இலவசம்.
- 10,000 ரூபாவுக்கு மேல் சாறி மட்டும் கொள்வனவு செய்பவர்களுக்கு 2500/- பெறுமதியானசாறி இலவசம்
- Brand சேட் 2 வாங்கினால் 01 சேட் இலவசம்



## K.S.T. TEX
129/ 1/4, மின்சார நிலைய வீதி,
யூப்ளி பசார், யாழ்ப்பாணம்.
021 222 9470


அமரர் Dr. வல்லிபுரம் பத்மநாதன்
அவர்களின்

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 17.04.1946
மறைவு 29.10.2013

திதி:தசமி
(02.11.2018)

எம் வளர்ச்சி கண்டு
வாழ்த்துப் பாட
எம்முடன் நீர் இல்லை
என்ற நினைவே
எமை வதைக்குதையா

கண்ணகி ஹாட்வெயார்
வள்ளுவர்புரம்,
விசுவமடு.
குடும்பத்தினர்

# யா/ அருணோதயக் கல்லூரி அளவெட்டி

## புலமைப் பரிசில் பரீட்சை சாதனையாளர்கள் - 2018

வலிகாமம் கல்வி வலய அரச பாடசாலைகளில் அதிகூடிய மாணவர்கள் (28)
வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் சித்தி பெற்று சாதனை
72 மாணவர்கள் தோற்றி 71 மாணவர்கள் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று சாதனை



**இடமிருந்து வலமாக மாணவர் விவரம்**

மேல்வரிசை: சி.ஜானுசன்(173), ம.அபிசயன்(185), அ.எழில்வதனன்(175), வி. பவித்திரன்(174), ம.கேமதனன்(166), இ.சுபதாசன்(169), சி. கோகீசன்(171), வ.சரண்(165), ஒ.கீகன், (176) தி.மபின்சன்(170), ச.தமிழின்பன்(166).

நடுவரிசை : ஆ.அனுதர்சி(177), சே.கயூரிக்கா(180), சு.சங்கவி(171), கு.கஜானா(183), கா.கிருசாயினி(181), சோ. கிசானு(171), கோ.காருண்யா(167), சி.துசானி(173), யே.சகிதா(177), து.வினுசா(176), சு.ஆத்மகாரணி(180), மு.சஸ்மிதா(167)

கீழ்வரிசை : ச.கீர்த்திகா(180), வை.யனுமி(174), ர.குயிந்தன்(180), க.கயாகரன்(188), ட.வருசா(166)

கீழ்வரிசை : அதிபர், ஆசிரியர்கள் திரு. ப.தர்மசீலன் (5A ஆசிரியர்), திரு.நா.கேதீஸ்வரன் (அதிபர்), திரு. ம.கபிலன் (பிரதி அதிபர்), திருமதி சு.ராகினி (5B ஆசிரியர்)

### பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட மெய்வல்லுநர் போட்டிச் சாதனையாளர்கள் - 2018

தேசிய மட்ட மெய்வல்லுநர் போட்டியில் வடமாகாணத்தில் அதிகூடிய பதக்கங்களை
பெற்று கல்லூரிக்கும் வலிகாமம் கல்வி வலயத்திற்கும் பெருமை சேர்த்து நிற்கும் சாதனையாளர்கள்



நிற்பவர்கள் இடமிருந்து வலமாக : பி.தனுசங்கவி, வி. றுசான், ர.யதுசன், சு.திசாந்.
இருப்பவர்கள் இடமிருந்து வலமாக : வ.சாத்வீகா, திரு.த. பாகீஸ்வரன் (ஆசிரியர்), திரு. சி.கமலமோகன் (ஆசிரியர்), திரு. நா.கேதீஸ்வரன் (அதிபர்), திரு.பா.பிரதீபன் (ஆசிரியர்), க.நெப்தலிபொப்சன்

**பழைய மாணவர் சங்கம் - யா/ அருணோதயக் கல்லூரி - அளவெட்டி.**

## கூட்டமைப்பு....

மட்ட குழுக் கூட்டத்துக்கு முன்னதாக இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளதாகத் தெரியவருகின்றது.

கொழும்பு அரசியலில் குழப்பம் ஏற்பட்டுள்ளது. தலைமை அமைச்சராக மகிந்த ராஜபக்ச நியமிக்கப்பட்டாலும், நாடாளுமன்றத்தில் யாருக்குப் பெரும்பான்மை என்பது தொடர்பில் கேள்வி எழுந்துள்ளது. ரணில் விக்கிரமசிங்க, மகிந்த ராஜபக்ச இருவரும் பெரும்பான்மை பலத்தை நிரூபிப்பதற்காக முயன்று வருகின்றனர்.

இந்த நிலையில் கடந்த 30ஆம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நடைபெற்றிருந்தது.

இந்தக் கூட்டத்தில் யாரை ஆதரிப்பது என்பது தொடர்பில் முடிவு எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த நிலையில் இன்று மீண்டும் கூட்டம் நடைபெறவுள்ளது.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உயர்மட்டக் குழுக் கூட்டமும் இன்று நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)

## பெரும்பான்மையை...

நிரூபிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று, அரசின் இணைப் பேச்சாளரும், அமைச்சருமான மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் அரசமைப்பின் படியே, ரணில் விக்கிரமசிங்கவின் பதவி நீக்கமும், புதிய தலைமை அமைச்சராக மகிந்த ராஜபக்சவின் நியமனமும் மேற்கொள்ளப்பட்டது.

இதில் யாருக்காவது பிரச்சினை இருந்தால், உயர் நீதிமன்றத்தில் வழக்கைத் தாக்கல் செய்து தீர்ப்பைப் பெற முடியும்.

அரசமைப்பில் எந்த இடத்திலும், 113 உறுப்பினர்களின் பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும் என்று கூறப்படவில்லை. நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தை நிரூபிக்க வேண்டியது கட்டாயமல்ல. எனினும், 113 இற்கும் அதிகமான பெரும்பான்மையை எம்மால் காட்ட முடியும் என்றார். (5)

## எரிபொருள்...

நள்ளிரவு முதல் குறைக்கப்பட்டுள்ளது. அத்துடன் மேலும் பல சலுகைகளும் அறிவிக்கப்பட்டுள்ளன.

ஒக்டைன் 92 பெற்றோல் ஒரு லீற்றரின் விலை 10 ரூபாவினாலும் ஓட்டோ டீசல் ஒரு லீற்றரின் விலை 7 ரூபாவினாலும் குறைக்கப்படவுள்ளதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது. 155 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட ஒரு லீற்றர் ஒக்டைன் 92 பெற்றோலானது 145 ரூபாவாக விற்பனை செய்யப்படவுள்ளதோடு, 123 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட ஒரு லீற்றர் ஓட்டோ டீசல் 116 ரூபாவாக விற்பனை செய்யப்படவுள்ளது.

ஒரு கிலோகிராம் பருப்பு மற்றும் கடலை மீதான சிறப்பு வர்த்தக வரி 5 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. ஒரு கிலோகிராம் உழுந்து மீதான வரி 25 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. கோதுமை மா மீதான தீர்வை வரிச் சலுகை 6 ரூபாவில் இருந்து 9 ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. இறக்குமதி செய்யப்படுகின்ற சீனி மீதான வரியும் 10 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.

தொலைத்தொடர்பு சேவைகள் மீது விதிக்கப்பட்டுள்ள 25 சதவீத வரி 15 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு உற்பத்தியாளர்களின் நலன் கருதி இறக்குமதி செய்யப்படும் பெரிய வெங்காயம் மற்றும் உருளைக் கிழங்கிற்கு விதிக்கப்பட்டிருந்த 40 ரூபா இறக்குமதி வரிக்கான கால எல்லை நேற்றுடன் நிறைவடைந்த நிலையில், அதனை மேலும் ஒரு மாதத்துக்கு நீடித்துள்ளதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

சமுர்த்தி வங்கிகள் ஊடாக வழங்கப்படுகின்ற கடன் தொகையை 10 ஆயிரம் ரூபா வரை அதிகரிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நெற்பயிர்களுக்கான உரங்கள் 50 கிலோ கிராம் எடையுடையவை 500 ரூபாவாக விற்பனை விலை தொடர்ந்தும் நீடிக்கும். அத்துடன், ஏனைய பயிர்ச் செய்கைகளுக்கான உர வகைகளின் 50 கிலோம் கிராமின் விலைகள் ஆயிரத்து 500 ரூபாவிலிருந்து ஆயிரம் ரூபாவாகக் குறைக்கப்படுகிறது.

தொழில்துறையில் உள்ளவர்களின் உழைப்பு மீதான வருமான வரி அறவீடு 24 சதவீதத்திலிருந்து 14 சதவீதமாகக் குறைக்கப்படுகிறது. வங்கி மற்றும் நிதி நிறுவனங்களில் பேணப்படும் நிலையான மற்றும் சேமிப்புக் கணக்குகளிலிருந்து கிடைக்கும் வட்டி வருமானம் மீது விதிக்கப்படும் வரி முற்றுமுழுதாக நீக்கப்படுகிறது என்று நிதி அமைச்சு அறிவித்துள்ளது. (5.10)


## காணி விற்பனைக்குண்டு

மானிப்பாய் இராசரத்தினம் பத்மநாதன் என்பவருக்கு சொந்தமான மானிப்பாய் கோயிற்பற்று, ஆனைக்கோட்டையிறையில் உள்ள "வலந்தில் வளவும் கொட்டையடிவளவும் வனந்தில் வளவும்" நில.பர 15 1/2 யில் சொரியலாய் நில.பர 6 1/2 விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு : சிவமலர் கதிர்காமநாதன்

077 597 3854


## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அருந்தவம் பிரீடன்

மண்ணில் 20.09.1987


விண்ணில் 15.11.2014

வசந்தம் வீசும் வாழ்வுப் பாதையிலே
சுகந்தம் வீசும் உறவுகள் சூழ்ந்து
செல்லப் பிள்ளையாக வாழ்ந்தவேளை
இளமையிலே முடிவெழுதி கவர்ந்ததேனோ?
மாறாத சோகமுடன் மனமுருகிப் புலம்புகின்றோம்
கனத்த இதயமுடன் கண்ணீரால் அஞ்சலிக்கின்றோம்
ஆண்டுகள் நான்கு ஆன போதும்
ஆறவில்லை எம் மனம் காயவில்லை எம் ஈரவிழிகள்

ஆவரங்கால் கிழக்கு,
மனற்பகுதி, புத்தூர். (CS 20958)(11)

அம்மா,அப்பா, அண்ணாமார்,
அக்காமார் மற்றும் உறவினர்கள்.

## மரணஅறிவித்தல்



### முத்து வேலாயுதம்

மண்ணில் 15.01.1930

விண்ணில் 31.10.2018

யாழ்ப்பாணம் பிரம்படி கொக்குவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்து வேலாயுதம் 31.10.2018 புதன்கிழமை இறைவன்டி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்து - அன்னக்குட்டி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வீரகத்தி -சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் சின்னத்தங்கச்சியின் அன்புக் கணவரும் தேவி, ராஜரட்ணம்(டென்மார்க்), சூரியகுமார் (டென்மார்க்), ராஜகுமார்(பிரான்ஸ்), நாகேஷ்வரி, அஜந்தினி, விஜயகுமார்(Veterinary surgeon Colombo), அஜந்தா(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் துரைராஜசிங்கம், வசந்தா,, ரசீந்திரா, அனுஷா, இரத்தினசிங்கம், விக்னேஷ்வரன், பவித்ரா(HNB) ஆகியோரின் மாமனாரும் ஜெனி, ஜெனா, ஜென்சி, லக் ஷிகன், துளக்ஷிகா, கஸ்தூரி, கோபி, அருண், ஹேமமாலினி, அபிராமி, றம்ஜா,, கபில்ராஜ், ஜிந்துஜா, டிலக் ஷன், பானுஷா, சதுஷ்ரிகா, ஷெவோன், ஜெரோம் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (04.11.2018) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பிரம்படி லேன்,
கொக்குவில் கிழக்கு. (CS 15680) (14)

தகவல்:
குடும்பத்தினர்.

077 603 4660/ 077 317 8756


## ஒத்துமாறல்

மன்னார் வலயத்தில் மனைப்பொருளியல் பாடத்துறையில் கற்பிக்கும் ஆசிரியர் கிளிநொச்சி or முல்லைத்தீவு வலயத்திற்குள் ஒத்துமாற விரும்புகின்றார்.

077 038 1102

## வீடு விற்பனைக்கு

அவசர பணத் தேவைக்காக நந்தாவில் லேனில் 4¼ பரப்பில் அமைந்துள்ள மேல் மாடியுடன் கூடிய வீடு பெறுமதியிலும் குறைந்த விலைக்கு
விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

076 884 3551 (CS 20946)(11)

## திரையரங்க புலனாய்வு அதிகாரிகள்

இலங்கையின் முன்னணி தமிழ் திரைப்பட விநியோக நிறுவனத்திற்கு திரையரங்க புலனாய்வு அதிகாரிகள் தற்காலிக சேவைக்காக தேவைபடுகின்றனர்.

விண்ணப்பதாரிகள் மட்டக்களப்பு மற்றும் யாழ்ப்பாணம் பகுதிகளை சேர்ந்தவர்களாக இருத்தல் விரும்பத்தக்கது.

**தகைமைகள்:** G.C.E.A/L உயர்தரம் சித்தியடைந்திருத்தல்.


விண்ணப்பங்களை email மூலமாக அல்லது தபால் மூலமாக அனுப்பவும்.

**Cinema Entertainments (Pvt) Ltd.**
No.08, Sir Chithampalam A.Gardner Road,
Colombo-02.
email:cepl@sltnet.lk / anthony@ceplnet.com
T.P: 0112 478 752





## மரண அறிவித்தல்



### தம்பிஐயா இரத்தினசபாபதி

*(சின்னத்தம்பி)*

திருநெல்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிஐயா இரத்தினசபாபதி (சின்னத்தம்பி) நேற்று (01.11.2018) வியாழக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மகேஸ்வரி (கமலா) யின் அன்புக் கணவரும் நிரஞ்சனா, நிர்மலா, இரவீந்திரன் (ஆசிரிய ஆலோசகர் - யாழ். கல்வி வலயம்), நித்தியகௌரி (சிரேஷ்ட விரிவுரையாளர் - விலங்கியல்துறை, யாழ். பல்கலைக்கழகம்), விக்னேஸ்வரன் (ஆசிரியர் - யாழ். சென். ஜோண்ஸ் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஈஸ்வரதாசன் (முன்னாள் அதிபர் - ஸ்கந்தவ ரோதயா கல்லூரி), சிறீதரன் (லண்டன்), சத்தியா (ஆசிரியர் - அத்தியார் இந்துக் கல்லூரி), சிந்துஜா (பிரதேச வைத்திய அதிகாரி - அச்சுவேலி) ஆகியோரின் அன்பு மாமனாரும் மயூர்சன், சாயிக்கா, கரிசினி, கஜன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

93, பலாலி வீதி,
திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.
021 222 9875 (CS 18508/15)(18)

தகவல்:
குடும்பத்தினர்.

## பெரும்பான்மையை...

சூளுரைத்துள்ளார் மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில.

அவர் மேலும் தெரிவித்ததாவது, நாடாளுமன்றம் கூட்டப்பட்டிருப்பதால், பெரும்பான்மையை காண்பிப்பதற்கு சாத்தியம் இல்லை. அரச தலைவருக்கு தலைமை அமைச்சரை நீக்கும் அதிகாரம் உள்ளது. அல்லது அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்து, பெரும்பான்மை வாக்குகளின் மூலம் நிறைவேற்றி அகற்ற முடியும். ஆனால், அரசமைப்பில் எந்த இடத்திலும், நாடாளுமன்றப் பெரும்பான்மை நிரூபிக்கப்பட்டால் தான் தலைமை அமைச்சர் பதவியைப் பெற முடியும் என்று கூறப்படவில்லை - என்றார். (5)

## சு.க. அதிருப்தி...

எடுத்திருந்த அணிக்கு நேற்று அமைச்சுப் பதவி வழங்கப்பட்டுள்ளது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில், அரச தலைவர் செயலகத்தில் இந்தப் பதவியேற்பு இடம்பெற்றது.

**அமைச்சர்கள்**

நீர்ப்பாசனம், நீர்வளங்கள், மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சராக துமிந்த திசாநாயக்கவும், திறன் விருத்தி, தொழிற்பயிற்சி அமைச்சராக தயாசிறி ஜெயசேகரவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

**பிரதி அமைச்சர்கள்**

விவசாயப் பிரதி அமைச்சராக அங்கஜன் இராமநாதனும், தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சராக மனுச நாணயககாரவும், நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு பிரதி அமைச்சராக சார்தி துஷ்மந்தவும், துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை பிரதி அமைச்சராக நிசாந்த முத்துஹெட்டிகமகேவும், வடக்கு அபிவிருத்தி, மீள் குடியேற்ற மற்றும் மறுவாழ்வு பிரதி அமைச்சராக காதர் மஸ்தானும், வீடமைப்பு நகர அபிவிருத்தி பிரதி அமைச்சராக இந்திக பண்டாரநாயக்கவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

**இராஜாங்க அமைச்சர்கள்**

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சராக லக்ஸ்மன் செனிவிரத்னவும், இளைஞர், பெண்கள், சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சராக பியசேன கமகேவும், நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சராக எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாவும், கல்வி மற்றும் உயர்கல்வி இராஜாங்க அமைச்சராக மோகன் லால் கிரேரோ, மாகாணசபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத் துறை இராஜாங்க அமைச்சராக சிறியானி விஜேவிக்ரமவும் நியமிக்கப்பட்டுள்ளனர். (5)

## மைத்திரி...

தலைவர் அனுரகுமார, ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதாக குறிப்பிட்டு ஆட்சி அமைத்தவர்கள் இன்று நாட்டை காட்டிக் கொடுத்துள்ளார்கள். மைத்திரியின் செயற்பாடு 61 இலட்ச மக்களின் எதிர்பார்ப்பையும் புறம் தள்ளியுள்ளது. நாடாளுமன்றத்தில் பாரம்பரியமாக காணப்படுகின்ற சம்பிரதாய கோட்பாடுகள் அனைத்தும் இன்று அரசியல், அதுவும் தமது தனிப்பட்ட தேவைகளுக்காக மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தை அரச தலைவர் தனது தேவைகளுக்காக பிற்போட்டுள்ளமையானது அவரது சர்வாதிகார போக்கை வெளிப்படுத்துகின்றது. நாடாளுமன்றத்தை உடன் கூட்டுங்கள். பல விடயங்களை பகிரங்கப்படுத்துகின்றோம்.

இன்று கட்சி தாவல்கள் இடம் பெறுகின்றன. காலையில் ரணிலுக்கு ஆதரவு என்று குறிப்பிட்டுச் சொல்லி செல்கின்றவரகள் மாலையில் மகிந்த தலைமையில் முறையற்ற அமைச்சரவையில் பதவியேற்கின்றனர். ஒரு பிரதிநிதி 300 மில்லியன் ரூபாவைத் தாண்டி விலைபோயுள்ளார். மக்களின் வரிப்பணம் தவறாக பயன்படுத்தப்படுகின்றது. ஆனால் மக்களின் அபிவிருத்திக்கு மாத்திரம் போதிய நிதி இல்லை என்று குறிப்பிட்டவர்களிடம் இதற்கு மாத்திரம் இன்று பணம் இருக்கின்றதா? கட்சி தாவலில் ஈடுபட்டவர்கள் மக்களின் எதிர்காலங்களை கருத்திற் கொண்டு செயற்படவில்லை. தங்களின் அரசியல் இருப்பை தக்கவைத்துக் கொள்ளவே அரசியலில் செல்வாக்கு செலுத்துகின்றனர். இவர்களின் செயற்பாடு மிக கீழ்த்தரமானது. இதற்குப் பதிலாக சமூகத்தில் காணப்படுகின்ற தொழில்களை மேற்கொள்ளலாம். மக்களின் பிரதிநிதிகள் என்று குறிப்பிடும் எவ்விதமான தகுதிகளும் இவர்களுக்கு கிடையாது - என்றார். (5,10,31)

## ஏட்டிக்கு...

அமைச்சர் மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் எதிர்வரும் 5ஆம் திகதி, நாடாளுமன்றம் கூடும் என்று எதிர்பார்க்கப்படும் நாளில், கொழும்பில் மக்கள் சக்தி ஆர்ப்பாட்டமொன்றை மேற்கொள்ள சிறிலங்கா சுதந்திர கட்சியை உள்ளடக்கிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தீர்மானித்துள்ளது.

நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறும், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவே என்று அறிவிக்குமாறும் கடந்த 30ஆம் திகதி கொழும்பில் மாபெரும் போராட்டம் ஐக்கிய தேசியக் கட்சியினால் நடத்தப்பட்டிருந்தது. இந்த எழுச்சிப் போராட்டத்துக்குப் பதிலடியாக, சிறிலங்கா சுதந்திரக் கட்சியை உள்ளடக்கிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி போராடத் தீர்மானித்துள்ளது.

அரச தலைவர் இல்லத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சுதந்திரக் கட்சி அமைப்பாளர்களுடனான சந்திப்பில் இது தொடர்பாக ஆராயப்பட்டது. (ம.5,10)

## நானும்...

றேன். இவ்வாறு புதிய தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

கொழும்பில் பல்கலைக்கழக விரிவுரையாளர்களுடன் நேற்று நடத்திய சந்திப்பின்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வரவு - செலவுத் திட்டம் அல்லது வேறு ஏதாவது ஊடாகத் நான் தோற்கடிக்கப்பட்டால், அதுவே தேர்தலுக்கு செல்லக்கூடிய மிகவும் இலகுவான வழிமுறையாக இருக்கும்.

ஐக்கிய தேசியக் கட்சி விருப்பத்துடன் அதனைச் செய்தால் நானும் விருப்பத்துடன் ஒத்துழைப்பு வழங்குவேன். ஏனெனில், எனக்கும் தேர்தலே தேவைப்படுகின்றது. இந்த இரண்டிற்கும் தயாராகவே இருக்கின்றோம்.

நான் நேற்று எனது கொள்கை தொடர்பில் சிறு விளக்கமளித்தேன். நான் உரையாற்றி வெளியேறிய போது முச்சக்கரவண்டி சங்கங்கள் 5 ரூபாவைக் குறைத்தன. முறையற்ற விதத்தில் வரி அறவிடப்படுகின்றது. நான் அன்றும் கூறினேன். பூக்களைக் கசக்காது வண்டு தேன் எடுப்பதைப் போன்று வரி விதிக்க வேண்டும். இங்கு மலரை கசக்கியுள்ளார்கள். ஆகவே, வர்த்தகர்கள் வருவதில்லை - என்றார். (5,10)

## கோத்தா...

பேசி ஊடாகப் பேச்சு நடத்தியுள்ளார். அதே வேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை சில தினங்களுக்கு முன்னர் நேரில் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார். கோத்தபாய ரணில் இடையே பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் எந்தத் தகவலும் வெளியாகவில்லை.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச சில தினங்களுக்கு முன்னர் தனியாகச் சந்தித்துள்ளார். இதன்போது தற்போதைய அரசியல் நெருக்கடி மற்றும் ரணில் விக்கிரமசிங்கவின் நிலைப்பாடு ஆகியவற்றை சஜித் பிரேமதாச மைத்திரியிடம் எடுத்துக் கூறினார் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தகவல் தெரிவிக்கின்றன.

இதேவேளை, கொழும்பு அரசியலில் நேற்று எந்தவொரு கட்சித் தாவல்களுடம் இடம்பெறவில்லை. ஆனாலும், கட்சித் தாவுவதற்கான பேரம் பேச்சல்கள் இடம்பெற்றன. (5,10)

## தமிழர்களின்...

நோக்கங்களை முறியடிக்கவே இரு அரசியல் தலைவர்களும் ஒன்றிணைந்துள்ளனர் என்று தெரிவித்துள்ளார் மேல் மாகாண முதலமைச்சர் இசுரு தேவப்பிரிய.

அவரது பணியகத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாட்டு மக்களின் நெடுநாள் அரசியல் கனவை மைத்திரி நிறைவேற்றி வைத்துள்ளமையானது வரவேற்கத்தக்கது. கூட்டு அரசு என்று இரண்டு கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட்டாலும் ஐக்கிய தேசிய கட்சியின் நோக்கங்கள் நமது நாட்டுக்கு பொருத்தமற்றதாகவும் மேற்குலகத்தினருக்கு பொருத்தமானதாகவும் காணப்பட்டது. கடந்த 3 ஆண்டு காலமாக அரசு மேற்குலகத்தினரது விருப்பங்களை மாத்திரமே நிறைவேற்றியது. அரசின் அதிகாரங்களைப் பொறுத்தவரையில் ஐக்கிய தேசிய கட்சியினரே அதிகம் செல்வாக்குடையவர்களாக காணப்பட்டனர். பெயரளவில் மாத்திரமே சிறிலங்கா சுதந்திர கட்சியினர் அரசில் அங்கம் வகித்தனர். கொள்கை ரீதியில் இரண்டு தரப்பினருக்கும் பெரிய வேறுபாடுகள் காணப்பட்டன. அதன் உச்சக்கட்டமே கடந்த மாதம் 26ஆம் திகதி பெரிய மாற்றமாக வெளிப்பட்டது.

நாடு தொடர்ந்து பொருளாதாரம் உட்பட அனைத்து துறைகளிலும் பின்னடைவை எதிர்கொண்டு வந்தது. ஐக்கிய தேசிய கட்சியினரது செயற்பாடுகள் இவற்றை வலுப்படுத்துவதாக இருந்த்து. பன்னாட்டு ரீதியிலும் நாட்டின் தனித்துவம் மழுங்கடிக்கப்பட்;டது. இவ்வாறான விடயங்களுக்கு தீர்வு கண்டு நாட்டை ஐக்கியப்படுத்தவே முன்னாள் அரச தலைவரை நாங்கள் தலைமை அமைச்சராகத் தெரிவு செய்தோம். பல தீர்க்கமான கலந்துரையாடலின் பின்னரே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

நாட்டைப் பிளவுப்படுத்தும் விடயங்களுக்கு கடந்த காலங்களில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க துணை சென்றார். இதன் காரணமாக பல தேசிய வளங்கள் விற்கப்பட்டன. புலம்பெயர் தமிழர்களின் பிரதான நோக்கம் நாட்டுக்குள் மீண்டும் இனவிரோதங்களை ஏற்படுத்துவது. இவர்களின் நோக்கங்களை முறியடிக்கவே இரு தலைவர்களும் ஒன்றினைந்துள்ளனர். இனி எமது நாட்டு மக்களுக்காகவே அரசு செயற்படும். பன்னாட்டுச் சமூகத்தின் அழுத்தங்கள் எவ்விதத்திலும் சமூக அரசியல் விடயங்களில் செல்வாக்குச் செலுத்தாது என்றார். (5,10,61)

## ரணில்...

உள்நாட்டு தரப்புக்கள் மற்றும் ஊடகங்களை விடவும் பிரபாகரனுக்கு ஆதரவளித்தது பேர்ல் பன்னாட்டு சமூகம், பன்னாட்டு ஊடகங்கள் அவருக்கு ஆதரவு வெளியிடுகின்றன. இவ்வாறு கூறியுள்ளது பொதுபல சேனா அமைப்பு.

கொழும்பில் பொதுபலசேனா நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த சிங்கள ராவய அமைப்பின் பொதுச் செயலர் மாகல்கந்தே சுதந்த தேரர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாட்டில் கூட்டு அரசை அமைத்த பின்னர் 3 ஆண்டுகள் பொறுமை காத்த அரச தலைவர் தற்போது தலைமை அமைச்சரை மாற்றும் முடிவை எடுத்துள்ளார். நாங்களும் அரச தலைவரைப் பலமுறை அவதூறாகப் பேசியுள்ளோம். இப்படியான சிறந்த முடிவை மேற்கொள்ளும் ஆத்ம தைரியம் அவரிடம் உண்டு என்பதை நாம் அறிந்திருக்கவில்லை. கடந்த காலத்தில் நாட்டைச் சிறப்பாக நிர்வகித்த மகிந்த ராஜபக்சவால்தான் தற்போதுள்ள நிலையில் இருந்து நாட்டை மீளக் கட்டியெழுப்ப முடியும் என்று பொதுபல சேனா அமைப்பு நம்புகின்றது.

நாமல் குமார மூலமே மைத்திரி கொலைச் சதிமுயற்சி வெளிவந்தது. அதன் பின்னரே அவர் இத்தகையதொரு தீர்மானத்திற்கு வந்திருக்கின்றார். கொலைச்சதியுடன் சரத் பொன்சேகா தொடர்புபட்டுள்ளார் என்று நாமல்குமார குறிப்பிட்டுள்ளார். அவர் உடனடியாகக் கைது செய்யப்பட வேண்டும். இலங்கைப்பெற்றோலியக்கூட்டுத்தாபனத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். துப்பாக்கிச்சூட்டை நடத்துமாறு கூறிய அர்ஜுன ரணதுங்க இன்னமும் கைது செய்யப்படவில்லை.

நிறைவேற்றதிகாரமுடைய அரச தலைவர் முறைமை நீக்கப்படக் கூடாது. அதன்மூலமாகவே இன்று அரச தலைவரால் சிறந்ததொரு தீர்மானத்தை மேற்கொள்ள முடிந்துள்ளது - என்றார். (5)

## நாடாளுமன்றம்...

தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்ச, பல்கலைக் கழகங்களின் விரிவுரையாளர்களுடன் நேற்றுக் காலை சந்திப்பு நடத்தினார். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, எதிர்வரும் 5ஆம் திகதி திங்கட் கிழமை நாடாளுமன்றத்தைக் கூட்டுவதாக அறிவித்துள்ளார் என்று இதன்போது குறிப்பிட்டார். ரணில் விக்கிரமசிங்கவும் அதனை தனது கீச்சகத்தில் பதிவிட்டிருந்தார். தமது போராட்டத்துக்கு கிடைத்த வெற்றி என்றும் குறிப்பிட்டிருந்தார். ஆனால் நேற்று இரவு வரையில் நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கான எந்தவொரு அரசிதழ் அறிவிப்பும் வெளியாகவில்லை.

எதிர்வரும் 5ஆம் திகதி திங்கட் கிழமை அல்லது 7ஆம் திகதி புதன் கிழமை நாடாளுமன்றக் கூட்டப்படும் என்று கூறப்படுகின்றது.

**சந்தர்ப்பம் இல்லை**

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேமஜயந்த நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது, நாடாளுமன்ற கூட்டத்துக்கான தயார்படுத்தல்களை மேற்கொள்வதற்கு, கால அவகாசம் தேவை. திங்கட்கிழமை நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கு கால அவகாசம் போதாது. திங்கட்கிழமை நாடாளுமன்றம் கூட்டப்படவுள்ளதாக, வெளியாகிய செய்திகள் தவறாக வழிநடத்தப்படுகின்றவையாகும். எதிர்வரும் நவம்பர் 16ஆம் திகதி புதிய அரசு 2019 வரவு - செலவுத் திட்டத்துக்கான கணக்குகளைத் தாக்கல் செய்யும் - என்றார். (ம-5,10,61)

## மைத்திரி பதவி....

கொழும்பு, நவ. 2

எதிர்வரும் திங்கட்கிழமை நாடாளுமன்றம் கூட்டப் படும்போது, மைத்திரி -மகிந்த கூட்டுக்கு தக்க பதிலடி கொடுக்கப்படும். நாம் வெற்றி பெற்றதும், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கூறிய வாக்குறுதிக்கு அமைவாக பதவி துறப்பாராயின் உடனடியாக இடைக்கால அரச தலைவர் நியமிக்கப்படுவார். இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார். அலரிமாளிகையில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

**போராட்டத்துக்கு வெற்றி**

ஜனநாயகத்தை நிலைநாட்ட நாங்கள் முன்னெடுத்த போராட்டம் வெற்றிகண்டுள்ளது. திங்கட்கிழமை நாடாளுமன்றம் கூட்டப்படுகின்றது. நாம் பெரும்பான்மையை நிரூபிப்போம். மகிந்தவால் பெரும்பான்மையை நிரூபிக்க முடியாது என்பதாலேயே 16ஆம் திகதி வரை நாடாளுமன்றத்தை மைத்திரி ஒத்தி வைத்திருந்தார். இதனூடாக கடந்த 3 ஆண்டுகளாக பேணப்பட்டு வந்த அரசியல் கலாசாரத்துக்கு பங்கம் ஏற்படுத்தி நாட்டின் அமைதியையும் சீர்குலைத்துவிட்டார்.

ரணில் பெரும்பான்மையை நிரூபித்தால் பதவி விலகுவதாக மைத்திரி கூறியிருந்தார். அவர் பதவியில் தொடர்வதும் அதனைத் துறப்பதும் அவரின் தீர்மானம். அவர் பதவி விலகினால் அரசமைப்புக்கு அமைவாக நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைப் பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த ஒருவர் இடைக்கால அரச தலைவராக நியமிக்கப்படுவார். 19ஆவது திருத்தத்துக்கு அமைவாக அரச தலைவரால் நான்கரை ஆண்டுகளுக்கு நாடாளுமன்றத்தைக் கலைக்க முடியாது.

**அலரிமாளிகை முற்றுகை**

அலரிமாளிகையில் இருந்து ரணில் விக்கிரமசிங்கவை விரட்டியடிக்க புதிய பாதுகாப்புச் செயலர் ஏமசிறி பெர்ணான்டோவும், கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்துக்கு நியமிக்கப்பட்ட புதிய பொறுப்பதிகாரியும் பேச்சுகளை நடத்திவருகின்றனர். இரவு அல்லது நாளை இந்தச் சம்பவத்தை அரங்கேற்றப் பார்க்கின்றனர். மக்கள் பலத்தைக் கொண்டு நாங்கள் முறியடிப்போம்.

**மகிந்தவை சபாநாயகர் ஏற்கவில்லை**

மகிந்த ராஜபக்சவை தலைமை அமைச்சராக சபாநாயகர் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை திட்டவட்டமாக கூற முடியும்.

சபாநாயகர் செயலகத்தில் இதுபற்றி விசாரித்தோம். மகிந்த ராஜபக்சவுக்கு தலைமை அமைச்சர் ஆசனத்தை வழங்குவதற்கு தீர்மானிக்கப்படவில்லை என்று அங்குள்ள அதிகாரிகள், தெரிவித்தனர். மகிந்த ராஜபக்சவை தலைமை அமைச்சராக சபாநாயகர், ஏற்றுக்கொள்ளவில்லைஎன்பதைஎன்னால்தெளிவாகக் கூற முடியும் - என்றார். (5,10,31)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், நவ. 2

**சென்றலைட்ஸின் கூடைப்பந்தாட்டம்**


சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்படும் பொன் விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பற்றிசியன்ஸ் விளையாட்டுக் கழக ஏ அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் புளூஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென்றலைட்ஸ் சொக்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கே.கே.எஸ். விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 6 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஸ்கந்தா ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**துடுப்பாட்டத் தொடர்**

இலங்கைப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் 13 வயதுப் பிரிவினருக்கான மூன்றாம் பிரிவு அணிகளுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரின் ஆட்டமொன்று சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ளது. இதில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி மோதவுள்ளது. (ம-23)

# இலங்கைத் தேசிய அணிகளில் வடமாகாண வீரர்களுக்கு இடம்

## ஆளுநர் குரேயின் விருப்பம் இது



கரணவாய், நவ. 2

இலங்கைத் தேசிய அணிகளில் வடமாகாண வீரர்கள், வீராங்கனைகள் அதிகளவில் இடம்பிடிக்க வேண்டும் என்று தெரிவித்தார் வடமாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே.

வடமாராட்சி கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வர்ண இரவுகள் நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணக் குடாநாட்டிலே முன்னொரு காலத்தில் மாணவர்கள் எவ்வாறு கல்வி பயின்றார்கள் என்பதை எனது பெற்றோர் எனக்கு சிறு வயதில் சொல்லிக் கொடுத்திருக்கின்றார்கள்.

வீட்டில் வெளிச்சம் இல்லாத காலங்களில் வீதி விளக்குகளின் வெளிச்சத்திலிருந்து கல்வி கற்றார்கள் என்று என் பெற்றோர் சொன்னார்கள்.

அவ்வாறு கல்வி கற்றவர்கள்தான் தென்பகுதியில் பெரிய பதவிகளில் இருக்கின்றார்கள். கடினமான காலத்தில் இங்கே கல்வி முன்னேற்றமாக இருந்தது.

ஆனால் கடந்த சில காலங்களில் கல்வி பின்னோக்கிச் சென்றது. ஆனால் தற்போது மீண்டும் கொஞ்சம் கொஞ்சமாக கல்வி முன்னோக்கி வருகின்றது.

எதிர்வீரசிங்கம், ஆழிக்குமரன் ஆனந்தன் தற்போது ஆசிய வலைப்பந்தாட்டத்தைச் சுவீகரித்த தர்ஜினி போன்றவர்கள் வடமாகாணத்திலிருந்தே இந்த நாட்டுக்குப் பெருமை சேர்த்துத் தந்தார்கள். ஏனைய சில வடக்கு வீரர்களும் வீராங்கனைகளும் தேசிய மட்டத்தில் பல பதக்கங்களைப் பெற்றிருக்கின்றார்கள். அவர்களை மேலும் வளப்படுத்த வேண்டும்.

பன்னாட்டு அணிகளுடன் விளையாடக்கூடிய வகை யில் அவர்களுக்கான பயிற்சிகளை வழங்க வேண்டும்.

அரசியல் வாதிகள் மக்கள் மத்தியில் பிழையான கருத்துக்களை தெரிவித்து அவர்களை பிளவுபடுத்த நினைக்கின்றார்கள். தமது தலைமைத்துவத்தை தக்க வைக்க நினைக்கின்றார்கள். அவர்களின் பிழையான தகவல்களை கருத்தில் கொள்ளாது சரியானவற்றை இனங்கண்டு செயற்படுமாறு உங்கள் அனைவரிடத்திலும் கேட்டுக்கொள்கின்றேன் என்றார். (ம-108)

# கோலாகலமாக நடைபெற்று முடிந்த வடமராட்சி வர்ண இரவு நிகழ்வுகள்

கரணவாய், நவ. 2

வமர்ாட்சி கல்வி வலயத்தால் தேசிய மற்றும் மாகாண மட்டங்களில் சாதித்த வீரர், வீராங்கனைகளை பாராட்டி மதிப்புறுத்தும் வர்ண இரவு நிகழ்வுகன் நெல்லியடி மத்திய கல்லூரியில் நேற்றுமுன்தினம் சிறப்பாக நடைபெற்றன.

வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமாரின் தலைமையில் இந்த நிகழ்வுகள் நடைபெற்றன. நூற்றுக்கும் மேற்பட்ட வீரர், வீராங்கனைகள் இந்த நிகழ்வில் வைத்து மதிப்புறுத்தப்பட்டனர். வடமாகாண ஆளுநர் குரே முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார். (ம-108)




வடமராட்சி வர்ண இரவு நிகழ்வில்

# குரேயின் வருகைக்காக காத்திருந்த மாணவர்கள்

கரணவாய், நவ. 2

வடமாகாண ஆளுநரின் வருகைக்காக இரண்டு மணித்தியாலங்களுக்கு மேலாக மாலையும் கையுமாக வடமராட்சி மாணவர்களும், ஆசிரியர்களும் காத்திருந்தனர்.

வடமராட்சி கல்வி வலயம் நடத்திய விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளைப் பாராட்டி மதிப்புறுத்தும் வர்ண இரவுகள் நிகழ்வு நெல்லியடி மத்திய கல்லூரி மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன. இந்த நிகழ்வு பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகும் எனவும் மாணவர்கள், ஆசிரியர்களை 2.30 மணிக்கு விழா மண்டபத்துக்கு வருகைதருமாறும் விழா ஏற்பாட்டாளர்களால் அறிவிக்கப்பட்டிருந்தது. மாணவர்கள் குறித்த நேரத்துக்கு வருகை தந்தபோதிலும் ஆளுநர் குரே மாலை 5 மணிக்குப் பின்னர்தான் வருகைதந்தார். (ம-108)



# சென். பற்றிக்ஸ் சென். ஹென்றிஸ் நட்பு ரீதியிலான ஆட்டங்களின் முடிவு

யாழ்ப்பாணம், நவ. 2

இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி, சென். பற்றிக்ஸ் கல்லூரி ஆகியவற்றின் 13, 15, 17, 19 வயதுப்பிரிவு அணிகளுக்கு இடையிலான நட்பு ரீதியிலான ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்டப் பயிற்சி நிலைய மைதானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

13 வயதுப்பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் 2:0 என்ற கோல் கணக்கில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி வெற்றி பெற்றன.

15 வயதுப்பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

17 வயதுப்பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. 19 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

# டெல்லி அணியில் தவான்

ஐ.பி.எல். தொடரில் டெல்லி அணிக்காக விளையாட ஒப்பந்தமாகியுள்ளார் அதிரடி வீரர் தவான்.

கடந்த பல வருடங்களாக ஹைதராபாத் அணிக்காக விளையாடி வருகிறார் தவான். கடந்த பருவகாலத்தில் தவானுக்கு ஊதியமாக 5.2 கோடி ரூபாவை ஹைதராபாத் அணி கொடுத்திருந்தது. எனினும் இந்தத் தொகைக்கு கடும் அதிருப்தி தெரிவித்திருந்தார் தவான். இதையடுத்து அவரை அடுத்த பருவகாலத்துக்கு டெல்லி அணிக்கு விற்றுள்ளது ஹைதராபாத். டெல்லி அணிக்காக விளையாடிய விஜய் சங்கர், நதீம், அபிசேக் சர்மா ஆகியோரை கொள்வனது செய்துகொண்டு மூவருக்குப் பதிலாக தவானை விற்றுள்ளது ஹைதரபாத். (ம)



# திருக்குமரன் அசத்தலாட்டம்

யாழ்ப்பாணம், நவ. 2

யாழ்ப்பாணம் கால்பந்தாட்ட லீக்கின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் 4:2 என்ற கோல் கணக்கில் திருக்குமரன் அணி வெற்றிபெற்றது.

அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் நேற்றுமுன்தினம் மாலை 4.45 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் திருக்குமரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென். றொக்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. 4:2 என்ற கோல் கணக்கில் திருக்குமரன் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)

# டோனிக்கு 'கட்அவுட்'


இந்தியாவின் கேரள மாநிலத்தில் டோனியின் ரசிகர்கள் அவருக்கு 35 அடிகளில் 'கட்அவுட்' வைத்து பிரமிக்க வைத்துள்ளனர்.
மேற்கிந்தியத் தீவுகள் - இந்திய அணிகளுக்கு இடையிலான ஐந்தாவது ஒருநாள் ஆட்டம் கேரளாவில் நேற்று நடைபெற்றது. இந்த ஆட்டத்துக்காக இந்திய அணியினர் சென்றபோது டோனியின் ரசிகர்கள் அவருக்கு 35 அடிகள் உயரமான கட்அவுட்டை வைத்து பிரமிக்க வைத்துள்ளனர்.
ரி-20 ஆட்டங்களுக்கான இந்திய அணியில் இருந்து அண்மையில் டோனி நீக்கப்பட்டார்.
டோனியின் நீக்கத்துக்குக் கண்டனம் தெரிவித்தே அவருடைய ரசிகர்கள் நாடெங்கும் பரவலாக பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டு வரும் நிலையில் கேரளா ரசிகர்கள் 35 அடிகளில் அவருக்குக் கட்அவுட் வைத்துள்ளனர். (ம)




# கிண்ணம் வென்றது இந்தியா

## மூன்றரை மணிநேரத்தில் முடிந்தது ஆட்டம்

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக நேற்று நடைபெற்ற ஐந்தாவது ஒருநாள் ஆட்டத்தில் வெற்றிபெற்று தொடரை 3:1 என்ற அடிப்படையில் கைப்பற்றிக் கிண்ணம் வென்றது இந்திய அணி.
நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்ப வீரர்களாக கிரான் பவல், றோமன் பவல். முதல் பந்துப் பரிமாற்றத்திலேயே ஓட்டமெதையும் பெறாமல் ஆட்டமிழந்தார் கிரான் பவல். மூன்றாம் நிலை வீரரான சாய் ஹோப் ஓட்டமெதையும் பெறாமல் பும்ராவின் பந்துவீச்சில் போல்ட் முறையில் ஆட்மிழந்தார். இரண்டு ஓட்டங்களுக்கு இரண்டு இலக்குகளை இழந்தது தீவுகள். றொஸ்ரேன் பவல், சாமுவேல்ஸ் இணை அணியைத் தூக்கி நிறுத்தும் முயற்சியில் ஈடுபட்ட போதிலும் அதில் தோல்வி கண்டது. 16 ஓட்டங்களுடன் றொஸ்ரேன் பவலும், 24 ஓட்டங்களுடன் சாமுவேல்ஸூம் ஆட்டமிழந்தனர். மத்திய வரிசையில் அணித் தலைவர் கோல்டர் பெற்ற 25 ஓட்டங்களே அதிகபட்சம். முடிவில் 104 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்தது மேற்கிந்தியத் தீவுகள் அணி.
பந்துவீச்சில் ஜடேயா 4 இலக்குகளையும், பும்ரா, கலீல் அகமட் இருவரும் தலா 2 இலக்குகளையும், புவனேஸ்வர் குமார், குல்தீப் யாதவ் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினார்கள்.
பதிலுக்குக் களமிறங்கிய இந்திய அணிக்கு ஆரம்ப வீரரான தவான் வெறும் 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார். எனினும் அணித் தலைவர் கோக்லி, உப தலைவர் ரோகித் இருவரும் இணைந்து தொடர்ந்து சிறந்த ஆட்டத்தை வழங்கினார்கள். பிறிதொரு இலக்கை இழக்காமல் 50 ஓட்டங்களைத் தொட்டது இந்தியா. அடித்தாடி அரைச்சதம் கடந்தார் ரோகித். கோக்லியும் விடாப்பிடியாக விளையாடினார். 211 பந்துகள் மீதமிருக்க 9 இலக்குகளால் வென்றது இந்திய அணி. (ம)



# நெய்மர் விவகாரத்தில் முறைகேடு இருந்தால் பரிஸ் ஜேர்மன் நீக்கம்

## லா லிகா எச்சரிக்கை

நெய்மரைக் கொள்வனவு செய்த விவகாரத்தில் முறைகேடு இருந்திருந்தால் பரிஸ் செயின்ட் ஜேர்மன் அணி நீக்கப்படும் என்று தெரிவித்தார் ஸ்பெய்னின் லா லிகா நிர்வாகத்தின் தலைவர் சேவியர் டெபாஸ்.
பார்சிலோனா கழகத்துக்காக விளையாடிவந்த நெய்மர் கடந்த வருடம் பரிஸ் செயின்ட் ஜேர்மன் அணியால் வாங்கப்பட்டார். இவரின் பரிமாற்றத்துக்காக 222 மில்லியன் பவுண்டுகளை பரிஸ் ஜேர்மன் வழங்கியது.
இந்தப் பரிமாற்றத்தில் பரிஸ் ஜேர்மன் முறைகேடு கேடு செய்தது என்று தற்போது படிப்படியாக நிரூபிக்கப்பட்டு வருகிறது.
இந்த நிலையில் பரிஸ் செயின்ட் ஜேர்மன் முறையேடு செய்திருந்தால் ஐரோப்பியக் கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் தொடரில் இருந்து அந்த அணி தூக்கி எறியப்படும் என்று எச்சரித்துள்ளார் ஸ்பெய்னின் லா லிகா நிர்வாகத்தின் தலைவர் சேவியர் டெபாஸ். (ம)






# சொய்சாவுக்குத் தடை

இலங்கைக் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சு பயிற்சியாளர் நுவான் சொய்சா சூதாட்டக் குற்றச்சாட்டில் சிக்கியதை அடுத்து அவருக்குத் தற்காலிகத் தடை விதித்து நடவடிக்கை எடுத்துள்ளது பன்னாட்டுக் கிரிக்கெட் சபை.
இதுதொடர்பாக அவர் நேற்றிலிருந்து 14 நாள்களுக்குள் விளக்கம் அளிக்க ஐ.சி.சி. உத்தரவிட்டுள்ளது.
இலங்கை கிரிக்கெட் ஊழலில் சிக்கித் திணறி வருகிறது. ஏற்கனவே முன்னாள் தலைவரும் தேர்வுக்குழு தலைவருமான ஜெயசூரியா மீது ஊழல் குற்றச்சாட்டு கூறப்பட்டது. அவர் சூதாட்டம் தொடர்பான விசாரணைக்கு ஒத்துழைக்கவில்லை என்று கூறப்பட்டது.
இதேபோல் காலி மைதான ஆடுகள பராமரிப்பாளர் ஜெயநந்தா வர்ண வீரா ஊழல் தடுப்பு விசாரணைக்கு சரியாக ஒத்துழைக்காத காரணத்தால் 3 ஆண்டுகள் தடைவிதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் இலங்கை அணியின் பந்து வீச்சு பயிற்சியாளரும் ஊழல் குற்றச்சாட்டில் நீக்கம் செய்யப்பட்டிருப்பது அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. (ம)

# ரவி சாஸ்திரி பயிற்சியாளரானதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்த கங்குலி



இந்திய அணியின் தலைமைப் பயிற்சியாளராக ரவிசாஸ்திரி நியமிக்கப்பட்டமைக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்தார் இந்திய அணியின் முன்னாள் தலைவரும், பெங்கால் கிரிக்கெட் சங்கத்தின் தலைவருமான கங்குலி.
கிரிக்கெட் இணையத்தளம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
"ர்விசாஸ்திரி இந்திய அணியின் தலைமைப் பயிற்சியாளராகத் தேர்வான விஷயத்தில் என் அனுபவம் அதிர்ச்சியளிக்கக் கூடியதாகத்தான் இருந்தது. இந்த விடயத்தில் கிரிக்கெட் 'ஜாம்பவான்கள்' அனைவரும் தவறிழைத்து விட்டார்கள். ரவிசாஸ்திரியின் தெரிவு தவறு என்றே கருதுகிறேன்" என்று கங்குலி மேலும் தெரிவித்தார். (ம)

## வாடகைக்கு

நல்ல நிலையில் உள்ள Hiace வாகனம்
மாதாந்த, நாளாந்த வாடகைக்கு
குறைந்த விலையில் விடப்படும்.
தொடர்பு - 077 0261 966
(AKN 577/15/18)

## வீடு வாடகைக்கு உண்டு

இடம் : கொழும்புத்துறை வீதி,
பாண்டியன்தாழ்வு,
யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு:
076 785 1067
(CS 0020962)(4.17)

## NEC

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
யாழ். நகரின் முன்னணி பொருளியல் ஆசிரியர்
Mr. S. ஜெயக்குமார்
B.A(Hons), Eco.spl, M.A(Bsc), PGDE
புதிய பிரிவுகள் ஆரம்பம்
A/L 2019 பொதுவிலைமட்டம் Sat, Sun 11.00 - 12.00
A/L 2020 நெகிழ்ச்சிக் கோட்பாடு Sat, Sun 10.00 - 11.00
ஆரம்பம்:03.11.2018 சனி
வர்த்தகப்பிரிவு மாணவர்களுக்கான தவணைப் பரீட்சைக்கு முன்பான கருத்தரங்கு நடைபெற இருப்பதனால் உங்கள் அனுமதியினை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P. 077 469 6695

## போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்

SLPS
SLAS
SLEAS
சமய பாட ஆசிரியர்
உளவளத்துறை ஆசிரியர்
போட்டிப்பரீட்சைக்கான வகுப்புக்கள்
பிரதி சனி, ஞாயிறு
9.00 - 3.00 pm
நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்.நகர்.
T. P : 077 469 6695




# தங்கப்பந்து மெஸ்ஸிக்கு கிடைக்காது

## ரொனால்டோ சொல்கிறார்

இந்த வருடத்துக்கான தங்கப்பந்து விருது மெஸ்ஸிக்குக் கிடைக்க வாய்ப்பில்லை என்று தெரிவித்தார் போர்த்துக்கல் அணியின் தலைவரும், ஜுவென்டாஸ் அணியின் வீரருமான ரொனால்டோ.

கால்பந்து உலகின் மிக உயரிய விருதாக தங்கப்பந்து விருது உள்ளது. இந்த வருடத்துக்கான 'விருது எவருக்கு அறிவிக்கப்படும் என்பது தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பு உள்ளது. கடந்த சில வருடங்களாக மெஸ்ஸி, ரொனால்டோ இருவருமே மாறிமாறி இந்த விருதை வென்று வந்தனர். இந்த நிலையில் இந்த வருடத்துக்கான விருது மெஸ்ஸிக்குக் கிடைக்க வாய்ப்பில்லை என்றுள்ளார் ரொனால்டோ.

"இந்த வருடத்துக்கான தங்கப்பந்து விருது மெஸ்ஸிக்குக் கிடைக்க வாய்ப்பில்லை.

கிரீஸ்மன், மப்பே, மோட்ரிச், சாலா ஆகியோரில் ஒருவர் அந்த விருதைக் கைப்பற்றுவார்கள்" என்று ரொனால்டோ மேலும் தெரிவித்தார். (ம)


## அலுவலக வேலை வாய்ப்பு



யாழ் நகரில் இயங்கிவரும்
நிறுவனம் ஒன்றிற்காக
Billing Staff
தேவை (பெண்)
தகைமைகள்
1) G.C.E A/L சித்தி
2) நகர எல்லைக்குள் வசிப்பவராக இருக்க வேண்டும்
3) நீண்ட காலம் தொழில் புரியக்கூடியவராக இருத்தல் வேண்டும்
4) வயது 18-30 வரை
தொடர்புக்கு -
076-2534275 | 076-8961426

## அமெரிக்க லொத்தர் இலவச விசா

உடனடியாக பதிவு செய்யுங்கள்
இந்த வருடமே இறுதி வருடம்
முந்துங்கள் நாளையுடன் பதிவுகள் நிறைவடைகின்றன
கடைசி நேரத்தில்தான் எங்களுக்கு தெரிய வந்தது எங்களுக்கு அதிஸ்டம் உள்ளதோ இல்லையோ தெரியாது, ஆனால் எங்களுக்கான 2 வாய்ப்பினையும் பயன்படுத்துவதில் உறுதியாக இருந்தோம். இன்று அமெரிக்காவில் இருக்கின்றோம். வாய்ப்பளித்த V2 TRAVELSக்கு நன்றிகள்.
சாந்தகுமார் குடும்பம்
V2 TRAVELS
0768226243

## ஆங்கில வகுப்புக்கள்



Certificate in English
(For Beginners)
Duration: 05 Months (60 Hours)
உங்களுடையமுன்னேற்றத்திற்கு ஆங்கிலம் ஓர் தடையாக உள்ளதா? கவலையை விடுங்கள்!!
New Batch Starts on 10-11-2018 @ 9.00 am
HOTLINE 077 757 0038 / 071 777 3444
IIS CITY CAMPUS
#200, Sivan Pannai Road, Jaffna
TEL :- 021 222 8060 web : iis.edu.lk

## பணியாளர்கள் தேவை

யாழ் பரமேஸ்வரா சந்திக்கு அருகாமையில் இயங்கும் பிரபல சுப்பர்மார்கட்டுக்கு பின்வரும் பணியாளர்கள் உடன் தேவை.
- கணக்காளர் (பெண்கள் - முன் அனுபவம் உள்ளவர்கள்)
- காசாளர்கள் (ஆண்/ பெண்) கணினி அறிவு உள்ளவர்கள்
- களஞ்சிய பொறுப்பாளர் / உதவியாளர்கள் (ஆண்கள்)
- விற்பனை உதவியாளர்கள் (ஆண் / பெண்)

ஆர்வமுள்ளோர் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 4ஆம் திகதி சுயவிவரக் கோவையுடன் மு.ப 9.00 மணி முதல் பி.ப 4.00 மணிவரை நேரில் வரவும்.
Northway Family Mart
184, பலாலி வீதி, பரமேஸ்வரா சந்தி அருகாமையில்
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
021 222 6001/ 6002
(IN 8215) (4.17)

## RDB Walk 2018

நவம்பா 03
RDB வங்கி
20 மாவட்டங்கள் உள்ளடங்கும் வண்ணம் நடாத்தும்
மாபெரும் நடைபவனி
வியாபாரக்குறி மேம்பாட்டு நிகழ்ச்சிகளுடன்
சமூக பொறுப்பு நிகழ்ச்சிகள்
ප්‍රාදේශීය සංවර්ධන බැංකුව
பிரதேச அபிவிருத்தி வங்கி
RDB Regional Development Bank


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.11.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.